REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஒக்டோபர் 4 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 235 | Wednesday 04, October, 2023 | 20 பக்கங்கள் | 50/-

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை இம்மாதம் 15 இல்

தரம் ஐந்து (2023) மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் 2088 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

புலமைப் பரிசில் பரீட்சையின் நேர அட்டவணைப்படி வினாப்பத்திரம் ii பல் தேர்வு சுருக்க விடைகள் வழங்கும் 60 வினாக்கள். காலை 9.30 10:45 மணி வரை (ஒரு மணி நேரம் 15 நிமிடம்) வினா பத்திரம் i மூன்று பிரிவுகள் கொண்ட 40

06

### இலங்கையில் சமூக ஊடகங்களின் செயற்பாடு

# சர்வதேச சட்டத்துக்கு அமைவாகவா? உள்நாட்டு சட்டத்துக்கு அமைவாகவா?

### அனைத்து ஊடகங்களும் கலந்துரையாடி முடிவெடுக்க ஜனாதிபதி கோரிக்கை

சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதா? அல்லது நாட்டின் சட்டத்துக்கமைவாக செயற்படுவதா என்பது தொடர்பில் சமூக ஊடகங்கள் உட்பட இந்நாட்டின் அனைத்து ஊடகங்களும் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இலங்கையின் மூத்த ஊடகவியலாளர்களில் ஒருவரான 'திவயின' பத்திரிகையின் ஆரம்ப ஆசிரியரும் ஆசிரியர் பீடப் பணிப்பாளருமான எட்மண்ட் ரணசிங்க அவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் நேற்று (03) ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் ஊடகத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் படி ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

93 ஆவது வயதை அடைந்துள்ள ரணசிங்க அவர்களின் ஏழு தசாப்த கால ஊடகப் பணியை கௌரவிக்கும் வகையில் தொகுக்கப்பட்ட 'எட்மண்டின் பத்திரிகைப் புரட்சி' நூலும் இதன்போது வெளியிடப்பட்டது.

இந்நூலை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பேராசிரியர் சுனந்த மத்தும பண்டார, ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் டபிள்யூ. எம். கே. விஜே பண்டார, பிரதி ஊடகப் பணிப்பாளர் தீப்தி அதிகாரி ஆகியோர் தொகுத்துள்ளனர்.

இந்நாட்டில் ஊடகத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்திய முன்னோடியாக, மூத்த ஊடகவியலாளர் எட்மண்ட் ரணசிங்கவை குறிப்பிடலாமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஏழு தசாப்த கால ஊடகப் பணியில் ஈடுபட்ட எட்மண்ட் ரணசிங்கவின் ஊடகத் துறை 06

## 'எட்மண்டின் பத்திரிகைப் புரட்சி' புத்தகம் வெளியீடு



எட்மண்ட் ரணசிங்கவின் ஏழு தசாப்த கால ஊடகப் பணியைப் போற்றும் வகையில் தொகுக்கப்பட்ட 'எட்மண்டின் பத்திரிகைப் புரட்சி' புத்தகம் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டு, முதல் பிரதி எட்மண்ட் ரணசிங்கவுக்கு கையளித்த போது.

### 70% ஆக இருந்த பணவீக்கம் 19 மாதங்களில் ஒற்றை இலக்கத்தில்

# இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையை நோக்கி



### மீட்சிக்கான சாதகமான அறிகுறிகள் தென்படுவதாக உலக வங்கி தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதாரத்தில் ஸ்திரம் மற்றும் மீட்சிக்கான சாதக அறிகுறிகள் தென்படுவதாக உலக வங்கியின் பொருளாதார நிபுணர் ரிச்சர்ட் வோக்கர் தெரிவித்தார்.

70% ஆக இருந்த பணவீக்கம் சுமார் 19 மாதங்களுக்குப் பிறகு ஒற்றை இலக்க நிலைக்கு குறைந்துள்ளதென்றும், வட்டி வீதங்களும் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதிக சுற்றுலா, பணம் அனுப்புதல் மற்றும் மேம்பாட்டு பங்காளிகளிடமிருந்து வரும் வரவுகளுடன் மேலும் வெளிநாட்டு கையிருப்புகளும் பலப்படுத்தப்படும். "இது பயன்படுத்தக்கூடிய அதிகாரப்பூர்வ இருப்புக்களை உருவாக்க உதவியது. அந்நியச் செலாவணி வரவுகளின் அடிப்படையில் கணிசமான அதிகரிப்பைக் கண்டோம். இது இந்த ஆண்டின் முதல் பாதியில் மதிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளின் சமநிலைக்கு பங்களித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 2022ல் அமெரிக்க டொலருக்கு நிகராக 81 சதவீதம் மதிப்பிழந்த பிறகு, 2023 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை இலங்கை ரூபா (LKR) 11 சதவீதம் உயர்ந்துள்ளது. 06

## GCE A/L பரீட்சைக்கான திகதி இன்று அல்லது நாளை அறிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதி இன்று (04) அல்லது நாளை (05) அறிவிக்கப்படவுள்ளது. பரீட்சைகள் திணைக்களம் இதை,உத்தியோகபூர்வமாக வெளியிடும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் உதயண கிரிந்திகொட நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். 06

## சமூக ஊடகங்களை தணிக்கைக்கு உட்படுத்தல் அரசின் நோக்கமல்ல



### ஒழுங்குபடுத்துதலே எதிர்பார்ப்பு

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதே தவிர அவற்றை தணிக்கைக்கு உட்படுத்தவில்லையென வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (03) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை 06

### முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல்

## பொறுப்பை அரசாங்கத்தின் மீது சுமத்த முற்படக்கூடாது

(லோரன்ஸ் செல்வநாயகம்)



முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகலுக்கான பொறுப்பை அரசாங்கத்தின் மீது சுமத்த முற்பட வேண்டாமென நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிபதி ஒருவருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப் படுமானால், அச்சுறுத்தல் விடுத்தவர் யாராக 06

### பராமரிப்பு தொழில் துறையில்

## இலங்கை பணியாளர்களுக்கு பிரிட்டனில் வேலைவாய்ப்பு

### உயர்மட்டக்குழுவுடன் அமைச்சர் மனுஷ பேச்சு



இலங்கைப் பணியாளர்களுக்கு பிரிட்டனில் பராமரிப்பு தொழில் துறையில் வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக, அந்நாட்டின் உயர் மட்ட குழுவினருடன் தொழில் மற்றும் 06

## தவறாக செயற்படும் சமூக ஊடகங்களை நசுக்காது கட்டுப்படுத்துவது அவசியம்

### இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார

சமூக ஊடகங்களை நசுக்குவது முறையானதல்ல. இருப்பினும் சமூக ஊடகங்களை தவறாக பயன்படுத்துவதே இன்று எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை. எனவே, இதனை கட்டுப்படுத்த சில கட்டுப்பாடுகள் அவசியமாகும். அதுவே இந்த சட்டமூலத்தில் கொண்டு வரப்பட்டுள்ளதாக ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 06

## 50,000 வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இருவர் கைது



சுமார் 50,000 வெளிநாட்டு சிகரெட்டுகளை கடத்த முயன்ற இருவர், நேற்று முன்தினம் அதிகாலை சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து சுமார் 12.6 மில்லியன் ரூபா பெறுமதியான 53,200 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக 06

## நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையில் மேலதிக ஊழியர்கள்

### அரசியல் ரீதியான நியமனங்களே காரணம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் கடந்த காலங்கவில் அரசியல் ரீதியாக தேவைக்கு அதிகமான ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக, அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இச்சபைக்கு அரசியல் நியமனங்கள் மூலம் பெருமளவிலான ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், 06

### விரும்பியவாறு விலையை தீர்மானிக்க விடாமல்

## கோதுமை மாவுக்கு விலைச் சூத்திரம் அரசாங்க நிதி பற்றிய குழு பரிந்துரை



கோதுமை மாவின் விலையை ஒழுங்குபடுத்த விலைச் சூத்திரம் அவசியமென அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.த சில்வா தெரிவித்தார். கோதுமை மாவுக்கு விலைச் சூத்திரத்தைப் பேணினால், விரும்பியவாறு விலைகளைத் தீர்மானிப்பதற்கு முடியாமல் போகும் என்றும் தெரிவித்தார். நாட்டின் 06

### சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மூலம் விடயத்தில்

## சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக இந்தியாஸ் MP சபையில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தமக்கான சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் சிறப்புரிமை குழு மூலம் நீதியைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை மீறல் 06

### மூவர் படுகொலை மர்மம் நீடிக்கின்றது

## மலேசியாவில் தடுத்துவைக்கப்பட்ட இலங்கையர் மரணத்தில் சந்தேகம்

### விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பணிப்பு

மலேசிய பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டிருந்த இலங்கையர் ஒருவர் உயிரிழந்ததற்கான விசாரணைகளை முன்னெடுக்குமாறு கெப்பொங் பாராளுமன்ற உறுப்பினர் லிம் லிப் எங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலேசியாவின் ஜின்ஜாங் மத்திய சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 43 வயது இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இது குறித்த விசாரணை 06

### திருமலை, காலி, மாத்தறை மாவட்டங்களில்

## பிராந்திய சுனாமி ஒத்திகை பயிற்சி நிகழ்வுகள் இன்று

### பிரதி சபாநாயகர் பாராளுமன்றில் அறிவிப்பு



திருகோணமலை, காலி, மாத்தறை மாவட்டங்களில் பிராந்திய சுனாமி ஒத்திகை பயிற்சி இன்று (04) புதன்கிழமை நடைபெறவுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று (03) பாராளுமன்றத்தில் அறிவித்தார். கரையோர மக்களதும், 06

## 35 கிலோ ஹசீஸ் போதை சுங்க அதிகாரிகளால் மீட்பு

### இத்தாலியிலிருந்து அனுப்பப்பட்டதாக உறுதி



42 மில்லியன் ரூபா பெறுமதியான 35 கிலோ ஹசீஸ் போதைப்பொருள் உறுகொடவத்தை சுங்க வருமான கண்காணிப்பு பிரிவின் பரிசோதனை கூடத்தில், கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சிவலி அருக்கொட 06

## மேல் மாகாணத்தில் 4,000 பேருக்கு ஆசிரியர் நியமனம்

### பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்ப்பு

மேல் மாகாணத்துக்கு சுமார் 4,000 ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு வருவதாக மேல்மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக்க தெரிவித்தார். எதிர்காலத்தில் புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கான நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படுமெனவும் தற்போது 06

# நகர்வலம்



## களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளன மீலாத் விழா நிகழ்வு

### பிரதம அதிதியாக அமைச்சர் அலிசப்ரி பங்கேற்பு

**மொறட்டுவை மத்திய விசேட நிருபர்**

களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் மீலாத் விழா எதிர்வரும் சனிக்கிழமை (7) பாணந்துறை, அம்பலந்துவை இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் எம். எச்.எம். உவைன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

பாணந்துறை, அம்பலந்துவை ஜாமிஉல் ஹைறாத் அஹதிய்யா பாடசாலையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கௌரவ அதிதிகளாக புத்தசாசன, சமய மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக, பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், மர்ஜான் பளீல், மலேசிய நாட்டு உயர் ஸ்தானிகர் பத்திலி ஹிஷாம் ஆதம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மீலாத் விழாவை முன்னிட்டு களுத்துறை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெறவுள்ள இவ் விழாவில் விசேட அதிதிகளாக முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் இஸட். ஏ.எம். பைசால், களுத்துறை மாவட்ட செயலாளர் ஜீ.பி.ஜானக குமார, களுத்துறை வலய கல்விப் பணிப்பாளர் ஏ.யு.விக்ரம ஆராச்சி, பாணந்துறை பிரதேச செயலாளர் திருமதி கே. ஏ. ஜே.பி. கொடிதுவக்கு, அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளன தலைவர் எம். ஆர்.எம். சறூக் உட்பட பல பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

### அநுராதபுரம் மாவட்டத்தில்

## காட்டு யானை உள்ளிட்ட வன விலங்குகளால் ஏற்பட்ட சேதங்களுக்கு அரசினால் நஷ்டஈடு

### 1 கோடி 11 இலட்சம் ஒதுக்கீடு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**



அநுராதபுர மாவட்டத்தில் காட்டுயானை உள்ளிட்ட வன விலங்குகளால் ஏற்பட்ட சேதங்களுக்காக வேண்டி அரசாங்கத்தினால் ஒரு கோடியே 11 இலட்சத்திற்கும் அதிகமான நிதியினை நஷ்டஈடாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட நஷ்டஈட்டுக் குழுவின் தலைவியும் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபருமான (காணி) சந்யா என்.ஜீ. அபேசேகர தெரிவித்தார்.

மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நஷ்டஈட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். குழுவிற்கு கிடைக்கப்பெற்ற ஏழு உயிர்ச்சேதம் மற்றும் உடல் ரீதியான சேதம் ஐந்து உடைமைகள் சேதம் உட்பட்டவைகளுக்கு இதன்போது நஷ்டஈட்டுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. உடைமைகள் சேதத்திற்கு தற்சமயம் வழங்கப்படும் இரண்டு இலட்சம் ரூபாவினை பொருட்களின் அதிக விலையுடன் ஒப்பிடும் போது அத்தொகை போதுமானதாக இல்லாத காரணத்தினால் அத்தொகையினை அதிகரிப்பது குறித்து குழுவினர் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

இதன்போது குழுவின் செயலாளரான வனஜீவராசிகள் திணைக்கள அநுராதபுரம் அலுவலக பிரதி ஆணையாளர் டப்ளியு.எம்.கே.எஸ். சந்ரத்ன, அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஆர்.எம்.ஏ.சீ. ரத்நாயக்க, இடர் முகாமைத்துவ அநுராதபுரம் அலுவலக பிரதிப்பணிப்பாளர் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வெள்ளவத்தை ஜும்ஆ பள்ளிவாசலில்

## மீலாத் தின சமய நிகழ்வுகள் இன்று

**ருஸைக் பாரூக்**

கொழும்பு 06, வெள்ளவத்தை காஸிமிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் அனுசரணையில் கொழும்பு உம்மு ஸவாயா நிருவாகம் ஏற்பாடு செய்துள்ள மீலாதுன் நபி மஜ்லிஸ் இன்று (04) புதன்கிழமை இரவு வெள்ளவத்தை ஜும்ஆ மஸ்ஜிதில் கலீபதுல் குலபா மௌலவி முஹம்மத் ஸுஹூர் பாரி தலைமையில் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை உம்மு ஸவாயா சமய விவகார குழுத் தலைவர் பவ்ஸான் அன்வர் மேற்கொண்டு வருகிறார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இன்று (04) மாலை 5.30 மணிக்கு துணைத்தலைவர் த.ப. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் "நிகழ்நிலைக் காப்புச் சட்ட வரைபும் சமகால அரசியல் பொருளாதார நிலையும்" எனும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் அ. நிக்சன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## விமானப்படையின் ஏற்பாட்டில் உலக சிறுவர் தின நிகழ்வுகள்



"எல்லாவற்றையும் விட சிறுவர்கள் முக்கியமானவர்கள் " எனும் தொனிப்பொருளில் இலங்கை விமானப்படையின் சேவா வனிதா பிரிவின் ஏற்பாட்டில் 2023 ம் ஆண்டுக்கான உலக சிறுவர் தினம் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் பங்கேற்பில் பண்டாரகம " பேர்ல் பே " (Pearl Bay Water Park) ல் இடம்பெற்றது.

சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி இனோகா ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் 1000 சிறார்கள் பங்கேற்றதுடன் சிறுவர்களுக்கான பல வேடிக்கை விளையாட்டுக்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இலங்கை விமானப்படையின் சேவா வனிதா பிரிவினால் நடாத்தப்பட்ட " குவன் ரந்தரு சித்தம் 2023 " சித்திர போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன், இந் நிகழ்வில் பங்குபற்றிய ஒவ்வொரு சிறார்களுக்கு பெறுமதியான பரிசுப் பொதியும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் விமானப்படையின் தலைமை தளபதி மற்றும் பணிப்பாளர் சபை அதிகாரிகள் மற்றும் விமானப்படை சேவை வனிதா பிரிவின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



'Hassim Omar Foundation' ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக கடந்த சனிக்கிழமை (30) மாலை தெமடகொடையில் அமைந்துள்ள பொரளை அகதியா பாடசாலையின் அதிபர் சிப்லி ஹாசிமின் இல்ல முற்றத்தில் வைத்து வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

## குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

பல்வேறுபட்ட கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை மரதன்கடவல பொலிஸார் (02) கைது செய்துள்ளனர். மரதன்கடவல பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற பல்வேறுபட்ட கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் பல்வேறு கோணங்களிலும் தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். இதன்போது பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த தினம் மாலை மரதன்கடவல லபுனோருவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை மரதன்கடவல பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 28,33 வயதுடைய மரதன்கடவல லபுனோருவ மற்றும் பெரியகுளம் பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மரதன்கடவல பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தெஹிவளையில்; சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**





சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் மரீனா ஆப்தீன் பசீரின் ஏற்பாட்டில் தெஹிவளை பிரேசர் எவனியு பாக்கில் சிறுவர் மற்றும் முதியோர் நிகழ்வு வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதன்போது 5 தொடக்கம் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கும் 60 தொடக்கம் 80 வயதிற்கு இடைப்பட்ட முதியோருக்கும் சித்திரப்போட்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொட்டும் மழையினையும் பாராது பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது சித்திரப் போட்டியில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் இதன்போது வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் முன்னாள் மேயர் திருமதி சுனேத்ரா ரணசிங்க, மாநகர சபையின் பிரதி ஆணையாளர் திருமதி அனுஸா, முன்னாள் உறுப்பினர் குமார கோமஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.



ஈரான் கலாசார நிலையம் ஏற்பாட்டில் அரபு எழுத்தணி மற்றும் இலுமினேசன் கண்காட்சி திங்கட்கிழமை கொழும்பு பொது நூலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஈரான் கலாசார நிலைய கவுன்ஸிலர் கலாநிதி பஹ்மன் முஅஸ்ஸமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக பொதுநூலகத்தின் பிரதம நூலகர் திருமதி வர்னி கங்காபட ஆராச்சி கலந்து கொண்டு கண்காட்சி கூடத்தை திறந்து வைப்பதையும் கண்காட்சியை பார்வையிடுவதையும் அருகில் கலாசார நிலைய கவுன்ஸிலர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

(படம்: கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)

## களுத்துறை மாவட்டம் முழுவதும் அடைமழை; பல பகுதிகளில் வெள்ளம்

**களுத்துறை சுழற்சி நிருபர்**



களுத்துறை மாவட்டம் முழுவதும் கடந்த சில தினங்களாக தொடர்ந்து நிலவும் கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக பல பிரதான வீதிகளின் தாழ்நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியதால் அன்றாட போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

இதனடிப்படையில் வலலாவிட்ட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட வலலாவிட்ட, அவித்தாவ வீதியில் இஹலகந்த பகுதி, பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட பதுரெலிய, கலவான வீதியில் மிதலன பகுதி, பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட கொலமெதிரிய, மில்லனிய வீதியில் கெப்புவல பகுதி, அட்டுலுகம, கிம்மந்துடாவ வீதியில் கல்கேமண்டிய பகுதி, புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட புலத்சிங்கள, மோல்க்காவ வீதியில் நாளியத்த பகுதி, புலத்சிங்கள, மோல்க்காவ வீதியில் தம்பல பகுதி, கித்துள்கல்வில, கல்லலமுல்ல வீதியில் பறெய்தொல பகுதி, புலத்சிங்கள, இஹலவெல்கம வீதியில் கல்லுமலை பகுதி, தம்பல, மொறவக்க வீதியில் தெனிபிட்டிய பகுதி மற்றும் களுவல பகுதிகள் நீரில் மூழ்கி போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக களுத்துறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ காரியாலயம் தெரிவிக்கின்றது.

மேலும் வலலாவிட்ட, அகலவத்தை, புலத்சிங்கள மற்றும் மத்துகம உட்பட நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முதல் கட்ட மண் சரிவு எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட சில பகுதிகளில் இரண்டாம் கட்ட எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் மக்களை மிகவும் அவதானத்துடன் இருக்கும்படி தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.





கெப்பித்திக்கொல்லாவ கல்வி வலயத்திற்குட்பட்ட வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் க.பொ. த உயர்தர பரீட்சையில் தோற்றி மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசில் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் எம்.ஐ. நதீர் ஹம்சா தலைமையில் நடைபெற்றது. அதன் போது அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுடன் மாணவர்களை படத்தில் காணலாம்.

(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருக்கு 'தேச கௌரவ புத்ர' விருது

**கெக்கிராவ குறூப் நிருபர்**



அநுராதபுரம் மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் சஜீர் 'தேச கௌரவ புத்ர' விருது வழங்கி அண்மையில் கௌரவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய கலையரங்கத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் மகா சங்கத்தினரால் இவ்விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மல்வத்து பீட மகா நாயக்க அதி பூஜ்ய காலி கோரல, அதி பூஜ்ய மகா விகார வங்சிக சியாமபாளி வனவாய நிகாய அதி கௌரவ அனுநாயக்க, காலி கடவத் மற்றும் பெந்தர வல்லாவிட உப சங்க நாயக்க ஆகியோரது கையொப்பத்துடன் இந்த கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சுமார் 80 பேர் அளவில் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் மதிப்புக்குரிய மகா சங்கத்தினர், ஊடகவியலாளர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், கலைஞர்கள், சமூக சேவையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மக்கள் மீது வரிச் சுமையை மேலும் அதிகரிக்க முடியாது

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டின் தற்போதைய நிலையில் இதைவிட அதிகமாக வரிச் சுமையை மக்கள் மீது சுமத்த முடியாதென சர்வதேச நாணய நிதியத்திற்கு அரசாங்கம் அறிவித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரி வருமானத்தை அதிகரிப்பதற்கான இலக்குகள் அவசியம் என்றும், இதற்காக தற்போதுள்ள வரிகளை மேலும் அதிகரிக்க வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர், அந்த வேண்டுகோளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துமாறு



நாணய நிதியத்திடம் அரசாங்கம் கேட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஆகியன மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளை அரசாங்கம் முறையாக நிறைவேற்றாத காரணத்தால், இரண்டாம் தவணை நிதியை வழங்க

06

## சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

# பல பொருட்களின் வரிகளை மேலும் குறைக்க தீர்மானம்

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், மேலும் பல பொருட்களுக்கான வரிகளைக் குறைப்பதற்கு அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

2023ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதிய 2338/54 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை பற்றிக் கலந்துரையாடும்போதே, இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய 15% ஆக இருந்த வரி விகிதத்தை 5% ஆகக் குறைப்பதற்கு முன்மொழியப்பட்டது.

இதற்கு அனுமதி வழங்கிய குழு, இவ்வர்த்தக ஒப்பந்தத்தால் இலங்கைக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தது. இதற்குப் பதிலளித்த அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் சாத்தியக்கூற்று ஆய்வு நடத்தப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

இவ்விடயத்தில் தனது அதிருப்தியை வெளிப்படுத்திய குழுவின் தலைவர், இந்த ஒப்பந்தம் குறித்த தர்க்கரீதியான விடயங்களை முன்வைத்து,06 வாரங்களுக்குள் குழுவிடம் அறிக்கை

06


சுனாமி அனர்த்தத்தின் போது பொது மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்காக இந்து சமுத்திர வலயத்தின் நாடுகள் ஒன்றிணைந்து இந்து சமுத்திர வலய சுனாமி அனர்த்த எச்சரிக்கை முறைமையினால் (Indian Ocean Tsunami Warning System - IOTWS) வலயத்திலுள்ள நாடுகளில் சுனாமி அனர்த்த முன்னேற்பாட்டை மேம்படுத்துவதற்காக வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் இந்து சமுத்திர வலய சுனாமி அனர்த்த முன்னோடி நிகழ்ச்சித்திட்டம். 2023

சுனாமி அனர்த்தத்தின்போது பாதுகாப்பை உறுதி செய்துகொள்வதற்காக ஒழுங்கு செய்யப்படும்
“சுனாமி அனர்த்த ஒத்திகை நிகழ்ச்சித்திட்டம்”
2023 ஒக்டோபர் 04
முற்பகல் 9.30 முதல் 11.30 மணி வரை
திருகோணமலை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களை முன்னிலைப்படுத்தி நடாத்தப்படும்

IOWave23



சுனாமி இடரிலிருந்து மீள்வதற்கு – பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றவும்

சுனாமி இடருக்கு முன்
- உங்களது வீடு, வேலை செய்யுமிடம், அடிக்கடி சென்று வரும் இடங்கள் சுனாமி இடர் வலயத்தில் அமைந்துள்ளதா என விசாரித்துப் பார்த்தல்.
- வெளியேறும் வழிகள், மிகவும் அண்மையிலுள்ள பாதுகாப்பான இடத்தை அறிந்துகொண்டு வெளியேறுவதற்கான திட்டத்தை வகுத்தல்.
- அனர்த்த திட்டமொன்றைப் பயன்படுத்தி பாதுகாப்பாக வெளியேறுவதற்கு பாதுகாப்பான வழியை அறிந்துகொள்ளல்.
- சுனாமி அனர்த்த ஒத்திகை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொள்ளல். சிறுவர்களுக்கு சுனாமி அனர்த்த இடர் தொடர்பில் விழிப்புணர்வை ஊட்டுதல்
- சுனாமி முகாமைத்துவ நிலையம் வழங்கும் அனர்த்த இடர் அறிவிப்பு தொடர்பில் கவனத்தை செலுத்துதல்
- நீங்கள் சுனாமி இடர் சகிதமான பிரதேசத்தில் வசிப்பவரானால் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பிரகாரம் அனர்த்த பொதி மற்றும் குடும்பத்தின் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய அட்டையொன்றை (Tsunami Card) தயாரித்து வைத்துக்கொள்ளல்.
- மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் முன்னோடி விழிப்புணர்வு தொடர்பாடல் வலையமைப்புடன் (WhatsApps, Twitter, Facebook) இணைந்துகொள்ளல்
- இடர் முகாமைத்துவ நிலையத்தின் 117 எனும் அவசர தொடர்பு இலக்கத்தின் ஊடாக உங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

சுனாமி அனர்த்தம் தொடர்பான ஆரம்ப அறிவிப்பின் பின்
- தொலைபேசி குறுஞ்செய்தி, தொலைக்காட்சி அல்லது வானொலி செய்திகளை கவனமாகக் கேட்டு தேவையான தகவல்களை அறிந்துகொள்ளல்.
- எச்சரிக்கை சமிக்ஞை, சைரன் ஒலி என்பவற்றை செவிமடுத்து இடர் தொடர்பில் கவனத்தைச் செலுத்துதல்
- சுனாமி எச்சரிக்கை சமிக்ஞையைக் கேட்டவுடன் உங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுதல்
- சுனாமி அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு முன், பாரிய நில நடுக்கம் அல்லது நீண்ட காலமாக அதிர்வுகள் ஏற்படுதல் என்பவற்றை அறிந்துகொள்ளலாம். அல்லாவிட்டால் கடல் அலைகள் உடனடியாக உயரெழுதல் அல்லது வற்றிப் போதல் என்பவற்றை அவதானிக்கலாம்.
- தொலைபேசி / மேலதிக சக்தி வங்கி (Power Bank) என்பவற்றுக்கு மீள் சக்தியை நிரப்பிக்கொள்ளல்.

சுனாமி எச்சரிக்கை சமிக்ஞை கிடைத்ததன் பின்
- சுனாமி எச்சரிக்கை சமிஞ்ஞையைக் கேட்டவுடன் உங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுதல்
- நீங்கள் சுனாமி இடர் சகிதமான பிரதேசத்தில் வசிப்பவரானால் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பிரகாரம் அனர்த்த பொதி மற்றும் குடும்பத்தின் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய அட்டையொன்றை (Tsunami Card) எடுத்துச் செல்லுங்கள்
- முதலாவது சுனாமி அலையின் பின் மீண்டும் சுனாமி அலை வரலாம் என்பதால் முதலாவது அலையடித்ததன் பின் கடற்கரைக்குச் செல்லாமல் இருத்தல் மற்றும் நீங்கள் இருக்கும் பாதுகாப்பான இடத்திலேயே இருத்தல்.
- நீங்கள் சுனாமி அலையில் அகப்பட்டு இருந்தால் மிதந்து கொண்டிருத்தல் மற்றும் அடித்துச் செல்லும் அபாயகரமான பொருள்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளல் தொடர்பாக கவனத்தைச் செலுத்துதல்
- நீங்கள் ஆழ்கடலில் படகொன்றில் இருந்தால் மீண்டும் கரைக்கு வர முயற்சிக்காமல் அவ்விடத்திலேயே இருத்தல்
- கரைக்கு அண்மையில் ஆழமற்ற கடல் அல்லது துறைமுகமொன்றில் இருந்தால் கூடிய விரைவில் ஆழ்கடலை நோக்கி படகைச் செலுத்துதல் மிகவும் உசிதமானது. அவ்வாறு செய்ய முடியாவிட்டால் கூடிய விரைவில் கரைக்கு வந்து பாதுகாப்பான இடத்தைச் நோக்கிச் செல்லுதல்.

சுனாமியின் பின்
- உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தவர்களுக்கு உடல் ரீதியான விபத்து ஏற்பட்டிருந்தால் தேவையான முதலுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
- உதவிகள் தேவையான நபர்களுக்கு உதவுதல்.
- அவசர தேவைக்காக மட்டும் தொலைபேசியைப் பயன்படுத்துதல்.
- நீங்கள் மீண்டும் வீட்டிற்கு அல்லது கட்டிமொன்றிற்குள் நுழைவதாயிருந்தால் மதில், கதவுகள் மற்றும் மின்னுயர்த்தி என்பவற்றைப் பரீட்சித்துப் பார்த்து உங்களுக்கு ஆபத்தில்லை என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.
- தொலைத்தொடர்பாடல் வழிகளில் இடையூறுகள் ஏற்படலாம் என்பதால் உத்தியோகபூர்வ இணையதளம் அல்லது உத்தியோகபூர்வ சமூக ஊடகங்களின் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
- சுனாமி அனர்த்த நிலைமை தணிந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் உறுதி செய்யும் வரை நீங்கள் இருக்கும் இடத்திலேயே பாதுகாப்பாக இருக்கவும்.
- தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவியை வழங்குதல்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர தொடர்பிலக்கம் 117

DEWN Google Play

ஏற்பாடு பாதுகாப்பு அமைச்சு அனர்த்த முகாமைத்துவ நிலையம்
அனுசரணை World Vision ChildFund World Food Programme unicef
www.facebook.com/dmc.gov.lk www.dmc.gov.lk twitter.com/dmc_lk

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 18ஆம் நாள் புதன்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 18

### குறள் தரும் சிந்தனை



ஈட்டம் இவறி இசைவேண்டா வாடவர்
தோற்றம் நிலக்குப் பொறை

புகழை விரும்பாமல் பொருள் சேர்ப்பது ஒன்றிலேயே குறியாக இருப்பவர்கள் பிறந்து வாழ்வதே இந்தப் பூமிக்குப் பெரும் சுமையாகும்.

# அனர்த்தங்களை தவிர்க்க விழிப்புணர்வு அவசியம்

நாட்டில் சீரற்ற காலநிலை நீடித்து வருகின்றது. மழையுடன் கூடிய இந்தக் காலநிலை அடுத்துவரும் சில தினங்களுக்கு நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்திருக்கிறது.

அதேநேரம் கடந்த சில தினங்களாக கனத்த மழை அடிக்கடி பெய்து வருகின்றது. இம்மழை காரணமாக குளங்கள், நீரந்து பிரதேசங்கள், நீர்த்தேக்கங்கள் என்பன நிரம்பியுள்ளன.

சில நீர்த்தேக்கங்களின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. களுகங்கை, நில்வளா கங்கை, அத்தனகலு ஓயா, மகுரு கங்கை மற்றும் உடவளவ நீர்த்தேக்கம் என்பவற்றின் நீர்மட்டம் பெரிதும் அதிகரித்துள்ளது. அதன் விளைவாக இக்கங்கைகளின் இருமருங்குகளிலும் காணப்படும் தாழ்நிலங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தென்மாகாணத்தின் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் பல பிரதேசங்களது தாழ்நிலங்களில் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது என்று பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். இதன் விளைவாக பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. வீதிப் போக்குவரத்தும் சில வீதிகளில் ஸ்தம்பிதமடைந்துள்ளன. அத்தோடு திக்வெல்ல மின்ஹாத் தேசிய பாடசாலை கட்டடங்களுக்கு உள்ளேயும் நேற்று முன்தினம் வெள்ள நீர் புகுந்திருந்தன.

அதன் காரணத்தினால் பாடசாலைக்கு மாணவர்களின் வருகை பெரிதும் வீழச்சியடைந்திருந்ததோடு கற்பித்தல் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டிருந்ததாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவை இவ்வாறிருக்க, இந்த சீரற்ற காலநிலையினால் மலையகத்திலும் மலை சார்ந்த சில பிரதேசங்களிலும் மண்சரிவு அச்சுறுத்தல்களும் ஏற்பட்டுள்ளன. இந்த நிலலையில் கேகாலை சென் ஜோசப் மகளிர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மண்சரிவு அச்சுறுத்தல் காரணமாக மறு அறிவித்தல் வரை நேற்றுமுன்தினம் தற்காலிகமாக மூடப்பட்டது.

அத்தோடு மலையகத்தின் வேறு சில பிரதேசங்களிலும் சிறுசிறு மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. அதன் காரணத்தினால் கொழும்பு, களுத்துறை, காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அச்சுறுத்தல் முன்னெச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்திருக்கின்றது. இந்த முன்னெச்சரிக்கை குறித்து கவனயீனமாக நடந்து கொள்வதை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அந்த நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது. அதனால் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழ்பவர்கள் மண்சரிவுக்கான முன்னறிகுறிகள் குறித்து கூடுதல் கவனத்துடன் செயற்படத் தவறக்கூடாது.

அதேநேரம் நீர்மட்டம் உயர்ந்த வண்ணமுள்ள கங்கைகள், ஆறுகளுக்கு அருகில் வசிக்கும் மக்களும் விழிப்பாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையம், திடீரென வெள்ளநிலை ஏற்படுமாயின் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் வெள்ள நிலை குறித்து தமக்கு அறியத் தருமாறும் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வாறான சூழலில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களை சந்தித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், தற்போது தொடரும் சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் மீட்பு மற்றும் நிவாரணக் குழுக்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனுக்குடன் நிவாரணங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவசர நிலைமைகளின் போது செயற்படக்கூடிய வகையில் 25 மாவட்டங்களுக்கும் நிதியொதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் மக்கள் நலன்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தி செயற்பட்டு வருவதையே இராஜாங்க அமைச்சரின் இந்த அறிவிப்புக்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தற்போதைய சீரற்ற காலநிலையினால் 09 மாவட்டங்களில் 112 பிரதேச செயலகப் பிரிவுகளில் 7694 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 617 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் குறித்து முன்னவதானத்துடன் இருப்பதோடு அவற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் சேதங்களையும் குறைத்துத் தவிர்த்துக் கொள்வதில் மக்களும் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் சீரற்ற காலநிலையின் அச்சுறுத்தலைத் தவிர்த்துக்கொள்ளலாம். அதுவே துறைசார் நிபுணர்களின் கருத்தும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# சிறுவர், முதியோர் உரிமைகளை வலியுறுத்தி ஒக்டோபர் மாதத்தை விழிப்புணர்வு காலமாக அனுஷ்டிக்க வேண்டும்!

ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினமும், சர்வதேச முதியோர் தினமும் ஆகும். சிறுவர்களும், முதியோர்களும் ஒரு சமூகத்தின் பிரதான இரு தூண்களாகும். ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் பிரகடனங்கள் அடிப்படையில் 1954 ஆம் ஆண்டு முதல் சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று 1991 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச முதியோர் தினம் பின்பற்றப்படுகிறது.

ஒவ்வொரு மனிதரதும் வாழ்வில் சிறுபராயம் என்பது மிகவும் இனிமையான காலமாகும். முதுமைக் காலம் என்பதும் வாழ்வின் பல்வேறு பரிமாணங்களைக் கடந்த அனுபவ முதிர்ச்சியைப் பெற்ற ஓய்வுநிலைக் காலமாகும்.

சிறுவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சமூக அச்சாணியாக இருப்பவர்கள். எனவே சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக அதிக ஆர்வம் செலுத்த வேண்டியது பெரியோர்களின் தலையாய கடமையாகும்.

சிறுவர்கள் சகல உரிமைகளோடும் வாழ்வதற்கும், வளர்ச்சி பெறுவதற்குமான உரிமைகளைப் பெற்றுள்ளனர். பிறப்பின் போதே பெற்றோர் மூலமாக சட்டரீதியாக பெயரொன்றையும் இனஅடையாளத்தையும் பெற்றுக் கொள்ளும் உரிமைகளுக்கு சட்ட அங்கீகாரம் உள்ளது. பெற்றோர்களை தெரிந்து கொள்வதற்கும் அவர்களது பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை மற்றும் பெற்றோரிடமிருந்து தனிமைப்படுத்தப்படாது இருப்பதற்கான உரிமையும் முக்கியமானதாகும்.

சிறுவர்களினதும் முதியோர்களினதும் உரிமைகள், நலன்களில் அக்கறை கொண்டு அவர்களது பாதுகாப்பு வாழ்வியல் விடயங்களை முதன்மைப்படுத்தும் முகமாக புரிந்துணர்வையும், பொதுநிலைப்பாட்டையும் வலியுறுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்று உலக மக்கள் சனத்தொகையில் மூன்றிலொரு பகுதியினர் சிறுவர்களாவர். அதேபோன்று உலகளாவிய ரீதியில் 60 கோடி முதியவர்கள் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் சுமார் 22 இலட்சம் முதியோர் உள்ளனர். மொத்த சனத்தொகையில் இது 13 சதவீதமாகும்.

பொருளாதார சுரண்டல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் உரிமை, பாலியல் வல்லுறவுகளில் இருந்து பாதுகாக்கும் உரிமை, சித்திரவதைகள் குரூரமாக நடத்தப்படுதல் போன்ற தண்டனைகளில் இருந்து தம்மை தவிர்த்துக் கொள்ளும் உரிமை மற்றும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்புக்குமான அனைத்து உரிமைகளும் சிறுவர்களுக்கு உரித்தானவையாகும்.



சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களை தவறாக வழிநடத்தும் அனைத்துவித தவறுகளையும் உள்ளடக்குகின்றது. சிறுவர் மீதான துஷ்பிரயோகம் என்ற விடயமானது இன்று ஒட்டுமொத்த உலகையும் உலுக்கிக் கொண்டிருக்கும் பேராபத்தாக உள்ளது. சமூக கட்டமைப்புகள் அடிப்படையில் ஆண் பிள்ளைகளாலும், பெண் பிள்ளைகளானாலும் சரி இன்று பிள்ளைகளை கொண்டுள்ள பெற்றோர் தங்களது பிள்ளைகள் வளர வளர வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ்வதாகவே உணர்கின்றனர்.

அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகள் காரணமாக குடும்பங்கள் ரீதியாகவும் சமூகங்கள் ரீதியாகவும் ஏற்படும் சூழ்நிலைகளால் சிறுவர்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் அதிகமாக பாதிப்புக்குள்ளாகின்றனர். விபரமறியாத சிறுவர் சிறுமியரை வயதில் மூத்தவர்கள் தமது பாலியல் வக்கிரங்களுக்கு இரையாக்கும் சம்பவங்கள் தொடர்கின்றன. சிறுவர்களை வேலைக்கமர்த்தும் அநேகமான சந்தர்ப்பங்களில் அவர்களது உரிமைகளும் மறுக்கப்படுகின்றமை வேதனைக்குரியது மட்டுமல்லாமல், அது தண்டனைக்குரிய பாரிய குற்றமாகும்.

நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள், ஆபாச மற்றும் கொடூர காட்சிகளைக் கொண்ட சினிமா, போதை மற்றும் புகைத்தல், ஏனைய சமூகக் காரணிகள் காரணமாக சிறுவர்கள் பல்வேறு பாதிப்புகளையும் சவால்களையும் எதிர்நோக்குகின்றனர்.

பொலிஸ்துறை, நீதிமன்றம் சார்ந்த அமைப்புகள் சிறுவர் நாலன்கள் தொடர்பான பாதுகாப்பு அதிகார சபை, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் எவ்வளவுதான் சட்டதிட்டங்களை சுற்றுநிரூபங்களை, அறிவிப்புகளை பகிரங்கப்படுத்துகின்ற போதிலும் தெருவோரங்களில் பிச்சையெடுப்பதற்காக பயன்படுத்தப்படும் சிறுவர்களை பார்க்கும் போது வேதனையளிக்கிறது.

சிறுவர் பாதுகாப்பு என்பது ஒரு நாகரீகத்தின் இறுதி அளவீடு என்பதால் தற்போதைய சிறுவர் பாதுகாப்பு நெருக்கடிகளுக்கு தீர்வுகாணும் முகமாக தேவையான சட்ட ரீதியான சீர்திருத்தங்களை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். வெறும் வார்த்தை ஜாலங்களுக்கு பதிலாக ஆக்கப்பூர்வமான திட்டங்கள் தேவைப்படுகிறது.

சிறுவர்கள் உடல்ரீதியாக, பாலியல்ரீதியாக, உளரீதியாகவும் துன்புறுத்தப்படுவதை முழுமையாக தடுப்பதற்காக ஐ.நா. சிறுவர் உரிமை சாசனத்தின் புதிய வழிகாட்டல்கள் அடிப்படையில் தண்டனைச்சட்டக் கோவை பலப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தை வலியுறுத்த வேண்டும்.

சிறுவர்களால் தங்களை வெளிப்படுத்த முடிவதில்லை. நலிவுற்றவர்களாக மற்றும் தீங்கு விளைவிக்கப்படும் அல்லது சுரண்டப்படும் அபாயத்தில் உள்ளவர்களை மீட்க வேண்டும். கட்டாய வேலைக் கமர்த்தல், உடல், பாலியல் மற்றும் உளஉணர்ச்சி ரீதியான பாதிப்புகளுக்கு எதிராக அதிகார பதவிகளில் இருப்பவர்கள், பெற்றோர், ஆசிரியர், மதத்தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், ஊடகவியலாளர்கள் இணைந்து பணியாற்ற வேண்டும்.

அதேசமயம் முதியோர் விடயத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு, உணவு, உறைவிடம் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சமூகம் மற்றும் சட்டரீதியான பாதுகாப்பளித்தல், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை முதியோர் அனுபவிக்க வழிவகை செய்தல் போன்ற முதியோர் நலன்கள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தப்படுவதும் அவசியமாகின்றது.

தெய்வானை சிவலிங்கம்...
ஜே.பி, மனிதவுரிமை ஆர்வலர்

# ஹெம்மாதகம பெரியபள்ளிவாசல் நிர்வாக ஏற்பாட்டில் மீலாத் விழா

ஹெம்மாதகம, பெரியபள்ளிவாசல் நிர்வாகமும் அதன் கிளை நிறுவனங்களும் ஏற்பாடு செய்திருந்த மீலாத் விழாவும், மாற்று மதத்தவர்களுக்கு அறிமுகம் செய்யும் நிகழ்வும் சல்மா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றன.

ஹெம்மாதகம பிரதேசத்தில் உள்ள பௌத்த விஹாராதிபதிகள், இந்துக்கோயில் குருமார், பிரதேச சிங்களப் பாடசாலை அதிபர்கள், உயர்வகுப்பு மாணவ மாணவிகள் மற்றும் பௌத்த மதத்தலைவர்கள், சிவில் சமூக நிறுவனங்களின் உறுப்பினர்கள், பொலிஸ் உயர்அதிகாரிகள், பிரதேசத்தின் ஏனைய பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் தேர்ந்தெடுத்த பிரமுகர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

பிரதம அதிதியாக சப்ரகமுவ மாகாண ஆளுநரின் செயலாளர் கலந்து கொண்டதோடு, கௌரவ அதிதியாக கேகாலை மாவட்ட செயலாளர் ரஞ்சன ஜயசிங்ஹவும், விஷேட அதிதியாக மாவனல்லை பிரதேச செயலாளர் விஜானி ரத்னசேகரவும், விஷேட பேச்சாளர்களாக அஷ்ஷெய்க் அம்ஹர் ஹகம்தீன் மற்றும் அஷ்ஷெய்க் சாஜஹான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வரவேற்புரையை பெரியபள்ளிவாசல் தலைவர் அஷ்ஷெய்க் ரிழ்வான் இஸ்லாஹி நிகழ்த்தினார். அதிதிகளும் விஷேட (சிங்கள மொழி) பேச்சாளர்களும் நபி (ஸல்) அவர்கள் பற்றியும், அவரது வழிகாட்டல்கள் இன்றைய காலகட்டத்திற்கு எவ்வாறு பொருந்துகின்றன எனவும் விளக்கமளித்தனர்.



அதிதிகளின் உரையைத் தொடர்ந்து அவர்களுக்கான நினைவுச் சின்னங்கள் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வரலாற்று (சிங்கள மொழி) நூலும் வழங்கி வைக்கப்பட்டன.

நன்றியுரையை பெரிய பள்ளிவாசல் நிர்வாக செயலாளர் எம்.எம்.எம். பவ்ஸர் (உபஅதிபர்,அல் அஸ்ஹர் கல்லூரி) ஆற்றியிருந்தார். நிகழ்ச்சிகளை ருஷ்தி ஹாதி தொகுத்து வழங்கினார்.

நியாஸ் ஸாலி...

# மருதமுனையில் சிறப்பாக நடைபெற்ற அந்-நஹ்ழா அரபுக் கல்லூரி பட்டமளிப்பு

மருதமுனை அந் நஹ்ழா அரபுக் கல்லூரியின் 5 ஆவது பட்டமளிப்புவிழா கல்லூரியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. எம்.பதுறுத்தீன் தலைமையில் மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி அஷ்ரப் அரங்கத்தில் சமீபத்தில் நடைபெற்றது.

காலை 8.00 மணிக்கு பட்டம் பெற்ற ஹாபிழ்கள் மற்றும் ஆலிம்களின் அறிமுக ஊர்வலம் கல்லூரி அமைந்திருக்கும் மஸ்ஜிதுல் நூராணியா ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலில் ஆரம்பமாகியது. முஸ்லிம்களின் பாரம்பரிய ரப்பான் இசைக்கப்பட்டு பொல்லடி நிகழ்வுடன் நிகழ்வு நடைபெற்ற அல்மனார் மத்திய கல்லூரி வரை அழைத்து வரப்பட்டார்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்வுக்கு மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம்.அப்துல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நஹ்ழா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.அபூ உபைதா (மதனி), தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அரபு மொழித் துறை ஓய்வுநிலை பேராசிரியர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.ஜலாலுத்தீன், அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல். எம்.ஹாஷிம் சூரி (மதனி), பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, இறக்காமம் பிரதேச செயலாளரும் அரபுக் கல்லூரியின் பழைய மாணவருமான அல்ஹாபிழ் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

முன்னாள் மேல்நீதிமன்ற ஆணையாளர் சட்டத்தரணி எம்.எஸ்.எம், ஜெமீல், கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி, கல்முனை குவாஸி நீதிமன்ற நீதிபதி எப்.எம்.ஏ. அமீருல் அன்சார் மௌலானா, அல்மனார் மத்திய கல்லூரி அதிபர் ஐ.எல் உபைதுல்லாஹ், மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் பேராசிரியர் ஐ.எல்.எம்.மாஹிர், மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் எம்.ஐ. எம்.முஹர்ரப், தப்லீக் ஜமாத் பொறுப்பாளர் பொறியாளர் இசட். உபைதுல்லாஹ், ஓய்வுநிலை அதிபர் எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா உட்பட பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிறை வானொலி பிரதிப்பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம் தொகுத்து வழங்கினார்.

5 ஆவது ஹாபிழ் பட்டமளிப்பும், 2 ஆவது அல்ஆலிம் பட்டமளிப்பாகவும் நடைபெற்ற இந்த பட்டமளிப்பு விழாவில் 9 அல்ஆலிம்களும் 18 ஹாபிழ்களும் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். கல்லூரியின் முன்னாள் அதிபர் அஷ்ஷெய்க் ஏ. அபூஉபைதா (மதனி), ஓய்வுநிலை அதிபர் எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா ஆகியோர் நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.

ஏ.எல்.எம்.ஷினாஸ்...
(பெரியநீலாவணை விசேட நிருபர்)







# ஸ்டார்ட்-அப்-சைக்கிளை அறிமுகப்படுத்தும் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் பிளாஸ்டிக்சைக்கிள்

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சமூக தொழில் முனைவோர் திட்டமான பிளாஸ்டிக்சைக்கிள், இந்த ஆண்டிற்கான அவர்களின் முக்கிய திட்டங்களில் ஒன்றான "ஸ்டார்ட்அப் சைக்கிள்", ஜோன் கீல்ஸ் *X* உடன் இணைந்து தொடங்கப்பட்ட சவால் தளமாகும். இது இலங்கையின் புதிய கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு பிளாஸ்டிக் பாவனை மற்றும் கழிவுகளை குறைப்பதில் உள்ள சவால்கள் தொடர்பாக இலங்கையின் வணிகங்கள் வழங்கும் பிரச்சினை பற்றிய அறிக்கைகளுக்கு தீர்வு காணும் வாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

புதுமையான நடைமுறைப்படுத்தக்கூடிய நீண்ட கால தீர்வுகளைத் தேடும் முயற்சியான, ஸ்டார்ட்அப் சைக்கிள், தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முனைவோர் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை வளர்ப்பதையும் ஆதரவளிப்பதையும் இலங்கையில் பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான தீர்வுகளின் துடிப்பான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க முயற்சிக்கும் அதே வேளையில், அடுத்த தலைமுறை மாற்றங்களை உருவாக்குபவர்களை வளர்ப்பது மற்றும் வலுவூட்டுவதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

அண்மைக் காலங்களில், இலங்கையின் சில்லறை விற்பனை, விருந்தோம்பல் மற்றும் நுகர்வோர்உணவுத்துறைகள்பிளாஸ்டிக் தொடர்பான கவலைக்குரிய விடயங்களை எதிர்த்துப் போராடுவதில் கணிசமான தடைகளை எதிர்கொண்டுள்ளன.

இந்த அவசரப் பிரச்சினைக்கு விடையளிக்கும் வகையில், ஸ்டார்ட்அப்சைக்கிளை அறிமுகப்படுத்துவதில் அது பெருமிதம் கொள்கிறது. இது நமது நாட்டிற்குள் பிளாஸ்டிக் மாசுபாட்டின் பிரச்சினையை நேரடியாகக் குறிவைக்கும் முன்னோடி தீர்வுகளைக் கண்டறிய வடிவமைக்கப்பட்ட ஒரு தளமாகும்.




குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் பிரத்தியேகமாக பொதுமக்கள் கலந்து கொள்ளும் நிகழ்வில் பங்கேற்க அழைக்கப்படுவார்கள், அங்கு அவர்கள் பிரச்சினை அறிக்கைகளை வழங்கும் அந்தந்த வணிகங்களின் உரிமையாளர்கள் மற்றும் தலைவர்களை சந்தித்து உரையாடுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். இந்த ஊடாடும் அமர்வின் போது, விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு சவாலின் குறிப்பிட்ட விவரங்களையும் ஆராய்ந்து தெளிவு பெறலாம். மேலும் 6 வார நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்படும். இதில் சட்ட, நிதி, வணிக செயல்முறைகள் மற்றும் சந்தைப்படுத்தல் துறைகளைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள் தீர்வு வழங்குநர்களுக்கு அவர்களின் குறைந்தபட்ச சாத்தியமான தயாரிப்பை (*MVP*) உருவாக்குவதற்கான பயணத்தில் வழிகாட்டி ஆதரவளிப்பார்கள்.

## தினகரன் வர்த்தக உலா

businesstkn@gmail.com | சம்ஸ் பாஹிம்

# யாழில் இருப்பை விரிவுபடுத்தும் சூரிய மின்கல ஜாம்பவான்



*Hayleys Fentons* இன் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பிரிவான *Hayleys Solar*, யாழ்ப்பாணத்தில் தனதுசமீபத்திய அறிமுகத்தை தொடர்ந்து, நாட்டின்தெற்கிலிருந்து வடக்கே சூரிய சக்தியை அனைவரும்அணுகக்கூடிய வகையில் அதன் எல்லைகளைவிரிவுபடுத்துகிறது.

இலக்கம் 1481/1, தபால் பெட்டிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிதாக நிறுவப்பட்டநிறுவனத்தின் அனுபவ மையம், பிரதேச மக்களுக்கு சூரியசக்தியை அணுகக்கூடியதாக மாற்றுவதில் குறிப்பிடத்தக்கமுன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த மையம், மேற்கூரை *PV* தொகுதிகள், மின்கலங்கள் மற்றும்இன்வேர்ட்டர்கள் உள்ளிட்ட உலகத் தரம் வாய்ந்த சூரியமின்கல தீர்வுகள், சூரிய சக்தியில் இயங்கும் நீர் பம்பிகள், மின் விளக்குத் தொகுதிகளை வழங்குவதோடு, சூரியமின்கலத் தொகுதிகளின் நேரடி விளக்கக்காட்சிகளும்இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. தூய வலுசக்திதீர்வுகளை பயன்படுத்துவதற்கும், நிலைபேறானஎதிர்காலத்திற்கு பங்களிப்பதற்கும் தனிநபர்களைஊக்குவிக்கின்ற ஈடுபாட்டுடன் கூடிய இந்தவிளக்கக்காட்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# தனது 'Adopt A Beach' திட்டத்தை மூன்றாவது ஆண்டாகவும் முன்னெடுத்துள்ள Coca-Cola

சர்வதேச கடற்கரை சுத்தம் செய்யும் தினத்தை இளம் ஊடகத்துறையினர் மற்றும் தன்னார்வலர்களுடனும் இணைந்து கொண்டாடியது

*CocaCola Sri Lanka* நிறுவனம், தனது *Adopt A Beach* திட்டத்தை மூன்றாவது ஆண்டாக இம்முறையும் முன்னெடுத்து, இலங்கையின் கடற்கரைகளைப் பாதுகாக்கும் தனது பணியைத் தொடர்கிறது. இந்த உற்சாகமூட்டும் நடவடிக்கை, 2023 செப்டம்பர் 16 ஆம் திகதி சர்வதேச கடற்கரை சுத்தம் செய்யும் தினத்தைக் கொண்டாடுவதோடு, கடற்கரை பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

*CocaCola Sri Lanka* நிறுவனம் மற்றும் *Clean Ocean Force* இடையேயான ஒத்துழைப்பைக் கொண்டாடும் வகையில், மட்டக்குளி *Crow Island* கடற்கரையில் பிரத்யேக கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்வு மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மேல் மாகாண ஆளுநரும் இலங்கை விமானப்படையின் தளபதியுமான கௌரவ ரொஷான் குணதிலக்க மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பிறுப்பினர்கள், கொழும்பு மாநகர சபை, சுற்றுச்சூழல் பொலிஸ் பிரிவு, கடற்கரை பாதுகாப்பு திணைக்களம், கழிவு நிர்வகிப்பு அதிகார சபை மற்றும் *Crow Island* கடற்கரை முகாமையாளர் சங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அரசாங்க அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.



மேலும், நமது நாட்டின் இளைஞர்கள் தூய்மையான மற்றும் பாதுகாப்பான கடற்கரைப் பகுதிகளை உருவாக்குவதில் வகிக்கும் முக்கியப் பங்கை வலியுறுத்தும் விதமாக, இந்த நிகழ்வில் ஊடகத் துறையைச் சேர்ந்த இளம் திறமையாளர்கள் மற்றும் *Clean Ocean Force, Clean Ocean Force Youth Club of the Ocean's University, Clean Ocean Force Youth Club in Negombo, Rotaract Club Colombo Regent, Shri Vimukthi Youth Association, International Schools* மற்றும் *Adfactors Public Relations Lanka* ஆகியவற்றைச் சேர்ந்த இளம் தன்னார்வலர்கள் அணி ஆகியோரும் கலந்து கொண்டனர். *Adopt A Beach* திட்டம், *Clean Ocean Force (COF)* என்ற இலாப நோக்கற்ற அமைப்புடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையின் கடற்கரை சுத்தம் செய்யும் முயற்சிகளில் புதிய அளவுகோல்களை நிறுவியுள்ளது. *CocaCola Sri Lanka* நிறுவனம், *Crow Island* கடற்கரையை சுத்தம் செய்து பராமரிப்பதற்கான *COF*ன் முயற்சிகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

# சேவை தரத்தில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ள MediHelp ஆய்வகம்

*MediHelp* மருத்துவமனைக் குழுமம், இலங்கையின் மிகப்பெரிய அடிப்படை சுகாதார மருத்துவமனை சங்கிலித் தொடர், *ISO 15189* ஐ அடைவதன் மூலம் அதன் விரைவான விரிவாக்கத்தின் போது ஆய்வக அமைப்புக்கான உலகளாவிய அங்கீகாரத்துடன் வலுவான தரமான சேவையில் ஒரு புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது.

*MediHelp* மருத்துவமனைகள் குழுமமானது, இலங்கையர்களுக்கு குறைந்த விலையில் முதன்மை பராமரிப்பு சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் தனது வசதிகளை விரைவாக விரிவுபடுத்தும் இவ்வேளையில், அதன் ஆய்வக அமைப்பு இலங்கை தர மதீப்பீட்டு அங்கீகாரத்துடன் *ISO 15189* சர்வதேச தரப்படுத்தலைப் பெறுவது மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

*ISO15189* சர்வதேச தரப்படுத்தல் என்பது மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ ஆய்வகங்களின் தரப்படுத்தலை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதலாகும், இது தரம் மற்றும் புதுப்பித்த அறிவுடன் பிரிவுகளை நிர்வகிக்க மிகவும் துல்லியமான மற்றும் நம்பகமான நோயறிதல் மருத்துவ அறிக்கைகளை வழங்குகிறது.

மருத்துவ ஆய்வகத்தின் தர நிர்வகிப்பு அமைப்பு, தொழில்நுட்பத்திறன் மற்றும் நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் ஆகியவை முழு அங்கீகார செயல்முறையின் போது கடுமையாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த மதிப்பீட்டு செயல்முறையானது இலங்கை தர மதிப்பீட்டு அங்கீகார சபையினால் பரிந்துரைக்கப்பட்ட சுயாதீன அங்கீகார அமைப்பினால் மேற்கொள்ளப்படுகிறது மற்றும் இலங்கை தர மதிப்பீட்டு அங்கீகார சபை *ISO15189* சர்வதேச தரப்படுத்தலுக்கு பரிசீலிக்கப்படும் நடைமுறைகளை பூர்த்தி செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துகிறது.



# தமது மரப் பால் சியெட் களனியில் உற்பத்தியாக மாறுவதை கண்டுகளித்த இறப்பர் செய்கையாளர்கள்

தமது இறப்பர் மரங்களில் இருந்து பெறப்பட்ட வெண்ணிற மரப்பால் டயராக மாறும் விதத்தை இறப்பர் செய்கையாளர்கள் கண்டு களித்தனர். அதி உயர் தொழில்நுட்பத்தின் மூலம் மிக நவீன இயந்திரங்கள் மூலம் இடம்பெறும் இந்த செயற்பாடு உலக சந்தைக்குத் தேவையான முடிவுப் பொருளாக மாறுவது அவர்கள் நிச்சயம் அறிந்து வைத்திருக்க வேண்டிய ஒன்றாகும். ஆனால் அதை அவர்கள் பெரும்பாலும் நேரடியாகக் கண்டதில்லை. இந்தக் குறையை இப்போது இலங்கையின் இயற்கை இறப்பரை பெருமளவு பயன்படுத்தும் ஒரு பிரிவினர் சரி செய்து வருகின்றனர்.

இலங்கைக்குத் தேவையான வாயு மூல டயர்களில் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதியை உற்பத்தி செய்யும் சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் களனியிலுள்ள தனது விரிவான உற்பத்தி தொகுதிக்கு இறப்பர் செய்கையாளர்கள் நேரடியாக விஜயம் செய்து உற்பத்தி செயற்பாடுகளைப் பார்வையிடும் வகையில் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து வருகின்றது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைக்கு தேவையான அதி செயற்திதன் மிக்க டயர்களை உற்பத்தி செய்யும் உள்ளக செயற்பாட்டு பொறிமுறையை பார்வையிடும் வாய்ப்பு இதன் மூலம் அவர்களுக்கு கிடைக்கப்பெறகின்றது. அந்த வகையில் பாதுக்க, ஹொரணை, அவிஸ்ஸாவலை, எஹலியகொட, இரத்தினபுரி, அக்குரஸ்ஸ, கேகாலை, யட்டியாந்தொட்டை, கோணகல்தெனிய, றுவன்வெல்ல ஆகிய இடங்களைச் சேர்ந்த 45 பேர் கொண்ட முதலாவது குழு இறப்பர் செய்கையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் சியெட் களனி தொழில்சாலைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டனர். அவர்களுக்கு இயற்கை இறப்பர் உற்பத்தி தொடர்பான விரிவான விளக்கம், இறப்பர் தரம் தொடர்பாக நடத்தப்படும் கண்டிப்பான பரிசோதனைகள், விலைமதிப்பு மிக்க மூலப் பொருளை களஞ்சியப் படுத்தி வைப்பதில் பேணப்படும் தீவிர கவனம், கையிருப்பு முகாமைத்துவத்தில் பேணப்படும் முதலில் வருவது முதலில் வெளியெறுவது (*FIFO*) பற்றிய நடைமுறை மற்றும் ஆரம்பம் முதல் உறபத்தி முடிவு வரையான முழு செயற்பாடுகள் பற்றி விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. அதி நவீன வசதிகள் கொண்ட உற்பத்தி வளாகத்தில் தர சோதனை செயற்பாடுகள் பற்றி வழங்கப்பட்ட விரிவான விளக்கம் உயர் தரம் மிக்க இயற்கை இறப்பர் விநியோகத்தின் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் அமைந்திருந்தது.




# குபோடா DC93G அறுவடை இயந்திரத்தை வெளியிடும் ஹேலிஸ்

கிளிநொச்சி மாவட்டம் எழுதுமட்டுவாழ் கிளாலியை சேர்ந்த தனது பெருமைமிகு வாடிக்கையாளரான மகேஸ்வரன் கபில்ராஜிடம் இயந்திரத்தை 2023 செப்டம்பர் 20 ஆம் திகதி நிறுவனம் கையளித்திருந்தது. இதன் மூலம், உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறனில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், மற்றொரு மைல்கல்லை நிறுவனம் வடக்கில் பதித்துள்ளது.

தாழ் வயல்களுக்கு ஏற்ற வகையில் செயற்படும் குபோடா *DC93G* இன் தன்மை, அதிக செயற்றிறனுக்கான அகலமான வெட்டை ஏற்படுத்துவதற்கான அகலம் மற்றும் சேற்று நிலங்களில் சிறந்த செயற்திறன் ஆகியவற்றை கொண்டு இருப்பதனால், இலங்கையின் வயல்களுக்கு சிறந்த அறுவடை இயந்திரமாக அமைகிறது. வயலின் நிலமைகளைப் பொறுத்து, இந்த அறுவடை இயந்திரம் உச்சபட்சமாக ஒரு நாளில் 15 ஏக்கருக்கு மேல் அறுவடை செய்யும் திறனை கொண்டது.



# ஜனசக்தி லைஃப் சாதனையாளர்கள் கௌரவிப்பு

இலங்கையின் முன்னோடி ஆயுட் காப்புறுதி வழங்குனரான ஜனசக்தி லைஃப் (*Janashakthi Life*), அண்மையில் கொழும்பின் பிரபல அடையாளமாக விளங்கும் தாமரைக் கோபுரத்தில்'*Janashakthi Life Achievers Golden Night*' நிகழ்வைநடாத்தியிருந்தது. இந்நிகழ்வில் இவ்வருடத்தின் முதல்பாகத்தில் சிறந்து விளங்கிய 300 உயர் சாதனையாளர்களின்சாதனைகள்கொண்டாடப்பட்டன. ஜனசக்தி லைஃப் நிறுவனத்தின் பிரதித்தலைவர் பிரகாஷ் ஷாஃப்டர், குழுமத்தின் முகாமைத்துவப்பணிப்பாளரும்/ பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரமேஷ் ஷாஃப்டர்உள்ளிட்ட மதிப்பிற்குரிய விருந்தினர்கள் மற்றும் ஜனசக்தி லைஃப்நிறுவனப்பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவிலியனகே உள்ளிட்ட நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ உறுப்பினர்களும்இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.



இந்நிகழ்வில், சிறந்த அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புகளைவழங்கிய சிறந்த சாதனையாளர்கள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கு வெகுமதிகளும் வழங்கப்பட்டன.

# Zero Chance சித்திர மற்றும் கட்டுரைப் போட்டி

அவுஸ்திரேலிய அரசாங்கம் மற்றும் கல்வி அமைச்சுஇணைந்து ஒழுங்குசெய்த *Zero Chance (ZR chance)*பாடசாலைகளுக்கு இடையிலான சித்திர மற்றும் கட்டுரைப் போட்டியின் வெற்றியாளர்களைப் பாராட்டும் வைபவம் கடந்ததினம் இலங்கை மன்றக் கல்லூரியில் சிறப்பாகநடந்தேறியது. அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகமேற்கொள்ளப்படும் கடல்வழி புலம்பெயர்வு குறித்து விழிப்புணர்வூட்டுவதும் சட்ட விரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குப் பயணிக்க முயற்சிக்கும் வீண்முயற்சிகள் குறித்து தெளிவுபடுத்துவதும், இப்போட்டித்தொடரைஒழுங்குபடுத்துவதன் முக்கிய நோக்கமாகஅமைந்தது.

அண்மையில் இடம்பெற்ற இப்போட்டியில், 15 மாவட்டங்களைச் சேர்ந்த 41 பாடசாலைகளைப்பிரதிநிதித்துவப்படுத்தி ஏறத்தாழ 1800 மாணவமாணவியர்கள் பங்குபற்றினார்கள். தரம் 9 முதல் தரம் 11 வரையிலும், தரம் 12 முதல் தரம் 13 வரையிலுமான இரு வயதுப் பிரிவுகளின் கீழ் இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 'சட்டவிரோத கடல்வழிபுலம்பெயர்வினைத் தவிர்ப்போம்' எனும் தலைப்பினை மையமாகக் கொண்டு, மாணவ மாணவியர்களிடையே இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## மக்கள் மீது... (03ஆம் பக்கத் தொடர்)

நாணய நிதியம் மறுத்துள்ளதாக சில தரப்பினர் குறிப்பிடப்படுவது அடிப்படையற்றதாகும். 2024 ஆம் ஆண்டு முதல் காலாண்டுக்குள் வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் கேட்டுக் கொண்டுள்ளது. இயலுமான அளவில் தற்போது நாட்டில் வரி விதிப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளது.மேலும் வரி விதிப்பை அதிகரிக்க முடியாது என்பதை சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உரிய இலக்கை அடைய வேண்டுமாயின் வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அரசாங்கத்தை கேட்டுள்ளனர். வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக மீண்டும் வரிகளை அதிகரிக்க முடியாது. எனவே, சர்வதேச நாணய நிதியத்துடனான நிபந்தனைகளை மீள் பரிசீலனை செய்வது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பல பொருட்களின்... (03ஆம் பக்கத் தொடர்)

சமர்ப்பிக்குமாறு அதிகாரிக்குப் பணிப்புரை விடுத்தார்.

1962 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2336/ 72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இரண்டாவது தடவையாகவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு அனுமதி வழங்குவதில்லையெனக் குழு தீர்மானித்தது.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் கிரீன் சேனல் கல்வி சேவை அமைப்பின் சர்வதேச அமைப்பாளருமாகிய திருகேஸ் செல்லசாமி தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு தமிழகத்துக்கு சென்று நேற்று (3/10/2023) சென்னையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியத்தை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடிய போது

# இரத்தினக்கல் அதிகார சபையின் பேருவளை கிளை திறப்பு விழா

(பேருவளை பி.எம்.முக்தார்)

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பேருவளை கிளை அலுவலகத் திறப்பு விழாவும் இரத்தினக்கல் ஏற்றுமதிக்கான பேருவளை பிராந்திய காரியாலய அங்குராப்பண வைபவமும் இன்று காலை 10:00 மணிக்கு சீனன்கோட்டை பத்தையிலுள்ள "ஜெம் டவர்" கட்டிட தொகுதியில் இடம் பெறும்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் மர்ஜான் பளீல் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

மேற்படி அதிகார சபையின் தலைவர் விராஜ் டி சில்வா உட்பட அதிகார சபையின் உயரதிகாரிகள், சீனன் கோட்டை பள்ளிச் சங்க தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். முக்தார் உட்பட உறுப்பினர்கள் சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க உறுப்பினர்கள் உட்பட பல பிரமுகர்கள் நிகழ்வில் பங்குபற்றுவர்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க தலைவரும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் மர்ஜான் பளீல் மற்றும் உறுப்பினர்களின் வேண்டுகோளின் இரத்தினக்கல் ஏற்றுமதிக்கான அலுவலகமும் இங்கு அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## கோதுமை மாவுக்கு...

களஞ்சியங்களிலுள்ள கோதுமை மாவின் அளவு தொடர்பில்,தடயவியல் கணக்காய்வு மேற்கொண்டு இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.த சில்வா, கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.த சில்வா தலைமையில் பாராளுமன்றத்தில் அண்மையில் கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுவிலேயே, இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. நாடு முழுவதுமுள்ள வர்த்தக நிலையங்களில் வெவ்வேறு விலைகளில் கோதுமை மா விற்பனை செய்யப்படுவதாக குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்.

இருந்தபோதும் நிதி அமைச்சு வழங்கிய விலைக்கு அமைய ஒரு கிலோ கோதுமை மாவை 198 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். கோதுமை மாவின் விலையை நிர்ணயிப்பதில் இரண்டு விலைக் கணக்கீடுகள் பயன்படுத்தப் படுவதாகவும், இந்நிலை மாற்றப்பட வேண்டுமெனவும் தலைவர் வலியுறுத்தினார்.

கோதுமை மாவுக்கான வரி அதிகரிக்கப்பட்டதால், விலை அதிகரித்துள்ளது.இந்நிலையில்,ஏற்கனவே களஞ்சியங்களில் இருந்த கோதுமை மாவுக்கும் புதிய வரியை உள்ளடக்கி விலையை அதிகரித்து விற்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த காலத்தில் சமையல் எரிவாயு மற்றும் பால் மாவுக்கான விலை சூத்திரத்தை தயாரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நினைவுபடுத்திய குழுவின் தலைவர், கோதுமை மாவின் விலையை ஒழுங்குபடுத்த விலைச்சூத்திரம் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார்.

## சிறப்புரிமை...

தொடர்பான பிரச்சினையொன்றை முன் வைத்து, உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அவர்,

பாராளுமன்ற உறுப்பினராக நான், முதன்முறையாக முன்வைத்த இளைஞர் பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டமூலம் தொடர்பில் குறிப்பிட வேண்டும்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பாராளுமன்றத்தில் எனது கடமைகளை செய்கையில், வேண்டுமென்றே இடையூறு ஏற்படுத்தி, இழிவுபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், எனக்குள்ள சிறப்புரிமைகள் பாரதூரமாக மீறப்படுவதையே சபையில் முறைப்பாடாக முன்வைக்கின்றேன்.

பாராளுமன்றத்தின் அரசியலமைப்பு சபை நிலையியற் செயற்குழுவின் உத்தரவுகளை நிறைவேற்றத் தவறுவது , நாடாளுமன்றத்தின் அதிகாரங்களுக்கு சவால் விடுவதாக அமையும்.

நிலையியற் கட்டளைகளுக்கு இணங்க,பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் கட்டளைச் சட்டங்களை திருத்துவதற்காக, மூன்று தனிநபர் சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2021 ஜனவரியில் பொதுச் செயலாளரிடம் நான், சமர்ப்பித்தேன்.

இவை, இளைஞர் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டவை.

இம்மூன்று சட்டமூலங்களும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, கடந்த வருடம் 2022 ஜூலை 06 இல், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட அமைச்சினால் இது தொடர்பான அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு இது அனுப்பப்பட்ட போதும்,அந்த சட்ட மூலங்களுக்கான உரிய அறிக்கைகள் 2023 ஜனவரி முதலாம் திகதி வரை, பாராளுமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை.

குறித்த சட்டமூலங்களுக்கான அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அமைச்சிடமிருந்து ஆறு மாதங்களுக்குள் கிடைக்கவில்லை என்றால் அச்சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்பிற்கான ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்க முடியும்.

இதன்படி, பாராளுமன்றம்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் இளைஞர் பிரதிநிதித்துவத்திற்கான எனது தனிநபர் சட்டமூலங்களை ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்குமாறு, கடிதம் மூலம் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு தெரிவித்துள்ளேன்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் எமது பொறுப்புக்களையும் கடமைகளையும் எவ்வித இடையூறு இன்றியும், துன்புறுத்தல் இன்றியும் நிறைவேற்றுவதற்குத் தேவையான சுற்றுச்சூழலைப் பெற்றுக் கொடுப்பது சபாநாயகரின் பொறுப்பாகும்.

பாளுமன்றத்தின் பாரபட்சமற்ற தன்மை, கௌரவம்,கண்ணியம் ஆகியவை கேள்விக்குட்படுத்தப்படாமலும், அவமதிக்கப்படாமலும் இருக்கும் வகையில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இடம் பெறுவது மிகவும் முக்கியம்.

இந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினரின் செயற்பாடுகளை தடுக்கும்,துன்புறுத்தும் மற்றும் அவமரியாதை செய்யும் நடவடிக்கைகள் பாராளுமன்றத்தில் நடைபெறாமல் தடுப்பதும் சபாநாயகரின் பொறுப்பு.

எனவே இந்த விடயத்தை சிறப்புரிமைக் குழுவுக்கு அனுப்பி விரைவில், அக்குழுவைக் கூட்டி நீதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அமைச்சில் நேற்று நடைபெற்ற இந்த பேச்சுவாத்தையின் போது, விசேடமாக இராணுவ சேவையில் குறிப்பிட்ட வருடங்கள் சேவையாற்றி சட்ட பூர்வமாக ஓய்வு பெற்றவர்களுக்கு பராமரிப்பு தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்வது குறித்து கலந்துரையாடப்பட்டது. இதற்கமைவாக 45 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட சட்ட ரீதியில் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு இந்த வாய்ப்புகளை வழங்க தூதுக்குழு இணக்கம் தெரிவித்ததாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு தெரிவித்தது.

## தவறாக செயற்படும்...

சமூக ஊடகங்களை நசுக்குவது முறையானதல்ல. இருப்பினும் எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை சமூக ஊடகங்களை தவறாக பயன்படுத்துவதாகும். இதனை தவறாக பயன்படுத்துவதாலே, இளைஞர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. குடும்ப பிணைப்புகளிலிலும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. சமூக ஊடகங்களூடாக மதங்களுக்கும் சிலர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். எனவே, மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தல், பிரச்சினைகளை உருவாக்கல், அல்லது ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை தோற்றுவிக்கும் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த சில கட்டுப்பாடுகள் அவசியமாகும்.

## 50,000 வெளிநாட்டு..

இலங்கை சுங்கப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

கைதான இருவரும் கொழும்பில் வசிப்பவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## நீர்வழங்கல்..

அவர்களில் 70 வீதமானவர்கள் தகுதியற்றவர்கள் என்றும் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், மிலான் ஜயதிலக்க எம்பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபையில் பெருமளவிலான ஊழியர்கள் அரசியல் ரீதியாகவே கடந்த காலங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேற்படி சபையில் தற்போது பல்வேறு பிரிவுகளிலும் வெற்றிடங்கள் காணப்படுவதுடன், மேலும் சில பிரிவுகளில் மேலதிக ஊழியர்கள் காணப்படுகின்றனர்.

## மலேசியாவில்...

களை கோரியுள்ள பாராளுமன்ற உறுப்பினர், விசாரணைகளை மேற்கொள்வதற்கு சகல தரப்பினரும் காலஅவகாசம் வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார். பொலிஸாரின் தடுப்புக்காவலிலிருந்த வேளையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், தீவிரமாக ஆராய்ந்து, உடற்கூற்று பரிசோதனையுடன் சிசிடிவியை தீவிரமாக ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட சிறைச்சாலையில் சிசிடிவி இல்லாவிட்டால் அதற்கான விளக்கத்தை பொலிஸார் அளிக்கவேண்டுமெனவும் மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். உயிரிழந்தவர் மலேசியாவில் மூன்று பேர் உயிரிழந்தமை தொடர்பில் கடந்த (22) மனைவியுடன் கைதான இந்நபர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.இவர்களின் தடுப்புக்காவல் (05) வரை நீடிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்நபர் 30 இல்,உயிரிழந்தார். இதேவேளை, மலேசியாவில் இடம்பெற்ற கொலை தொடர்பில் மேலும் ஏழுபேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்

## சமூக ஊடகங்களை...

அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் சட்டம் நாடு, இனம் அல்லது குடிமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் விடயங்களைத் தடுக்கிறதே தவிர, முன்னேற்றம் மற்றும் செழிப்பைத் தடுக்கும் விடயங்கள் எதையும் உள்ளடக்கவில்லையென அவர் கூறினார்.

இவ்வாறான பாரபட்சத்தை ஏற்படுத்தும் விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளதாக எவருக்கும் சந்தேகம் இருந்தால், அவர்கள் உச்ச நீதிமன்றத்துக்குச் சென்று தமது விடயங்களை முன்வைக்கலாம். அவ்வாறு ஒன்று இருந்தால், உச்ச நீதிமன்றத்தின் கற்றறிந்த நீதிபதிகள் பாராளுமன்றத்தில் அச்சட்டத்தை அங்கீகரிக்க அனுமதிக்கமாட்டார்கள் எனவும் அமைச்சர் குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

சமூக ஊடகங்கள் மூலம், ஏராளமான நிராயுதபாணிகள் மற்றும் வன்முறையற்றவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், தாக்கப்படுகி றார்கள், அவமானப்படுத்தப்படுகின்றனர். மேலும்,கேலி செய்து வெறுப்பையும் கோபத்தையும் பரப்புகின்றனர். இது ஏராளமான மனித உயிர்களை அழிக்க வழிவகுக்கிறது.சமூக ஊடகங்களில் நல்லதும் கெட்டதும் நடக்கும். சமூக ஊடகங்களை தணிக்கை செய்ய எதிர்பார்க்கவில்லை. இச் சட்டத்தின் நோக்கம், தவறான, இழிவுபடுத்தும், மத, இன வெறுப்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றை ஒழிப்பதே!இச்சட்டத்தின் மூலம்,

சமூகத்தின் நல்வாழ்வை முன்னேற்றும் ஒரு அதிகாரத்தை உருவாக்குவதாகும். .

சீனா போன்ற நாட்டை எடுத்துக் கொண்டால், அங்கு எந்த சமூக ஊடகங்களும் பயன்படுத்தப்படுவதில்லை. பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அப்படி தடை விதிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. நல்ல உரையாடல்களும், விமர்சனங்களும், அறிவுபூர்வமான உரையாடல்களும் இதில் இடம் பெறலாம்.

வணிக நிறுவனங்களின் விளம்பரம், விற்பனையை மேம்படுத்துதல் மற்றும் வருமானம் ஈட்டுவதற்கு இந்தச் சட்டத்தில் எந்தத் தடையும் இருக்காது. அவற்றை யார் வேண்டுமானாலும் நியாயமாகச் செய்யலாம் என்றார்.

## பிராந்திய சுனாமி..

பாடசாலை மாணவர்களதும் தயார் நிலையை பரிசோதிப்பதற்காக இவ்வொத்திகை நடத்தப்படுகிறது.

இதற்கமைய,தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை சுனாமி ஆரம்ப ஆபத்து நிலையை எதிர்வுகூறும் பொறிமுறை மதிப்பீடு செய்யப்படுமென பிரதி சபாநாயகர் அறிவித்தார்.

## 35 கிலோ..

தெரிவித்தார். இவை, ஐந்து பார்சல்களாக தயாரிக்கப்பட்டு, இத்தாலியிலிருந்து கட்டுநாயக்க விமான சரக்கு முனையத்துக்கு விமான அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான இந்த பார்சல்கள், உறுகொடவத்தை சுங்க வருவாய் கண்காணிப்பு பிரிவின் பரிசோதனைக் கூடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு சோதனை செய்யப்பட்டன. இந்த பார்சல்களை அனுப்ப வேண்டிய முகவரிகள் எதுவும் இருக்கவில்லை. பார்சல்களில் உரிமையாளர்களின் தொலைபேசி எண்கள் மட்டுமே உள்ளன.

ஹசீஸ் போதைப்பொருளை கைப்பற்றிய சுங்க வருவாய் கண்காணிப்பு திணைக்கள அதிகாரிகள், மேலதிக விசாரணைகளுக்காக போதைப் பொருள் கையிருப்பை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## பொறுப்பை...

இருந்தாலும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், பிடியாணை ம் பிறப்பிக்கவும் முடியும்.

அதேபோன்று, அச்சுறுத்தல் விடுத்த நபருக்கு எதிராக வழக்கு தொடுக்கும் அதிகாரமும் நீதிபதிக்கு உள்ளது. அந்த அதிகாரத்தை முல்லைத்தீவு நீதிபதி பயன்படுத்தவில்லை. அதனால், அதற்கான பொறுப்பை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, அந்நீதிபதி தொடர்பான விடயம் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு அரசாங்கத்துகோ, ஜனாதிபதிக்கோ எந்த அதிகாரமும் கிடையாது. இது தொடர்பான விசாரணை நடத்தும் அதிகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கே உள்ளது என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி டி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இது தொடர்பில் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் பதவி விலகல் பாரதூரமான விடயமாகும். அதேபோன்று நீதிமன்றத்தின் சுயாதீனம் தொடர்பிலும் இது பாரதூரமான விடயமாகும்.

நீதிபதி வழங்கியுள்ள தீர்ப்புகள் காரணமாக அவருக்கு மரண அச்சுறுத்தல் உட்பட பல்வேறு அழுத்தங்கள் விடுக்கப்பட்டுள்ளன. அதனால் அவரது பதவி விலகல் அறிவிப்பு தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு அதன் பின்னணியில் இருக்கும் மறைமுக சக்திகளை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்தும் பதிலளித்த அமைச்சர்,

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி வெளிநாடொன்றுக்கு சென்ற பின்னரே, அவரிடமிருந்து நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் அவருக்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு மன அழுத்தம், அச்சுறுத்தல் இருக்குமானால் அவர் வெளிநாடொன்றுக்கு சென்று கடிதம் அனுப்ப வேண்டியதில்லை. அச்சுறுத்தல் விடுத்தவர் யாராக இருந்தாலும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு.

மேலும் நீதிபதியின் பதவி விலகல் தொடர்பிலான எந்த பொறுப்பையும் அரசாங்கத்தின் மீது சுமத்த வேண்டாம். ஏனெனில், நீதிபதிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரம், நியமன அதிகாரமென அனைத்தும் நிர்வகிக்கப்படுவது நீதிச்சேவை ஆணைக் குழுவினாலாகும். நீதிச்சேவை ஆணைக்குழு அரசியலமைப்பின் பிரகாரம் அமைக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவாகும்.

நீதிபதிக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தால் அவர் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அது தொடர்பில் முறைப்பாடு செய்து பதிவொன்ற பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதம நீதியரசர் தலைமையிலான உரிய ஆணைக்குழுவுக்கு உத்தரவிடவோ, அதன் நடவடிக்கைகளில் தலையிடவோ அரசாங்கத்துக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மேல் மாகாணத்தில்...

மேல்மாகாணத்தில் 4,000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் தெரியவருகின்றது.

குறிப்பாக ஆங்கிலம் மற்றும் தமிழ் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாதது பெரும் பிரச்சினையாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தரம் 05....

பல் தேர்வு வினாக்கள். 11.15 12:15 வரை( ஒரு மணி நேரம்) நடத்தப்படுமென பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது. இப் பரீட்சைக்காக விண்ணப்பித்த சகல பரீடசார்த்திகளதும் வரவு இடாப்பு, உரிய பாடசாலை அதிபர்களுக்கு தபாலில் தற்போது அனுப்பப்பட்டுள்ளன.

## சர்வதேச சட்டத்துக்கு....

இலங்கையின் சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஊடகக் கலையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை ஆராய்வதன் மூலம் பயனுள்ள ஊடகக் கலையை உருவாக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் சுட்டிக் காட்டினார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

1977 ஆம் ஆண்டு நான் முதன்முதலில் பியகம தொகுதியில் தேர்தலில் போட்டியிட்ட போது அதற்கு தேவையான கட்டுரையொன்றைத் தயார் செய்ய நல்ல ஊடகவியலாளர் ஒருவரைப் பற்றி வினவிய போது திடீரென்று எட்மண்ட் ரணசிங்கவைப் பற்றி எனது தந்தை சொன்னார். எனது அரசியலில் எனக்கு முதல் கட்டுரையை எழுதித் தந்தார். கடந்த ஆண்டு வரை அது என்னிடம் இருந்தது. ஆனால் இப்போது என்னிடம் அது இல்லை.

எனது தந்தை லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவராக இருந்த காலத்தில் எட்மண்ட் ரணசிங்க சிலுமின, தினமின போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராக பாரிய சேவையாற்றினார்.

பியசேன நிஷங்க,எம்.ஏ.சில்வா, மார்ட்டின் விக்கிரமசிங்க போன்ற சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து அவர் பயிற்சி பெற்றுக்கொண்டார். எனவே, சுதந்திரத்திற்கு முன்னர் இருந்த ஊடகக் கலை, அதற்குப் பின் தோன்றிய ஊடகக் கலை இரண்டிலும் ரணசிங்க நல்ல அனுபவத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

1953 ஆம் ஆண்டு அரிசியின் விலை அதிகரித்த போது டட்லி சேனாநாயக்க பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.அதற்கு 69 ஆண்டுகளுக்குப் பின்னர், கோட்டாபய ராஜபக்ஷவினால் எண்ணெய் தட்டுப்பாட்டினால் பதவி விலக நேரிட்டது.

இந்த 69 வருடங்களில் ரணசிங்கவுக்கு நிறைய அனுபவம் கிடைத்திருக்கும். அவற்றைப் பற்றி புத்தகம் எழுதும் திறமை அவருக்கு இருக்கிறது.

1964 ஆம் ஆண்டு பத்திரிகைத் துறைப் போராட்டத்தை ரணசிங்க நடைமுறையில் முன்னெடுத்தார். அவரின் அனுபவம் இந்நாட்டின் ஊடக கலாசாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றே கூற வேண்டும். ஆனால் தற்போது அச்சு ஊடகத்துறை ஓரளவு பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளது.

அன்று எழுத்துக்கள் கோர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட பத்திரிகை கலை இன்று i pad வரையில் வளர்ந்துள்ளது. லேக்ஹவுஸ் போன்ற பெரும் மாளிகைக்குள் அடங்கி கிடந்த அறிவை google ஊடாக இலகுவாக தேடிக்கொள்ளும் வாய்ப்பு தற்போது உள்ளது. அதனால் பத்திரிகை துறையை சமூகமயப்படுத்துவதற்கு தொழில்நுட்பம் சிறந்த களமாகவும் அமைந்துள்ளது.

இருப்பினும் எந்தவொரு நாட்டிலும் உள்ள ஊடகங்கள் அந்நாடுகளின் சட்டங்களுக்கு இணங்கிச் செயற்படுகின்றன. ஆனால் சமூக ஊடகங்களின் வரவை தொடர்ந்து அவரவரின் தேவைக்கேற்ற பதிவுகள் இடப்படுகின்றன.

அதனால் அனைத்து சமூக ஊடகங்களும் சர்வதேச சட்டத்துக்கு இணங்க வேண்டுமா அல்லது நாட்டின் உள்ளக சட்டதிட்டங்களுக்கு இணங்க வேண்டுமா என்ற கலந்துரையாடலை ஏற்படுத்த வேண்டும். ஐரோப்பாவில் உள்ள சட்டத்திற்கு அனைவரும் உடன்படுவதற்கான சாத்தியம் உள்ளது. தற்போது உலகிலுள்ள பத்திரிகை மற்றும் சுஞ்சிகை உரிமையாளர்கள் விற்பனை அல்லது முதலீட்டாளர்களிடத்தில் மீளக் கையளிக்கும் செயற்பாடுகளுக்கு தயாராக உள்ளனர். அதனால் ஊடகத் துறையின் எதிர்கால நடைமுறையை அடுத்த இரண்டு, மூன்றுவருடங்களுக்குள் அவதானிக்க முடியும். அந்த துறைசார் நிபுணர்கள் நியூயோர்க்கில் மாத்திரமின்றி இலங்கையிலும் உருவாகலாமென்றார்.

## இலங்கை...

“ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் குறைந்துள்ள முதன்மைப் பற்றாக்குறையிலும் சரிவைக் கண்டோம். இது உண்மையில் IMF திட்டத்துடன் ஒத்துப்போவதுடன் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு குறித்தும் தற்போது தெளிவு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார். பலவீனமான இறக்குமதி தேவை மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக மேம்பட்ட வர்த்தக சமநிலை ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில், வெளிப்புற வர்த்தகம் ஒடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள் .இது வெளிப்புற உலகளாவிய சூழலின் காரணமாக என்றே,நினைப்பதாகவும் நான் நினைக்கிறேன். " என்றும் அவர் தெரிவித்தார்.

## GCE A/L...

கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதி தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமான தீர்மானம் எதுவும் அறிவிக்கப்பட இல்லை. இதனால், மாணவர்கள் பாதிப்படைவதாக சுட்டிக்காட்டிய அவர், இது தொடர்பில் உரிய தரப்புடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கையை அமைச்சர் எடுக்க வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்த கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, மாணவர்கள் பாதிக்கும் வகையில் இதுவரை எதுவும் நடந்து விடவில்லை. மேற்படி பரீட்சையை நடத்தும் திகதியாக ஏற்கனவே நாம் நவம்பர் 27 ஐ, குறிப்பிட்டிருந்தோம். எவ்வாறாயினும் இந்ததிகதியை முன்னுக்கு நகர்த்தாமல் பிற்போட வேண்டிய நிலையே வரும்.இன்றோ அல்லது நாளையோ இது தொடர்பான தீர்மானம் அறிவிக்கப்படும்.

# இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு எல்லையிடும் பணியில் மக்கள்

## தெல்லிப்பழை பிரதேச செயலகம் தகவல்

**யாழ். விசேட நிருபர்**

யாழ். காங்கேசன்துறை, மாங்கொல்லை பிரதேசத்தில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட இடங்களிலுள்ள காணிகளை வேலி அடைத்து அறுக்கைப்படுத்துவதற்கான அனுமதி அங்குள்ள காணி உரிமையாளர்களுக்கு நேற்று முன்தினம் (02) வழங்கப்பட்டுள்ளதாக, தெல்லிப்பழை பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 33 வருடகாலமாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த மாங்கொல்லை பிரதேசத்திலிருந்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில், மாங்கொல்லை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் இதுவரையில் மீள்குடியேறாத போது, மாங்கொல்லையிலுள்ள வீடுகளில் இரும்பு உள்ளிட்ட பல திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதை தொடர்ந்து, இது தொடர்பாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்திடமும் காங்கேசன்துறை பொலிஸாரிடமும் மாங்கொல்லை பிரதேச மக்கள் பல தடவைகள் முறைப்பாடு செய்தனர்.

அத்துடன், தெல்லிப்பழை பிரதேச செயலகத்திடம் தமது காணிகளுக்கு வேலி அடைத்து அறுக்கைப்படுத்த அனுமதி வழங்குமாறு காணி உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்ததை அடுத்து, தமது காணிகளுக்கு வேலி அடைக்க தெல்லிப்பழை பிரதேச செயலகம் அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை, மாங்கொல்லை வைரவர் ஆலயத்தில் திருத்தப் பணி முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஆலயத்துக்கு மின்சார இணைப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# வடக்கின் உதயம்

## சாவகச்சேரி விபத்தில் விடுதி உரிமையாளர் பலி

**சாவகச்சேரி விசேட, யாழ். விசேட, யாழ்.குறூப் நிருபர்கள்**

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பிரதேசத்தில் ஏ – 09 வீதியில் இடம்பெற்ற விபத்தில் விடுதி உரிமையாளர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிறு (01) இரவு 9.00 மணியளவில் நுணாவிலிலிருந்து சாவகச்சேரி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் சாவகச்சேரியிலிருந்து நுணாவில் நோக்கி பயணித்த பிக்கப் வாகனமும் ஒன்றுடனொன்று மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த நுணாவிலிலுள்ள விடுதியொன்றின் உரிமையாளரான 35 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணையை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சமிந்தவாஸ் தலைமையில் யாழ்ப்பாணத்தில் பயிற்சி முகாம்

**யாழ். விசேட நிருபர்**

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பிரபல பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் தலைமையிலான குழுவினரால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களில் துடுப்பாட்ட பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளதாக, ஜெப்னா ஸ்ரான்லியன்ஸ் இயக்குநர் க.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

துடுப்பாட்டத்தில் திறமையானவர்களை கண்டறியும் வகையில் இப்பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளதுடன், இதன்போது திறமையான சுமார் 150 பேர் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

13 வயது முதல் 25 வயதுடைய ஆர்வமுடையோர் இதில் பங்கேற்க முடியுமென்பதுடன், பங்கேற்க விரும்புவோர் 0778013310 எனும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு பதிவு செய்ய முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, வவுனியாவிலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இப்பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, துடுப்பாட்ட அக்கடமியை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதுடன், விசேட துடுப்பாட்ட பயிற்சி வழங்கி திறமையான வீர, வீராங்கனைகளை உருவாக்க உள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## சந்நிதியான் ஆச்சிரமத்தினால் பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி

**கரவெட்டி தினகரன நிருபர்**



யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவில் பல்வேறு வேலைத்திட்டங்களுக்கான நிதி உதவியை வடமராட்சி தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமம் அண்மையில் வழங்கி வைத்துள்ளது.

யாழ். வல்லிபுர ஆழ்வார் ஆலய வளாகத்தில் பனம் விதை நடுகைக்காக 100,000 ரூபாவும் வவுனியா, கூமாங்குளம் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை கட்டட பணிக்காக 100,000 ரூபாவும் முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பிலுள்ள 3 குடும்பங்களுக்கு கிணறு கட்டுவதற்காக 250,000 ரூபாவும் யன்னல், கதவுகள் பொருத்துவதற்காக 60,000 ரூபாவும் மின் இணைப்புக்காக 52,000 ரூபாவும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நெடுங்கேணி மகா வித்தியாலயம், வ/ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தின் 83 மாணவர்களினது ஒக்டோபர், நவம்பருக்கான பேருந்து கட்டண செலவை சந்நிதியான் ஆச்சிரமம் ஏற்றுள்ளது.

இதேவேளை, ஆவணி மாத ஞானச்சுடரின் 308ஆவது மலர் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

## பூநகரியிலிருந்து மாடுகளை கடத்தியவர் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கிளிநொச்சி, பூநகரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாடுகளை கடத்திய குற்றச்சாட்டில் ஒருவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (02) இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

பழைய அனுமதிப்பத்திரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, பட்டா ரக வாகனத்தில் மாடுகளை கடத்திச் சென்ற போது சந்தேகமடைந்த இராணுவத்தினர், சங்குப்பிட்டியில் வாகனத்தை வழிமறித்து சோதனை செய்தனர். இந்நிலையில், பட்டா ரக வாகனத்தில் மாடுகள் கடத்தப்பட்டமை தெரிய வந்ததை அடுத்து, பட்டா ரக வாகனச் சாரதியை இராணுவத்தினர் கைது செய்து, சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## சாவகச்சேரியில் 100 வருடங்கள் பழமையான வேப்பமரம் முறிந்தது



**சாவகச்சேரி விசேட, யாழ்.விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணம், சாவகச்சேரி நகரில் ஏ 09 வீதியை அண்டியிருந்த 100 வருடங்கள் பழமை வாய்ந்த வேப்பமரமொன்று நேற்று செவ்வாய்க்கிழமை (10) காலை திடீரென முறிந்து விழுந்துள்ளது.

இந்த வேப்பமரமானது, மின்சார வயர்களை அறுத்துக்கொண்டு வீதியில் விழுந்த போதிலும், சம்பவ வேளையில் வீதியால் எவரும் பயணிக்காமையால், எந்தவித உயிர் ஆபத்துகளும் ஏற்படவில்லையென, பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த மர நிழலில் அமைக்கப்பட்டிருந்த லொத்தர் ரிக்கெட் விற்பனை நிலையம், மோட்டார் சைக்கிளொன்று, மின்சாரத் தூண்கள் சேதமடைந்துள்ளன.

இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுத்த சாவகச்சேரி பொலிஸார், உரிய அதிகாரிகளின் உதவியுடன் மரத்தை வெட்டி அப்புறப்படுத்தி, சிறிது நேரத்தில் போக்குவரத்தை சீர்செய்தனர்.

## கொடிகாமம் பிரதேசத்தில் வெடிபொருள் கண்டுபிடிப்பு



**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ். கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில், கரம்பகம் பிரதேசத்தில் இருவேறு தனியார் காணிகளில் வெடிக்காத நிலையில் வெடிபொருட்கள் சில நேற்று முன்தினம் திங்கட்கிழமை (02) அடையாளம் காணப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு காணியில் கைக்குண்டொன்றும் மற்றைய காணியில் மோட்டார் ஷெல்லொன்றும் காணப்பட்டதை அவதானித்த காணி உரிமையாளர்கள், இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினர்.

இந்நிலையில், சம்பவ இடங்களுக்குச் சென்று பொலிஸார் விசாரணை செய்ததுடன், வெடிபொருட்களை செயலிழக்கச் செய்து, அவற்றை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

### கொழும்பு றோட்டறி கழக உதவியில்

## மன்னார் சிறுமிக்கு தமிழகத்தில் இருதய சத்திர சிகிச்சை



**தலைமன்னார் விசேட நிருபர்**

கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகம் மற்றும் தமிழக றோட்டறிக் கழகங்களின் உதவியுடன் மன்னார், அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 4 வயதுச் சிறுமியொருவர் தமிழகத்தில் சிகிச்சை பெற்றுக்கொண்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (02) தனது வசிப்பிடத்துக்கு திரும்பியுள்ளார்.

மேரி ஹெனாலி பெர்னாண்டோ எனும் சிறுமிக்கே தமிழகத்தில் இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த செப்டெம்பர் 6ஆம் திகதி தனது பெற்றோருடன் கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகத்தின் பயண செலவில் தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், சிறுமியின் சிகிச்சைக்கான செலவை தமிழகத்திலுள்ள றோட்டறிக் கழகங்கள் பொறுப்பேற்றிருந்தன.

இவ்வாறான தேவையுடையவர்கள் மன்னார் றோட்டறிக் கழகத்தை தொடர்பு கொள்வதன் மூலம் சேவையை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முள்ளியவளையில் குழாய்க்கிணறு கையளிப்பு

முல்லைத்தீவு, முள்ளியவளை மூன்றாம் வட்டார பிரதேசத்திலுள்ள முல்லைக்குமரன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்றது.

2.5 இலட்சம் ரூபா செலவில் இந்தக் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், சுகிர்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மேற்படி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் விளையாட்டுக்கழகமொன்றுக்கு வலைப்பந்தும் வழங்கி வைக்கப்பட்டன.

## மன்னாரில் அம்பியூலன்ஸ் சாரதி பணிநீக்கம்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னாரில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த குற்றச்சாட்டில் அம்பியூலன்ஸ் சாரதியை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (02) பணி நீக்கம் செய்துள்ளதாக, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இந்த சாரதியும் மற்றுமொருவரும் 179 கிராம் ஐஸ் போதைப் பொருளைவிற்பனைக்காக கடந்த சனிக்கிழமை (30) இரவு முருங்கன் பாடசாலையின் பின்புற மைதானத்துக்கு அரச அம்பியூலன்ஸில் கொண்டு வந்த போது பொலிஸார் விசாரணை செய்தனர்.

இந்நிலையில், இவர்கள் இருவரும் பொலிஸ் அதிகாரியை தாக்கியதுடன், அம்பியூலன்ஸ் சாரதி தப்பிச்சென்றுள்ளார். மற்றைய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவதினம் மாலை 6.00 மணி முதல் வைத்திய சாலையிலிருந்து சாரதி காணாமல் போன அதேவேளை, அம்பியூலன்ஸ் வைத்தியசாலையில் இருந்தது. அம்பியூலன்ஸையும் சாரதியின் விடுதியையும் பொலிஸார் சோதனை செய்த போதிலும், அவற்றில் போதைப்பொருள் கைப்பற்றப்படவில்லையென வும், அவர் மேலும் தெரிவித்தார்.

## வவுனியாவில் 59,564.35 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை

**வவுனியா விசேட நிருபர்**



இம்முறை வவுனியா மாவட்டத்தில் 59564.35 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த பல மாதங்களாக மழை இன்றிய நிலையில் அதிக வெப்பம் நிலவியதால், வரட்சியான காலநிலை நீடித்தது. இதனால், குளங்களில் நீர் வற்றிப் போனதுடன், வவுனியாவும் வரட்சியால் பாதிக்கப்பட்டது.

இனிவரும் நாட்களில் வவுனியாவில் மழை பெய்யும் நிலையில் பெரும்போக விவசாய நடவடிக்கையை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியுமெனவும், விவசாயிகள் நம்பிக்கை வெளியிட்டனர்.



# கிழக்கின் குரல்



## ரூ. 55 மில்லியன் செலவில்

# சாய்ந்தமருதில் கடலரிப்பை தடுக்கும் வேலைத்திட்டம்

(கல்முனை விசேட, பெரியநீலா வணை விசேட நிருபர்கள்)



சாய்ந்தமருது பிரதேசத்தில் உக்கிரமடைந்துவரும் கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நேற்று செவ்வாய்க்கிழமை (03) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த 19 ஆம் திகதி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் இடம்பெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வேலைத்திட்டத்துக்கு 55 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 35 மில்லியன் ரூபா நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, எச்.எம்.எம்.ஹரீஸ், கரையோரம் பேணல் திணைக்களத்தின் மாகாண பொறியியலாளர் எம். துளசிதாசன், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# சர்வதேச சைகைமொழித் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு நடைபவனி



சர்வதேச சைகை மொழித் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட வைபவமும் விழிப்புணர்வு நடைபவனியும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு நகர மண்டப வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

"செவிப்புலனற்றவர்கள் எங்கு வேண்டுமானாலும் சைகை மொழியை பயன்படுத்தக் கூடிய உலகம்" என்பது இந்த ஆண்டின் சர்வதேச சைகை மொழித் தினத்தின் தொனிப்பொருளாகும்.

மட்டக்களப்பு ஞானசூரியம் சதுக்கத்திலிருந்து மட்டக்களப்பு திருமலை வீதி வரை சென்ற நடைபவனியில் இலங்கை தமிழர் செவிப்புலன் வலுவற்றோர் அமைப்பின் தலைவர் திரு.வள்ளிகாந்தன் உட்பட 500ற்கும் மேற்பட்ட செவிப்புலனற்றோர் கலந்துகொண்டனர்.

# வயோதிபப் பெண்ணின் கழுத்தை அறுத்து தங்க நகை கொள்ளை

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

ஏறாவூர் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கொம்மாந்துறை பகுதியில் வீடொன்றில் தனியாகவிருந்த வயோதிபப் பெண்ணை தாக்கி 10 பவுண் நகைகளை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

67 வயதான பெண் ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

தனிமையில் வாழ்ந்த வயோதிபப் பெண்ணின் கழுத்தை கத்தியால் வெட்டி அவர் கழுத்தில் அணிந்திருந்த 10 பவுண் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து படுகாயமடைந்த வயோதிபப் பெண்ணை வைத்திய சாலையில் அயலவர்கள் அனுமதித்துடன் சந்தேகநபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

# கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறுவதற்கான விடுதி வசதி

## முதற் கட்டமாக பொத்துவில் ஆதார வைத்தியசாலையில்

(பாலமுனை விசேட நிருபர்)

பொத்துவில் ஆதார வைத்திய சாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி வசதியை நிர்மாணிக்கத் தீர்மானித்து,

சுகாதார அமைச்சிடம் இதற்கான அனுமதியை கோரியுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியசாலைகளை வருமானம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றி,அந்நிதிகளைக் கொண்டு வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளோம்.

இத்திட்டம் குறித்து சுகாதார அமைச்சுக்குத் தெரியப்படுத்தி அனுமதியும் கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் முதற்கட்டமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

பிரபலமான அறுகம்பே சுற்றுலாத்தளத்துக்கு அதிகளவான பயணிகள் வருகின்றனர்.இதை நோக்காக கொண்டு கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதியை நிர்மாணிக்க தீர்மானித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பொத்துவில் பிரதேச அபிவிருத்தி, காணி மீட்புக்காக தொடர்ந்து முயற்சிப்பேன்

(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)



பொத்துவில் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் காணி மீட்புக்காகவும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முசாரப் தெரிவித்தார்.

அக் /அல் முனவ்வறா வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பொத்துவில் பிரதேசத்தினதும் , அம்பாறை மாவட்டத்தினதும் அபிவிருத்திக்காகவும், காணி மீட்புக்காகவும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். அந்தவகையில் காணி விவகாரத்தில் வெற்றிப் பெற்று அப்பகுதியிலுள்ள மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழி செய்துள்ளோம்.அரசியல் காரணங்களுக்காக விமர்சிப்பவர்கள் பொய்களையும், புரட்டுக்களையும் சொல்லிக்கொண்டே இருப்பார்கள்., அதனை நாம் கருத்திற் கொள்வதில்லை. மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பது எமது இலக்காகும். பொத்துவில் பிரதேசத்திலுள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் குறைகளை தொடர்ந்தும் சொல்லிக் கொண்டிருக்காமல் நிறைகளைப் பேசும் மக்களாக நாம் மாறவேண்டும்.

வெளிப்பிரதேசங்களிலிருந்து வந்து நமது மண்ணில் கற்பிக்கும் ஆசிரியர்களை கௌரவமாக மதிக்க வேண்டும். அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுதான் நமது மாணவர்களுக்கு கல்வியைப் போதிக்கின்றனர். கடந்த காலங்களை விட இப்போது ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு குறைந்துள்ளது. தொடர்ந்தும் அதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

## காத்தான்குடியில்

# டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அடையாளப்படுத்துமாறு பிரதேச செயலக கள உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் கள நடவடிக்கைக்காக எங்கு சென்றாலும் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அடையாளப்படுத்தி அது தொடர்பில் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டுமென காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர் காத்தான்குடி பிரதேச செயலக கள உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற பகுதி நாள் கூட்டத்தின் போதே காத்தான்குடி பிரதேச செயலாளர், செயலக கள உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கினார். இதன்போது டெங்கு நுளம்பு பரவுதல் தொடர்பில் விசேடமாக ஆராயப்பட்டது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் காத்தான்குடி பிரதேச செயலகம் காட்டிவரும் ஒத்துழைப்பு தொடர்பாக விளக்கி கூறிய பிரதேச செயலாளர், காத்தான்குடி பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் கள நடவடிக்கைக்காக எங்கு சென்றாலும் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அடையாளப்படுத்தி அதுதொடர்பில் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

மழைக் காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு நுளம்பு பரவும் வீதமும் அதிகரிக்கலாம்.



அதனால் அதனை நாம் கட்டுப்படுத்தி வீடுகள் சுற்றுப்புறச் சூழல் என்பவற்றை சுத்தமாக வைத்திருக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் காத்தான்குடி உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா, காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல்.நசிர்தீன் உட்பட திணைக்கள அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பொத்துவில் சுகாதார பிரிவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

(ஒலுவில் விசேட நிருபர்)



தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு செயலணியினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல், டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை துப்புரவு செய்தல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல், அவற்றின் வதிவிடத்தை முற்று முழுதாக அழித்தல், வதிவிடத்தில், நுளம்பின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தல் என்பன முக்கியமானதாகும், இது தொடர்பாக மக்களுக்கு துண்டுப்பிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி ஊடாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடமளிக்காத வகையில் துப்புரவாக தமது இடங்களை வைத்து கொள்ள வேண்டுமெனவும் அறிவித்துள்ளார்.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருப்பவர்கள் துப்புரவு செய்யுமாறும் அதனை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# வாசிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்த சம்மாந்துறை பிரதேச சபை நடவடிக்கை

(இறக்காமல் தினகரன் நிருபர்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்தும் வகையில் சம்மாந்துறை பிரதேச சபையின் கீழ் இயங்கும் பொது நூலகங்களினால் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம். ஏ. கே முகம்மட் தெரிவித்தார்.

தேசிய நூலக ஆவணவாக்கள் சேவைகள் சபையின் ஆலோசனைக்கமைவாக இம்மாத முதலாம் திகதி முதல் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் 'உலகம் வாசிப்பவருக்கே சொந்தமானது' எனும் தொனிப் பொருளுக்கமைவாகஇந்நிகழ்வுகள் நடைபெறவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதற்கு அமைவாக யு. எல். எம் முஹிடீன் பொது நூலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பொது இடங்களில் போஸ்டர்கள் காட்சிப்படுத்தல், 100 பேருக்கு இலவச நூலக அங்கத்துவம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.



கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகளில் 'சிறுவர் எதிர்காலம்' எனும் கருப்பொருளிலான கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலை மாணவர்களின் வீதி நாடகமொன்றும் நடைபெற்றது. லயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

(படம் ; பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# சிறுவர் உரிமைகளை வலியுறுத்தி துண்டுப்பிரசுரம் விநியோகம்

தம்பலகாமம் குறூப் நிருபர்

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சிறுவர்களின் பாதுகாப்பு, உரிமைகளை விழிப்புணர்வூட்டும் வகையில் திருகோணமலை, தம்பலகாமம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (02) பொது வாகனங்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டதுடன், பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

'எல்லாவற்றையும் விடவும் பிள்ளைகள் பெறுமதியானவர்கள்' எனும் தொனிப்பொருளின் கீழ் இம்முறை சிறுவர் தினக் கொண்டாட்டம் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அப்பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக, கண்டி திருகோணமலை பிரதான வீதியால் பயணித்த வாகனங்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

# இலங்கையில் இரத்த தானம் வழங்குவதில் மடவளை இளைஞர், யுவதிகள் முன்னிலையில்

இரத்த தானம் வழங்குதல் என்பது மிகவும் உன்னதமான சேவையாகவும் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் உடல் ஆரோக்கியத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்துள்ளன என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம்.ரிஸ்மி தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் வை. எம். எம். ஏ. கிளைகள் முன்னெடுத்துச் செல்லும் இரத்த தானம் வழங்குதல் தொடர்பில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவரும் மற்றும் தேசிய விவகாரங்களுக்கான தவிசாளருமான சஹீட் எம். ரிஸ்மி ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற தேசிய செயற்திட்டத்தின் கீழ் இரத்த தானம் வழங்குதல் நிகழ்வு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகிறது. இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் இரத்த தானம் வழங்குதல், மரம் நடுதல், பொதுச் சிரமதானம் செய்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போதைய தலைவர் இஹ்சான் ஏ. ஹமீத் தலைமையில் அதற்கான தவிசாளர் முன்னாள் அகில இலங்கை வை. எம். எம். ஏ இன் தலைவர் எம். என். எம் நபீலின் வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எம். என். எம். நபீல் மரம் நடுகை தொடர்பில் மிகுந்த அனுபவ மிக்கவர்.





2018 ஆம் ஆண்டு அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையில் நான் பொதுச் செயலாளராக இருக்கின்ற கால கட்டத்தில் தேசத்தை கட்டியெழுப்புவோம் என்ற செயற் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது தலைவராக எம். என். எம். நபீல் கடமையாற்றினார். நான் தலைவரான பின்பு இந்தச் செயற் திட்டத்தில் சிறந்த முறையில் செயற்படும் கிளை இயக்கங்களுக்கு விசேட விருது வழங்குவதற்கான செயற் திட்டத்தையும் அறிமுகம் செய்து வைத்தேன். இந்த அறிமுகத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள எமது கிளைகளுக்கிடையே போட்டித் தன்மை உருவாக்கப்பட்டது. இதில் வெற்றி பெறும் கிளையினர்களுக்கு அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய பேராளர் மாநாட்டில் வைத்து விருது வழங்கப்படுகிறது.

கண்டி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த இரத்த தானம் வழங்குவதற்கான முக்கிய காரணம்; பொதுவாக முஸ்லிம்கள் இரத்தம் வழங்குவதில்லை என்ற தப்பபிப்பிராயமும், பெண்கள் வழங்கவே மாட்டார்கள் என்ற ஒரு மனோ நிலையும் பெரும்பான்மையின சிங்கள சகோதரர்கள் மத்தியில் நிலவி வந்தன. 2006 இல் நான் மடவளை வை. எம். எம். ஏ. இல் அங்கத்தவராக இருக்கின்ற கால கட்டத்தில் இந்த இரத்த தானம் வழங்குதல் வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அது மடவளையில் 2006 ஜுலை மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அது என்னுடைய திருமண நாளாகும்.

2006 இல் மடவளையில் முதலாவதாக நடைபெற்ற இரத்த தான நிகழ்வில் இரத்தம் வழங்குவதற்காக மொத்தமாக 76 பேர் வருகை தந்தார்கள். அத்தினத்தில் உண்மையிலே குறைந்தளவில் தான் பெண்கள் வருகை தந்திருந்தார்கள். அன்று பெண்கள் ஆர்வம் குன்றிய நிலைமையில் இருந்து வந்துள்ளமையினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அன்று முதல் இன்று வரையிலும் இந்த வை. எம். எம். ஏ. கிளையின் தலைவர்கள் தொடர்ச்சியாக செய்து வந்தார்கள்.

கொரோனா தொற்றுக் காலத்தில் மடவளையில் நடைபெறா விட்டாலும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இடம்பெற்ற இரத்த தானம் மற்றும் நுவரெலியா மாவட்ட செயலகத்திலும் இடம்பெற்றது. இந்த இரத்த தானம் நாட்டினுடைய அவசர தேவையைக் கருத்திற் கொண்டு வழங்கி வைக்கப்பட்டது. குறிப்பாக நாடளாவிய ரீதியில் இரத்தம் தட்டுப்பாடு நிலவி வருகிறது என்று இரத்த வங்கி விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்த இரத்த தான நிகழ்வு ஏற்படுத்தப்பட்டது.

அக்கால கட்டம் நாடு முற்றாக முழுவதும் மூடப்பட்டிருந்த காலம். அதுவும் யாருமே வெளியிறங்கி வர முடியாத கால கட்டம். அச்சத்தோடு வாழ்ந்த கால கட்டத்தில் எமது முஸ்லிம் இளைஞர் யுவதிகள் வெளியிறங்கி வந்து இரத்த தானம் வழங்கினார்கள். அஷ்ரப் ஞாபகார்த்த இரத்த வங்கியில் பெரு எண்ணிக்கையிலான இளைஞர்கள் வருகை தந்து இரத்த தானம் வழங்கியமை என்பது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இறுதியாக மடவளையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி இவ் இரத்ததான நிகழ்வு மடவளை சன்சைன் ரிசப்சன் மண்டபத்தில் ஏ. எல். எம். ரிசாட் தலைமையில் நடைபெற்றது. அன்று தேசிய மீலாத் தின விசேட விடுமுறை தினமாகும். இத்தினத்தில் இளைஞர் யுவதிகளை வேறு காரியங்களில் ஈடுபடாமல் முழு இளைஞர் யுவதிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இரத்த தானம் செய்யும் வேலைத் திட்டம் விளம்பரப்படுத்தப்பட்டது.








அந்த வகையில் ஊரில் சகல அமைப்புக்களும் கலந்து கொண்டதுடன் அனைத்துக் கடைகளையும் மூடி, சகல இளைஞர் யுவதிகளும் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர். இந் நிகழ்வானது வரலாற்றில் என்றுமில்லாதளவுக்கு முஸ்லிம் இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்டு இரத்தம் வழங்கினர். இது எமது ஊரைப் பொறுத்தவரையிலும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்துள்ளனர்.



கடந்த பத்து வருடங்களாக இதற்கு அனுசரணை வழங்கிக் கொண்டிருக்கின்ற ஞானம் நிறுவனத்தின் தொழிலதிபர் அவர்களை நானும் எமது ஊரின் தொழிலதிபர் நாஜிம் ஹாஜியார் அவர்களும் சேர்ந்து சந்தித்தோம். அவர்கள் அன்று முதல் இன்று வரை இந்த இரத்த தானம் நிகழ்வுக்கு உதவி வருகின்றார்கள். அவர்கள் இரத்த தானம் வழங்கும் ஒவ்வொரு நபர்களுக்கும் குடையொன்றை அன்பளிப்புச் செய்வதற்கு உதவி வருகின்றார்கள்.

அவை மட்டுமல்ல ஞானம் நிறுவனத்தில் கடமை புரியும் முக்கியஸ்தர்கள் கொழும்பில் இருந்து மடவளைக்கு வந்து இரத்த தானம் செய்து விட்டுச் செல்லுமளவுக்கு அவர்கள் பெரும் பங்களிப்பைச் செய்து வருகிறார்கள்.

ஞானம் நிறுவனத்தின் முகாமையாளர் பத்மா இங்கு வருகை தந்து இரத்தம் வழங்கி வைத்தார். இதில் முக்கிய விடயம் என்னவென்றால் ஞானம் நிறுவனத்தினர் அனுசரணைகளை வழங்குவது மட்டுமல்ல இங்கே வந்து இரத்த தானம் செய்து விட்டுச் செல்வது என்பது பெரும் உவப்பான செய்தி என்று நாம் சொல்ல வேண்டும்.

அதே போன்று 2006 இல் இருந்து வத்தேகம நகரிலுள்ள 'தினேஸ் பேக்கஸ்' என்ற பேக்கரி கடையின் உரிமையாளர் சிங்கள சகோதரர் சமரகோன் என்பவர் அன்று முதல் இன்று வரையிலும் தேவையான உணவுப் பொருட்கள் வழங்கி வருகின்றார். அவர் முதலில் 100 பனிஸ் தந்தவர், இன்று 500 அல்ல 1000 பனிஸ் உணவுப் பொருட்களை தருவதற்கு தயாராகவுள்ளார். அவர் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் வை. எம். எம். ஏ. இன் ரீ சேட்டைப் போட்டுக் கொண்டு மிகுந்த ஆர்வத்துடன் எங்களோடு இணைந்து இன்று வரையிலும் உதவி புரிந்து வருகிறார். மேலும் எமது மடவளை ஊரைச் செர்ந்த சகோதரர் ரிப்தி முளவ்பர் அவர்கள் யப்பான் நாட்டில் தொழில் புரிந்து வருகிறார். இதில் அவர் தொடர்ந்து பங்களிப்பு செய்து வருகிறார் என்பது இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.







ஊர் பள்ளிவாசல்கள், சகல சமூக சேவை அமைப்புக்கள், வத்துகாமம் பொலிஸ் நிலையம் மற்றும் அருகிலுள்ள விஹாரைகள் பிரதேச செயலாளர். பொது சுகாதார பரிசோதகர், அரச அதிகாரிகள் என பலர் இணைந்து இந்த வேலைத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்து வருகின்றனர். இதன் மூலம் இக்கிராமத்து மக்களிடையே காணப்படும் ஒற்றுமை தெளிவாக புலப்படுத்தப்படுகிறது.

இதனைக் கண்டு தம் பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி அழைப்பினை விடுத்து கணிசமானளவு பொலிஸ் அதிகாரிகளை வரவழைத்து சேவையில் ஈடுபடச் செய்ததோடு அவர்களில் இளம் பொலிஸ் அதிகாரிகள் இரத்த தானம் வழங்குவதற்கும் உதவி புரிந்தார். அது மட்டுமல்ல அவர் இந்த இரத்த தானம் வழங்கும் நிகழ்வு நிறைவடையும் வரையிலும் இருந்து பங்களிப்புச் செய்து விட்டுச் சென்றமை முக்கிய அம்சமாகும்.





கொரோனா தொற்று காரணமாக கடந்த இரு வருடங்கள் தனியார் மண்டபங்களிலேயே நடைபெற்றன. எதிர்காலத்தில் இரத்தம் வழங்குவதற்காக வரும் சனத்தொகையினை சமாளிக்கும் வகையில் ஒரு விளையாட்டு மைதானத்தில் ஹட் அடித்து பாரியளவில் செய்வதற்கு நாங்கள் உத்தேசித்துள்ளோம். விசேடமாக எப்பொழுதும் இரத்த வங்கி வைத்தியர்கள் மருத்துவ அதிகாரிகள் மாலை 4.00 மணி மட்டும்தான் வேலை செய்வார்கள். ஆனால் இம்முறை அவர்கள் தங்களுடைய கடமை நேரத்திற்கும் மேலதிகமாக பெரியதொரு சேவையாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதன் போது கண்டி, தெல்தெனிய, மாத்தளை ஆகிய மூன்று இரத்த வங்கிகளில் கடமைபுரியும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



கண்டி மாவட்டத்தில் உள்ள எல்லா வை. எம். எம். ஏ. கிளைகளிலும் இரத்த தானம் வழங்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் கல்ஹின்னை கிளை கடந்த 2022 ஆம் ஆண்டு புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. அதில் 70 பேர் வரை கலந்து கொண்டு இரத்தம் வழங்கி வைத்தனர். இம்முறை கடந்த செப்படம்பர் மாதம் 30 ஆம் திகதி கல்ஹின்னை ஆரம்ப பிரிவு பாடசாலையில் இடம் பெற்றது. இதில் 90 பேர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர். இங்கு இரத்த வங்கி 50 – 75 பேர் வரையிலும் எதிர்பார்த்தனர். ஆனால் இம்முறை 100 அண்மித்த நிலையில் மக்கள் கலந்து கொண்டு இரத்தம் வழங்கி வைத்துள்ளனர்.

இதில் விசேடமாக பூஜாப்பிட்டிய பிரதேச செயலாளர், விஹாராதிபதி ஊர் முக்கிய பிரமுர்கள் கலந்து கொண்டனர். இதற்கான அனுசரணையினை கட்டார் நாட்டில் தொழில் புரியும் இலங்கையைச் சேர்ந்த இளைஞர்கள் நிதி உதவியினை வழங்கி வைத்தனர். மேலும் இந்த வேலைத் திட்டத்திற்கு சில இஸ்லாமிய மார்க்க உலமாக்கள் தனிப்பட்ட ரீதியில் நிதி உதவிகள் வழங்கியுள்ளனர். அது மட்டுமல்ல அவர்களில் ஒருவர் முதன் முதலில் இரத்த தானத்தை வழங்கி ஆரம்பித்து வைத்துள்ளார். இதன் மூலம் இன நல்லிணக்கத்தை வளர்ப்பதுடன் அரச நிர்வாகிகளுடன் தொடர்பினையும் ஏற்படுத்தக் கூடியதாக உள்ளன.

கண்டியில் இன நல்லிணக்கம் ஆரம்ப காலத்தில் எந்தளவு மிக நெருக்கமாக சேர்ந்து வாழ்ந்தார்களோ அந்தளவுக்கு இன நல்லிணக்கத்தை கொண்டு வருவதற்கான இது ஒரு முயற்சியாகவும் இந்த இரத்த தானம் வழங்குகின்ற நிகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவை மட்டுமல்ல கண்டி கட்டுகஸ்தோட்டையிலுள்ள கும்புக்கந்துரயில் இரத்த தானம் வழங்கப்பட்டது. இந்த இடத்தில் வை. எம். எம். ஏ. கிளையின் அங்குரார்ப்பணத்தோடு இரத்த தானம் நிகழ்வும் இடம்பெற்றது. இந்த நிகழ்வுகளிலும் ஊரிலுள்ள சகல நிறுவனங்களும் சமூகப் பெரியார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அதேவேளை, வை. எம். எம். ஏ. கண்டி மாவட்டப் பணிப்பாளர் இஹ்திசான் ஹுஸைன்தீன் மடவளை வை. எம். எம். ஏ. கிளையின் செயலாளர் ஹசன் சிராஸ் மற்றும் ஏனைய கிளைகளிலுள்ள தலைவர் உட்பட அங்கத்துவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் அவர்களுடைய பணி மென்மேலும் தொடர வேண்டும் எனவும் சஹீட் எம்.ரிஸ்மி மேலும் தெரிவித்தார்.

**இக்பால் அலி**

# வெலிகம அறபாவில் வெகுவிமர்சையாக நடைபெற்ற "Back To School" நிகழ்வு







**வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பிரமாண்ட நிகழ்வில் 1967 முதல் 2017 வரையில் கற்ற சுமார் 2000 ஆண், பெண் பழைய மாணவர்கள் மற்றும் முன்னாள் அதிபர், ஆசிரியர்கள் பங்கேற்பு**

எத்தனை காலங்கடந்தாலும் எத்தனை வயது தாண்டினாலும் பாடசாலை அனுபவமும் அந்த பருவத்து நினைவுகளும் என்றும் மறவாதவை. பசுமையாக நெஞ்சில் குடிகொண்டிருப்பவை. பாடசாலை கால நட்புகள் ஆண்டாண்டு காலமாக தொடரும் உயர்வான உறவாகும்.

பாடசாலை வாழ்வு வெறும் 13 14 வருடங்களுடன் முற்றுப்பெற்று விடும். சிலர் அதிபராக, ஆசிரியராக அதே பாடசாலையுடன் தமது உறவை தொடரும் பாக்கியத்தை பெற்றாலும் அநேகருக்கு அவ்வாறு வாய்ப்பு கிட்டுவதில்லை. அதே பாடசாலையில் அவர்களுடைய பிள்ளை கற்கும் போது பாடசாலையுடன் தொடர்பு ஏற்படும். இவ்வாறான பிணைப்புகள் தவிர பலருக்கு பாடசாலையுடனான உறவு நீடிப்பதில்லை.

இந்த நிலையில் மீண்டும் பள்ளிக்கு "Back To School" நிகழ்வுகள் பலருக்கும் தமது கடந்த காலத்தை திரும்பிப் பார்க்க ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விடுகிறது. எத்தனை உயர்பதவிகள் வகித்தாலும் தள்ளாடும் வயதானாலும் நாடு கடந்து வாழ்ந்தாலும் அறிவுப் பாலூட்டிய தாயைத் தேடி ஓடிவர எவரும் தயங்குவதில்லை. அவ்வாறான அரிய சந்தர்ப்பங்களை தவறவிடுவதும் இல்லை.

வெலிகம அறபா தேசிய பாடசாலை என்பது சுமார் 135 வருடங்களாக தென்பகுதியில் பல ஆயிரம் பிள்ளைகளின் அறிவுக் கண்ணைத் திறந்து விட்ட கலையகம். கல்வி, விளையாட்டு, கலை என பல்வேறு துறைகளிலும் மிளிர்ந்த இந்த கலையகம் காலத்துக்குக் காலம் ஏற்ற இறக்கங்களை சந்தித்தாலும் இன்றும் தலைநிமிர்ந்து மிடுக்கோடு வீருநடைபயின்று வருகிறது.

10 வருடங்களுக்கு முன்னர் சிறப்பாக தனது 125 வருட மைல்கல்லை எட்டி பெருவிழா கொண்டாடிய அறபா அண்மையில் மீண்டும் ஒருநாள் பள்ளிக்கு நிகழ்ச்சியை பிரமாண்டமாக நடத்தி தனது அன்புச் செல்வங்களை அரவணைத்துக் கொண்டது.

பாடசாலையின் கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய இணைப்பாட விதான செயற்பாடுகளில் முன்னிலை வகிப்பதோடு ஒவ்வொரு வருடமும் பல மாணவர்கள் மருத்துவம், பொறியியல், வணிகம் மற்றும் கலைப்பிரிவுகளில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. இருந்த போதும் மாணவர்களின் தொகை அதிகரிப்பு, ஆசிரியர் பற்றாக்குறை , வகுப்பறை தட்டுப்பாடு, மாணவர்களின் கல்வி ஆர்வமின்மை , பெற்றோருக்கும் பாடசாலைகளுக்கும் இடையிலான தூரம் என பல்வேறு விடயங்கள் பாடசாலையில் முன்னேற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

இதனை ஆராய்ந்து தீர்த்து வைப்பதில் பழைய மாணவர்களின் பங்கு பிரதானமாக இருந்தாலும் யார் இதனை ஆரம்பித்து வைப்பது என்ற கேள்வி நீடித்தது. இந்த நிலையில் தான் இளம் பழைய மாணவர் குழுவொன்று களத்தில் இறங்கியது.

பௌதீக வள குறைபாடுகள், கல்வி மற்றும் விளையாட்டுத் துறை சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் " uplift 2030" என்ற தொனிப் பொருளில் புதிய தெம்புடன் திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டன. இதன் ஒரு எட்டாகத்தான் 'மீண்டும் ஒருநாள் பள்ளிக்கு' என்ற நிகழ்ச்சி பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்புடன் கடந்த 8 மாதங்களாக பழைய மாணவர் குழு இரவு பகல் பாராது உழைத்து ஏற்பாடுகளை முன்னெடுத்தது. அதன் பெறுபேறுகளை கடந்த செப்டம்பர் 30 ஆம் மற்றும் ஒக்டோபர் 1 ஆம் திகதிகளில் கண்கூடாகக் காணக் கிடைத்தது. ஆண்களுக்கான நிகழ்வு 30 ஆம் திகதியும் பெண்களுக்கான நிகழ்வு ஒக்டோபர் 1 ஆம் திகதியும் இடம்பெற்றது.

அறபா தேசிய பாடசாலையில் கல்வி கற்ற நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் வேலை செய்யும் வைத்தியர்கள், பொருளியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், பல்வேறு துறைசார் நிபுணர்கள், வர்த்தகர்கள் என பலதரப்பட்ட 2000 க்கும் மேற்பட்ட பழைய மாணவ மாணவிகள் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர். 1967 முதல் 2017 வரையில் கற்ற பழைய மாணவர்கள் ஒன்று கூடலில் கலந்து கொண்டதுடன் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் என பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்தனர். தாம் கல்வி கற்ற பாடசாலை நாட்களின் நினைவுகளை மீட்டுவதாகவும் தமது பாடசாலைக்கு எதாவது ஒருவகையில் உதவ வேண்டும் என்ற நோக்கிலும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நீண்ட காலத்தின் பின்னர் கிடைத்த இந்த அரிய வாய்ப்பை தவறவிடக் கூடாதென்ற ஆசையில் வெளிநாடுகளில் இருந்தும் பல பழைய மாணவர்கள் வருகை தந்திருந்தனர். நாட்டின் பல இடங்களில் இருந்தும் இதில் கலந்து கொள்வதற்கு ஓடோடி வந்தவர்களின் எண்ணிக்கை பல நூறு. பழைய மாணவர்களைப் போலவே இங்கு கல்வி கற்பித்த முன்னாள் ஆசிரியர்கள் பலரும் தள்ளாத வயதிலும் ஆர்வமாக வந்து கலந்து கொண்டது பலரையும் வியப்பூட்டியது.

செப்டம்பர் 30 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் ஆண்களுக்கான நிகழ்வு வெலிகம முஸ்லிம் ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பமானது. பழைய மாணவர்கள் ஒன்றுசேர்ந்து நடைபவனியாக அறபா தேசியபாடசாலைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலை 6.00 மணி முதலே பழைய மாணவர்கள் வர ஆரம்பித்ததோடு பலரும் தான் கற்ற வகுப்பறைகளை தேடிச் சென்று பழைய நினைவுகளை மீட்கத் தவறவில்லை. கருப்பு காற்சட்டையும் வெள்ளை நிற சேர்டும் அணிந்து புத்தகப் பை , தண்ணீர் போத்தல், சாப்பாட்டுப் பெட்டி என வயது வித்தியாசமின்றி பலரும் நிறைந்திருந்தார்கள்.

ஊர்வலமாக வந்த பழைய மாணவர்களை கண்டு களிக்க வீதியின் இருபுறமும் ஊர்மக்கள் திரண்டிருந்தனர். பாடசாலை அதிபர் எம்.ரி.எம். முதஹ்ஹர் மற்றும் முன்னாள் அதிபர் ஏ.எம்.எம். ஆரிப் உள்ளிட்ட ஆசிரியர்கள் வாயிலுக்கு அருகில் இருந்து இன்முகத்துடன் பழைய மாணவர்களை வரவேற்றனர்.

அறபா மைதானத்தில் ஆண்டு அடிப்படையில் பழைய மாணவர்கள் நிறுத்தப்பட்ட பின்னர் தேசிய கீதம் மற்றும் பாடசாலை கீதத்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. தேசிய கொடியை முன்னாள் அதிபர் ஏ.எம்.எம். ஆரிபும் பாடசாலைக் கொடியை பாடசாலையின் அதிபர் எம்.ரி.எம். முதஹ்ஹரும் பழைய மாணவர் சங்க கொடியை பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் நுஸ்ரியும் ஏற்றி வைத்தனர்.

முன்னாள் அதிபர் ஏ.எம்.எம். ஆரிப், அன்றைய நாள் அதிபராக தலைமை தாங்கி அன்றைய பாடசாலைக்கான காலைக்கூட்ட நிகழ்வுகள் கிராத்துடன் இனிதே ஆரம்பமானது. அதன் பின்னர் அன்றைய நாள் அதிபரின் உரை இடம் பெற்றது.

மறக்காமல் உடற்பயிற்சிக்கும் நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. தலைமை உரையின் போது தனது கடந்த கால அனுபவங்களை முன்னாள் அதிபர் ஆரிப் பகிர்ந்து கொள்ளத் தவறவில்லை.

மணி அடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வகுப்பறைகளுக்கு மாணவர்கள் வரிசையாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். அத்தோடு ஒவ்வொரு வகுப்பிற்கும் ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு அவர்களும் வகுப்பறைகளுக்கு சமுகமளித்தார்கள். வகுப்பறைகளில் மாணவர் அறிமுகம்,பழைய நினைவுகளை மீட்டல், பழைய அனுபவப் பகிர்வு ,கூத்து கும்மாளம் என இனிமையாக கடந்து சென்றது. சில வகுப்புகளில் பாட்டுச்சத்தம் விசில் ஒலியுடன் களைகட்டியது. சில வகுப்பறைகள் அரட்டை அடிக்கும் சத்தத்தினால் அதிர்ந்தது.

அதனைத் தொடர்ந்து காலை உணவிற்கான இடைவேளை வழங்கப்பட்டதோடு மீண்டும் மணி அடிக்க மாணவர்கள் அனைவரும் மீண்டும் மைதானத்தில் ஒன்று கூடினார்கள்.

"அறபாவை மேலெழச் செய்வோம்" என்ற தொனிப் பொருளில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆரம்ப நிகழ்வாக பாடசாலையின் அதிபர் எம்.ரி.எம். முதஹ்ஹரின் உரையை தொடர்ந்து பழைய மாணவர் சங்க "uplift 2030" குழுத் தலைவர் அஷ்கர் uplift 2030 நிகழ்வை அறிமுகப்படுத்தினார். இதன்போது பாடசாலையின் எதிர்கால முப்பரிமாண வரைவுக் காணொளி காட்சிப்படுத்தப்பட்டது. மேலும் நாடறிந்த பேச்சாளர் பாதிர் முஹிதீன் அவர்களின் மிகச்சிறப்பான உரை இடம்பெற்றது. பல்வேறு மாணவர் குழுக்களும் 2030 கனவை நிறைவேற்றுவதற்கான தமது ஒத்துழைப்பை வெளியிட்டிருந்ததோடு பெருமளவு தொகை பணம் வழங்கவும் அவர்கள் முன்வந்திருந்தனர். சுமார் இரண்டரைக் கோடி அளவில் பெறுமதியான பல வேலைத்திட்டங்கள் பழைய மாணவர்களினால் பொறுப்பேற்கப்பட்டன.

அதேநேரம், பாடசாலையின் பழைய மாணவர்களான அஸ்ஹர் குடும்பத்தினரால் சுமார் எழுபது இலட்சம் பெறுமதியில் அல்ஹாஜ் எம். எம். அஸ்ஹர் ஞாபகார்த்த வாசிகசாலை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறந்து வைக்கும் சிறப்பு வைபவம் நடைபெற்றது. ளுஹர் தொழுகையுடன் மதிய உணவு பாடசாலையில் வழங்கப்பட்டது.

பகல் போசனத்தின் பின்னர் கலா மன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் பழைய மாணவர்கள் பலரதும் பாடல்கள், மற்றும் நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. தமது பள்ளித் தோழர்களை உற்சாகப்படுத்தும் வகையில் விசில் சத்தம் ஒலித்ததோடு கரகோசம் எழுப்பவும் அவர்கள் தவறவில்லை.

நேரம் செல்வது தெரியாமல் பழைய மாணவர்கள் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களில் திரண்டிருந்து நிகழ்வுகளை ரசித்தார்கள்.

சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்த போதும் பலரதும் பிராத்தனையினால் அன்றைய தினம் மழை பெய்யாததினால் நிகழ்வுகள் இனிதாக நடந்து முடிந்தன. இளம் அறிவிப்பாளர் மொஹமட் சபர் நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக தொகுத்து வழங்கியிருந்தார்.

பசுமையான நினைவுகளுடன் பழைய மாணவர்களும் முன்னாள் ஆசிரியர்களும் கலைந்து சென்றதோடு தற்போதைய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க செயற்பாட்டு உறுப்பினர்களின் முகங்களில் வெற்றிப் பெருமிதம் தெரிந்தது. அன்றுடன் அவர்களின் பணி நிறைவடையவில்லை.

**★ பெண்களின் ஒன்றுகூடல்**

மறுநாள் நடைபெறும் பெண்களுக்கான நிகழ்வுகளின் முன்னேற்பாடுகள் அடுத்து ஆரம்பித்தன. மறுநாள் காலை மீண்டும் ஒருநாள் பள்ளிக்கு நிகழ்வு ஆரம்பமானது. இதில் பெண்கள் அதிக ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். கருப்பு நிற ஹபாயாவும் இளஞ்சிவப்பு நிற பர்தாவும் அணிந்து அனைவரும் வயது வேறுபாடின்றி இதில் பங்கேற்றார்கள். பெண்களும் ஊர்வலமாக அறபா தேசிய பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டதோடு அங்கும் காலைக் கூட்டம், வகுப்பறை நிகழ்வுகள் கலாமன்றம் என அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடந்து முடிந்தன.

ஆண்களுக்கு தமது சகாக்களை சந்திக்கவும் அரட்டை அடிக்கவும் ஒன்றுகூடவும் வாய்ப்புகள் இருந்த போதும் பெண்களுக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. எனவே இந்த மீண்டும் பள்ளிக்கு நிகழ்வை ஆண் பழைய மாணவர்களை விட பெண்கள் அணுஅணுவாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். சிலர் 35 40 வருடங்களின் பின்னர் தமது பள்ளித்தோழிகளை சந்திக்க இந்த நிகழ்வு வழிகோலியது. பாடசாலை விட்டுச் சென்ற பின்னர் அன்று தான் மீண்டும் பாடசாலையில் காலடி எடுத்து வைத்தவர்களும் இருக்கவே செய்கின்றனர். அதனால் தான் போலும் வகுப்பறைகளில் பெண் பழைய மாணவிகள் ஆட்டம் பாட்டம் ,கொண்டாட்டம் ,அரட்டை என இன்பமாக கழித்தாக தெரிகிறது.

மீண்டும் ஒருநாள் பள்ளிக்கு நிகழ்வானது பாடசாலைக்கும் பழைய மாணவர்களுக்கும் இடையிலான நெருக்கத்தை அதிகரித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. விடுபட்ட உறவுகள் தமது உறவை புதுப்பித்துக் கொள்ளவும் புதிய நட்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் பழைய நினைவுகளை கண்முன் கொண்டுவரவும் வாய்ப்பை அளித்துள்ளது. 2030 இல் பாடசாலையை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்று பட வேண்டும். அது பாடசாலை நிர்வாகத்தினதும் பழைய மாணவர் அமைப்பினதும் ஊர் மக்களினதும் அவாவாகும்.



ஷம்ஸ் பாஹிம்
(வெலிகம அறபா பழைய மாணவன், 1991 சா/த குழு)

# நாவலப்பிட்டி தோட்டப்புறங்களில் பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)



நாவலப்பிட்டி பகுதியிலுள்ள தோட்டப்புறங்களில் பாடசாலை இடைவிலகங்கள் அதிகரித்துவருவதாக கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

தோட்டப்புற பாடசாலைகளில் 30சதவீதத்துக்கும் அதிகமான பாடசாலை இடைவிலகல் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நாவலப்பிட்டி நகரை அண்டிய தமிழ் பாடசாலையை தரமுயர்த்தி அப்பாடசாலைக்கு சகல வளங்களையும் வழங்கிய போதும் கடந்த சில மாதங்களாக மாணவர்கள் வருகை குறைந்துள்ளது. மேலும் இப்பாடசாலையில் மாணவர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளில் தரம் குறைந்த நிலையில் உள்ளது. அதற்கு ஆசிரியர் பற்றாக்குறை முதற்காரணம். அரசாங்கம் அனுமதி வழங்கினால் இப்பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை நீக்க நடவடிக்கை எடுப்பேன் என அவர் தெரிவித்தார்.

# ரயிலுக்காக காத்திருந்தவர் திடீர் மரணம்

ஹற்றன் ரயில் நிலையத்தில் ரயிலுக்காக காத்திருந்த பயணியொருவர் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

மஸ்கெலியா, நல்லத்தண்ணி முல்லுகாமம் கீழ் பிரிவை வசிப்பிடமாகக் கொண்ட பி.எஸ். ஆறுமுகம் (வயது 70) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ரயில் வரும் வரையில் பயணிகள் ஓய்வெடுக்கும் கதிரையில் அமர்ந்திருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்திய சாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழித் தினப் போட்டிகளில்

# மடுல்சீமை வெறலபத்தன தமிழ் வித்தியாலயம் பசறை கல்வி வலய மட்டத்தில் முதலிடம்




(பசறை நிருபர்)

ஊவா மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டியில் பசறை கல்வி வலயத்துக்குட்பட்ட மடுல்சீமை வெறலபத்தன தமிழ் வித்தியாலயம் (ஆரம்ப பாடசாலை) பசறை வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

அதன்படி முதலாம் பிரிவில் வாசிப்பு போட்டியில் செல்வி. ஐ.பிரித்தீஷா முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளார். முதலாம் பிரிவில் பாவோதல் போட்டியில் செல்வி. ட.மிருந்தா இரண்டாமிடத்தையும், வில்லுப்பாட்டு திறந்த போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களான ஐ.பிரித்தீஷா, ஆர்.கனுஷான், பி.லுக்சான், வீ.ஹரிவர்ஷன், கே.சுதேஷன், எம்.மதுஷான் மற்றும் ஜெ. பிரதிஷ்டன் ஆகியோர் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். குறைந்த வளங்களுடன் கஷ்டப் பிரதேச பாடசாலையிலிருந்து போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிப் பெற்ற மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதாக பாடசாலை அதிபர் ஆ.ரமேஷ் தெரிவித்தார்.



மனித அபிவிருத்தி தாபனத்தின் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ' சிறுவர்களுக்கு எதிரான சமூகப் பாகுபாட்டை நிறுத்துவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் சிறார்களின் விழிப்புணர்வு கலை, கலாசார நிகழ்வுகள் கொட்டகலை கேம்பிரிஜ் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மனித அபிவிருத்தி தாபனத்தின் தலைவர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம், மத்திய மாகாண மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நிரஞ்சன் டயஸ் சுமனசேகர, தலவாக்கலை பிரதேச செயலாளர் சசிபிரபா,ஹற்றன் பொலிஸ் நிலையத்தின் பெண்கள், சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் பிரிவு அதிகாரி குமாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதுடன் சிறார்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.
(படம் மாவத்தகம தினகரன் நிருபர்)


## இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படை

## விலை மனுக்கோரல் (IFB)

(பழுதுபார்ப்பதற்கான ஜீப் வண்டிகள் )

01. தளபதி / விசேட அதிரடிப்படை, இலக்கம் 223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, தளபதியினால், பின்வருவனவற்றை கொள்முதல் செய்வதற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல | ஒப்பந்த இலக்கம் | வாகன இலக்கம் | ஆவணக் கட்டணம் (ரூ.) | மதிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்புக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| ஜீப் வண்டிகளை புதுப்பிப்பதற்கு தேவைப்படும் உதிரிபாகங்களை கொள்வனவு செய்வதற்காக | | | | |
| 1. | STF/LOG/C/149/2023 | 32-2293 | 1,000.00 | 40,000.00 |
| 2. | STF/LOG/C/150/2023 | 50-9002 | 1,000.00 | 40,000.00 |
| 3. | STF/LOG/C/151/2023 | 32-2290 | 1,000.00 | 40,000.00 |
| 4. | STF/LOG/C/152/2023 | 50-8999 | 1,000.00 | 40,000.00 |
| | ஜீப் வண்டிகளை புதுப்பிப்பதற்காக | | | |
| 5. | STF/LOG/C/67/2023 | 32-3409 | 2,000.00 | 70,000.00 |
| 6. | STF/LOG/C/68/2023 | 32-2311 | 2,000.00 | 70,000.00 |
| 7. | STF/LOG/C/69/2023 | 32-2512 | 2,000.00 | 60,000.00 |
| 8. | STF/LOG/C/75/2023 | 32-2310 | 2,000.00 | 70,000.00 |
| 9. | STF/LOG/C/147/2023 | 32-3413 | 2,000.00 | 70,000.00 |
| 10. | STF/LOG/C/148/2023 | 32-4681 | 2,000.00 | 70,000.00 |
| 11. | STF/LOG/C/164/2023 | 61-7679 | 3,000.00 | 75,000.00 |
| 12. | STF/LOG/C/165/2023 | 61-7778 | 3,000.00 | 75,000.00 |
| 13. | STF/LOG/C/166/2023 | 61-7779 | 3,000.00 | 75,000.00 |

02. **2023.10.18 ஆம் திகதி 10.30** மணிக்கு விசேட அதிரடிப்படை தலைமையகம், கோனஹேன, கடவத்தை. முன்மனுக் கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2023.10.04** ஆம் திகதி முதல் **2023.10.18** வரை அனைத்து வாகனங்களையும் ஒரே இடத்தில் ஆய்வு செய்யலாம்.

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

04. மேலே குறிப்பிட்டுள்ள வாகனங்கள் போலியல்வாத உதிரிபாகங்களைப் பயன்படுத்தி பழுதுபார்க்கப்பட வேண்டும் மற்றும் பழுதுபார்க்கும் போது விசேட அதிரடிப்படையின் தொழில்னுட்பக் குழு வாகனங்களை தொடர்ந்து ஆய்வு செய்யும்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, விசேட அதிரடிப்படை, பணிப்பாளர் / கோக்குவரத்து அவர்களிடம் பெற்றுக்கொள்ளவதுடன், **2023.10.04 ஆம் திகதி முதல் 2023.10.25 ஆம் திகதி வரை** பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் **காலை 09.00** மணி முதல் **மாலை 15.00** மணி நேரம் வரை மனு ஆவணங்களை பரிசீலனை செய்ய முடியும்.

06. தகுதியான அனைத்து மனுதாரர்களும் குறித்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற சட்டப்பூர்வமான உரிமையை கொண்டுள்ளனர். மனுதாரர்கள் தமது வியாபாரத்தினை பதிவு செய்திருத்தல் வேண்டுமென்பதுடன், உங்களால் சமர்ப்பிக்கப்படும் மனுக்களின் பெறுமதியானது ரூ.05 மில்லியனுக்கு அதிகமானதாக இருக்குமாயின் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் (Public Contract Act) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக அமையும். மனுதாரரின் பெயரை தேசிய கொள்வனவு ஆணைக்குழுவில் (National Procurement Commission) தவறாக ஆவணத்துடன் சேர்க்கக்கூடாதுதென்பதுடன் மேலதிக விபரங்கள் மனு ஆவணத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

07. எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் **2023.10.04** ஆம் திகதியிலிருந்து **2023.10.25** ஆம் திகதி வரை பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **மு.ப. 09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை சமர்ப்பித்து இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்களால் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்திற்கு மனுகோரல் விண்ணப்ப படிவம் ஒன்று மட்டுமே வழங்கப்படும்.

08. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2023.10.26** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, விசேட அதிரடிப்படை தலைமை அலுவலகத்தின் கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் அல்லது மனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தனிப்பட்ட முறையில் சமூகமளிக்கும் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு முன்னிலையில் **2023.10.26** ஆம் திகதி **இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, விசேட அதிரடிப்படை, தலைமையக கேட்போர் கூடத்தில் பி.ப.02.00 மணிக்கு மனுக்கள் திறக்கப்படும்.** மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் பங்கேற்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை பெற வேண்டும். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அனுமதியை வழங்கத் தவறிய எந்த முகவரும் அச்சந்தர்பத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

09. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.

10. அனைத்து மனுக்களும், மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
    i. இலங்கையில் செயல்படும் வணிக வங்கியிடமிருந்து மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட பிணையாளராக இருத்தல் வேண்டும்.
    ii. மனு படிவ தொகுப்பின் 4 ஆம் பிரிவில் இல் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தின் படி மனுப்படிவம் இருக்க வேண்டும்
    iii. மனுப் பிணையானது தளபதி / விசேட அதிரடிப்படை என்ற பெயரில் இருக்க வேண்டும்.
    iv. மனுப் பிணையினை பணமாக வைப்புச்செய்யும் போது, கணக்காளர் (கட்டணம்) செலுத்தி ரசீதைப் மனு ஆவணங்களுடன் இணைக்கப்படவேண்டும்.
    v. மனுக்கள் **2023.10.26** ஆம் திகதி முதல் **2024.02.21** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

11. வழங்கப்படும் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையை கொள்முதல் குழுவினருக்கு உண்டு. கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாக காணப்படும்.

12. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ளலாம்.
விலாசம் தொலைப்பேசி இலக்கம்

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் / தளவாடங்கள் | பிரதான | - 011-2505933 / 2556506 |
| விசேட அதிரடிப்படை | பொது | - 011 2500471 / 2589741 நீட்டிப்பு - 251 |
| இல-223, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07. | பெக்ஸ் | - 011-2556506 |
| பணிப்பாளர் / போக்குவரத்து | நேரடி தொடர்பு | - 011-2505933 |

தளபதி,
விசேட அதிரடிப்படை.



## விலைமனு கோரல்

## புத்தளம் பிரதேச சபை

### 2024ஆம் ஆண்டிற்கான சபையின் சொத்துக்களைப் பாவித்தல் மற்றும் வியாபார உரிமைகள் குத்தகைக்கு விடல்

புத்தளம் பிரதேச சபையின் சொத்துக்களைப் பாவித்தல் மற்றும் வியாபார உரிமைகள் (மாட்டிறைச்சிக் கடை / பன்றியிறைச்சிக் கடை / கோழியிறைச்சிக் கடை / ஆட்டிறைச்சிக்கடை/மீன் விற்பனை நிலையம் /பல்நோக்கு கட்டிடத்தின் பொது மலசலகூடம், தேங்காய் விளைச்சல், வாகன தரிப்பிடம், முந்தல் வாரச்சந்தை மற்றும் கடை அறைகள்) 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 01ம் திகதியிலிருந்து 2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு உட்பட்ட காலத்திற்கான குத்தகைக்கு விடுதல் என்னால் 2023.10.18 ம் திகதி மு.ப. 11.00 மணி வரை ஏலம் கோரப்படும்.

காரியாலயத்தால் நியமித்த தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளும் டென்டர் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய பூரணப்படுத்தி முத்திரை பொறிக்கப்பட்டு “செயலாளர், புத்தளம் பிரதேச சபை, மதுரங்குளி.” எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். நேரடியாக கையளிப்பதாயின் சபையின் பிரதான காரியாலயத்தில் காணப்படும் ஏலப் பெட்டியினுள் இட வேண்டும்.

ஏல விண்ணப்பப்பத்திர விநியோகமானது 2023.10.04 ம் திகதியிலிருந்து 2023.10.17 ம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 09.00 மணியிலிருந்து பி.ப 02.00 மணிவரை நடைபெறும். ஆகக் குறைந்த ஏலப் பணம் ரூ.50,000.00 அல்லது அதற்கு குறைந்த பெறுமதியுள்ள சொத்துக்களுக்காக டென்டர் விண்ணப்பப் பத்திர தொகை ரூ.525.00 ஆகுவதோடு ஆகக் குறைந்த ஏலப் பணம் ரூ.50,000.00 அல்லது அதற்கு கூடிய பெறுமதியுள்ள சொத்துக்களுக்காக டென்டர் விண்ணப்பப் பத்திர தொகை ரூ.1025.00 ஆகும்.

ஏல விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள வருகை தரும் சந்தர்ப்பங்களில் கீழ் குறித்த ஆவணங்கள் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் தாங்கள் பெற விரும்பும் ஏலத்திற்காக புத்தளம் பிரதேச சபை அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரத்திற்கான தொகை மற்றும் மீளளிக்கப்படக் கூடிய ஏல வைப்புப் பணத்தை (ஏலப் பிணைப் பணம் மற்றும் ஆகக் குறைந்த ஏலப் பணம்) சபையில் வைப்புச் செய்ய முடியும்.

01. தேசிய அடையாள அட்டை அல்லது ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய கடவுச் சீட்டு.

02. கிராம சேவகர் மூலம் வழங்கப்படும் பதிவு சான்றிதழ்

ஏலமானது 2023.10.18 ம் திகதி மு.ப 11.30 மணிக்கு புத்தளம் பிரதேச சபையின் பிரதான காரியாலயத்தில் இடம்பெறும். அத்தினத்தில் ஏல உரிமையாளர் அல்லது அவரது பதிலி கலந்து கொள்ள முடியும்.

குறித்த தினத்தில் குறித்த நேரத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படாத மற்றும் குறித்த நிபந்தனைகளைப் பின்பற்றாத ஏலப் பத்திரங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். டென்டர் மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நாட்களில் தொடர்பு கொள்ளவும்.

**தொ.பே.இலக்கம் - 032-2268002.**

**ஏ.எம்.எம்.செனேவிரத்ன,
செயலாளர்,
புத்தளம் பிரதேச சபை,
மதுரங்குளி.**

2023.10.02
புத்தளம் பிரதேச சபையிலிருந்து,

**2024 ஆம் ஆண்டிற்கான சபையின் சொத்துக்கள் மற்றும் வியாபார உரிமைகளை குத்தகைக்கு கொடுத்தல் - புத்தளம் பிரதேச சபை**

**குறைந்த பட்ச ஏல நிரணயம்**

| தொடர் இலக்கம் | சொத்துக்கள் மற்றும் வியாபார உரிமை தொடர்பான விபரங்கள் | ஆகக்குறைந்த ஏலம் | டென்டர் விண்ணப்ப தொகை (ரூ) | ஏல பாதுகாப்பு வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| மாட்டிறைச்சிக்கடை | | | | |
| 1 | மதுரங்குளி மாட்டிறைச்சிக்கடை | 365,000.00 | 1000.00 | 29,200.00 |
| 2 | பாலாவி மாட்டிறைச்சிக்கடை | 294,500.00 | 1000.00 | 23,560.00 |
| 3 | வெட்டாளை மாட்டிறைச்சிக்கடை. | 236,500.00 | 1000.00 | 18,920.00 |
| 4 | மன்னார் வீதி 4ம் கட்டை மாட்டிறைச்சிக்கடை | 50,000.00 | 1000.00 | 5,000.00 |
| 5 | நாகவில் மாட்டிறைச்சிக்கடை | 486,000.00 | 1000.00 | 38,880.00 |
| 6 | ரத்மல்யாய மாட்டிறைச்சிக்கடை | 186,000.00 | 1000.00 | 14,880.00 |
| 7 | அடப்பனாவில்லு மாட்டிறைச்சிக்கடை | 240,000.00 | 1000.00 | 19,200.00 |
| 8 | “கீரியன்கள்ளி மாட்டிறைச்சிக்கடை | 25,000.00 | 500.00 | 2,500.00 |
| 9 | அல்காசிம் விலேஜ் மாட்டிறைச்சிக்கடை | 25,000.00 | 500.00 | 2,500.00 |
| பன்றி இறைச்சிக்கடை | | | | |
| 10 | மதுரங்குளி பன்றி இறைச்சிக்கடை | 90,610.00 | 1000.00 | 9,061.00 |
| 11 | வேலுசுமனபுர பன்றி இறைச்சிக்கடை | 140,000.00 | 1000.00 | 11,200.00 |
| 12 | முந்தல் பன்றி இறைச்சிக்கடை | 52,000.00 | 500.00 | 5,200.00 |
| 13 | அட்டவில்லு பன்றி இறைச்சிக்கடை | 5,000.00 | 500.00 | 500.00 |
| 14 | நவதன்குளம் பன்றி இறைச்சிக்கடை | 25,000.00 | 500.00 | 2,500.00 |
| 15 | கீர்த்திசிங்ஹகம பன்றி இறைச்சிக்கடை | 9,275.00 | 500.00 | 927.50 |
| 16 | மத்திய அட்டவில்லு பன்றி இறைச்சிக்கடை | 5,000.00 | 500.00 | 500.00 |
| 17 | சிரம்பியடி பன்றி இறைச்சிக்கடை. | 7,500.00 | 500.00 | 750.00 |
| 18 | முந்தல் ஏக்கர் 60 பன்றி இறைச்சிக்கடை | 5,100.00 | 500.00 | 510.00 |
| 19 | கல்லடி பன்றி இறைச்சிக்கடை | 5,000.00 | 500.00 | 500.00 |
| கோழி இறைச்சிக்கடை | | | | |
| 20 | மதுரங்குளி கோழி இறைச்சிக்கடை இலக்கம் 01. | 225,000.00 | 1000.00 | 18,000.00 |
| 21 | மதுரங்குளி கோழி இறைச்சிக்கடை இலக்கம் 02 | 200,000.00 | 1000.00 | 16,000.00 |
| 22 | சுகதகம கோழி இறைச்சிக்கடை | 14,850.00 | 500.00 | 1,485.00 |
| ஆட்டிறைச்சிக்கடை | | | | |
| 23 | ரத்மல்யாய ஆட்டிறைச்சிக்கடை | 16,500.00 | 500.00 | 1650.00 |
| மீன் விற்பனை | | | | |
| 24 | மதுரங்குளி மீன் விற்பனை கடை | 395,000.00 | 1000.00 | 31,600.00 |
| வேறு | | | | |
| 25 | பலநோக்கு கட்டிடத்தின் பொது மலசலகூடம்: | 12,000.00 | 500.00 | 1,200.00 |
| 26 | முந்தல் வாரச்சந்தை | 26,000.00 | 500.00 | 2,600.00 |
| 27 | போதிராஜபுர கடை அறை இல:-01 | 27,000.00 | 500.00 | 2,700.00 |
| 28 | போதிராஜபுர கடை அறை இல-02 | 18,000.00 | 500.00 | 1,800.00 |
| 29 | மதுரங்குளி ஞாயிறு சந்தை வாகன தரிப்பிடம். | 500,000.00 | 1000.00 | 40,000.00 |
| தேங்காய் விளைச்சல் | | | | |
| 30 | ஏக்கர் 60 இடத்தின் தேங்காய் விளைச்சல் (36 மரங்கள்) | 17,000.00 | 500.00 | 1700.00 |
| 31 | சரணகம களப்பு ஒதுக்கப்பட்ட இடத்தின் தேங்காய் விளைச்சல் (18 மரங்கள்) | 8,000.00 | 500.00 | 800.00 |

சகல சொத்துக்கள் மற்றும் வியாபார உரிமங்களை குத்தகைக்கு பெற்றுக்கொள்ள விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் அனைத்து விண்ணப்பதாரர்களும் அச்சந்தர்ப்பத்திலேயே ஏல பாதுகாப்பு வைப்புத்தொகை புத்தளம் பிரதேச சபையின் காசாளரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

# விலைக் கோரல் அறிவித்தல் - 2023.10.04

பின்வரும் வேலைகள் / வழங்கல்லுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | சிவில் கேள்விகள் | | | | | | |
| 01 | களுத்துறை பிராந்தியத்திலுள்ள நீர் வழங்கல் திட்டங்களில் நீர்க்குழாய் வழிகளின் நீர்க் கசிவு திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: RSC/W-S/P&C/C/LK(01)/KAL/ O&M/2023/31 | 20,000/- + VAT ** | ரூபா 640,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 64.03 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 26.10.2023 மு.ப. 10.00 மணி |
| 02 | ஹபலக்காவ மீள் குடியேற்ற நீர் வழங்கல் திட்டத்தில் பகுதி II நிர்மாணத்தின் மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல: RSC(SAB)/AGM(KEG)/RES/ ARANAYAKA/ CIVIL/2023/85 | 6,000/- + VAT ** | ரூபா 100,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 9.3 மில்லியன் | பிஔநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 18.10.2023 பி.ப. 2.00 மணி |
| 03 | ஹபலக்காவ மீள் குடியேற்ற நீர் வழங்கல் திட்டத்தில் படலை மற்றும் தொடர் வேலி நிர்மாணத்தின் மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல: RSC(SAB)/AGM(KEG)/RES/ ARANAYAKA/ CIVIL/2023/86 | 6,000/- + VAT ** | ரூபா 67,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.7 மில்லியன் | பிஔநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 18.10.2023 பி.ப. 2.00 மணி |
| 04 | வெள்ளவாய நீர் வழங்கல் திட்டத்திலுள்ள அல்கொடார உள்ளீர்ப்பின் புனரமைப்பு வேலைகள்<br>ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/ WELLAWAYA/2023/82 | 12,500/-+ VAT ** | ரூபா 300,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 20.0 மில்லியன் | பிஔநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 18.10.2023 பி.ப. 2.00 மணி |
| 05 | லக்கல மஹாவெலி நீர் வழங்கல் திட்டம் - மந்தநிலை மணல் வடிகட்டியின் வடிகட்டி ஊடகத்தை பிரதியீடு செய்தல் மற்றும் ஏனைய புனரமைப்பு வேலைகள்<br>ஒப்பந்த இல: RSC-C/DEV/CIVIL/RECH/ LAGGALA/2023/197 | 4,000/-+ VAT | ரூபா 32,200/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C7, C8 அல்லது C9 தரத்தில் CIDA பதிவு | 3.21 மில்லியன் | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 18.10.2023 பி.ப. 2.00 மணி |
| | 2023-09-13ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது: கம்பொல நீர் வழங்கல் திட்டம் - கம்பொல பானபொக்க வீதி வீதியின் வருமானமற்ற நீர் குறைப்பிற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை பதித்தல் - ஒப்பந்த இல: RSC-C/P&D/LAYING/NRW/GAMPOLA/ 2023/157 - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-10-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் வரிகள் இல்லாமல் மதிப்பீட்டுக் கிரயம் 31.3 மில்லியன் ரூபா எனவும் மற்றும் தேவையான கேள்விப் பிணை முறி 313,000.00 ரூபா எனவும் திருத்தப்படல் வேண்டும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | வழங்கல் கேள்விகள் | | | | | | |
| 06 | 1500 தொன் நீர் சுண்ணாம்பை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: SUP&MM/CHEM/HL-04/2022/14RR | 35,000/-+ VAT ** | ரூபா 2,000,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1500 தொன் நீர் சுண்ணாம்பு வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 25.10.2023 மு.ப. 10.00 மணி |
| 07 | களத்துறை பிராந்தியத்திற்குத் தேவையான Stainless Steel Repair Clamps வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: W-S/P&C/S/DI(09)/KAL/RH/2023/60 | 4,000/-+ VAT | ரூபா 47,100/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் Stainless Steel Repair Clamps வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 4.7 மில்லியன் | பி.ஔ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946/0112637947 | 19.10.2023 மு.ப. 10.00 மணி |
| | M & E கேள்விகள் | | | | | | |
| 08 | களுத்துறை நீர் வழங்கல் திட்டத்திலுள்ள வஸ்கடுவ பம்பி இல்லத்திற்கு Variable Frequency Drive Starter சகிதம் Horizontal Shaft Driven Double Suction பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: W-S/M&E/S/EQU(07)/KAL/RH/2023/56 | 20,000/-+ VAT ** | ரூபா 674,000/- | நீர்ப் பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 27.10.2023 மு.ப. 10.00 மணி |
| 09 | களுத்துறை பிராந்திய முகாமையாளர் பிரதேசத்திலுள்ள தஹம்பஹன்கம நீர் வழங்கல் திட்டத்திற்கு End Suction Vertical Delivery Back Pull- Out Centrifugal பம்பித் தொகுதிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: W-S/M&E/S/EQU(03)/KAL/RH/2023/37 | 20,000/-+ VAT ** | ரூபா 615,000/- | நீர்ப் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 27.10.2023 மு.ப. 10.00 மணி |
| 10 | குருநாகல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் / சுகாதார நிலையங்களுக்கு RO/Nano பொறித்தொகுதிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: RSC(NW)/DEV/AWF/CRIWMP/KURU-Dist/2023/61 | 12,500/-+ VAT ** | ரூபா 166,000/- | Rivers Osmosis Plants வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 16.68 மில்லியன் | பிஔநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086<br>குருநாகல், (NW) பிஔ நிலையத்தில் 2023-10-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 25.10.2023 பி.ப. 2.00 மணி |
| 11 | மொனராகலை பிராந்தியத்திற்கு Auto Transformer type Motor Starter Unit with Enclosure வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/MONARAGALA/2023/65 | 6,000/- + VAT ** | ரூபா 107,250/- | Auto Transformer Motor Starter Unit with Enclosure வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 7.1 மில்லியன் | பிஔநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 18.10.2023 பி.ப. 2.00 மணி |
| 12 | ஹட்டன், பத்தனையிலுள்ள ஸ்ரீபாத தேசிய கல்லூரிக்கு 40kVA Prime Sound Proof மின்பிறப்பாக்கித் தொகுதியொன்றை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>ஒப்பந்த இல: RSC-C/CS/S&I/GENERATOR/ RWS/SPNC/2023/209 | 6,000/- + VAT ** | ரூபா 61,000/- | மின்பிறப்பாக்கி தொகுதிகள் வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br><br>பேராதனை, கெட்டம்பே, பிஔநி அலுவலகம், M&E பிரிவில் 2023-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:- 081-2492311) | 18.10.2023 பி.ப. 2.00 மணி |
| | சேவைக் கேள்விகள் | | | | | | |
| 13 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு (மேற்கு / வடக்கு) தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/SS/LS/RSC(O&M)/2023/47 | 20,000/- + VAT ** | ரூபா 785,000/- | தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகள் வழங்குவதில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 25.10.2023 மு.ப. 10.00 மணி |
| 14 | அம்பன்கங்க வருமானமற்ற நீர் குறைப்பிற்கான நீர்க்கசிவு திருத்தவேலைக்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: ජරාසමේ-ම/මළ/සේවා/ක්‍රිහාන/අඹන්ගඟ/2023/178 | 6,000/- + VAT ** | ரூபா 90,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | - | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br><br>கட்டுகஸ்தோட்ட, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081-2492311) | 18.10.2023 பி.ப. 2.00 மணி |
| 15 | தம்புள்ள நீர் வழங்கல் திட்டம் - வருமானமற்ற நீர் குறைப்பிற்கான நீர்க்கசிவு திருத்தவேலைக்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: ජරාසමේ-ම/මළ/සේවා/ක්‍රිහාන/දඹුල්ල/2023/179 | 6,000/- + VAT ** | ரூபா 90,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | - | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br><br>கட்டுகஸ்தோட்ட, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081-2492311) | 18.10.2023 பி.ப. 2.00 மணி |
| 16 | கலேவெல நீர் வழங்கல் திட்டம் - வருமானமற்ற நீர் குறைப்பிற்கான நீர்க்கசிவு திருத்தவேலைக்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: ජරාසමේ-ම/මළ/සේවා/ක්‍රිහාන/ ගලේවෙල/2023/180 | 4,000/- + VAT ** | ரூபா 76,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | - | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br><br>கட்டுகஸ்தோட்ட, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும்.<br>(T:P- 081-2492311) | 18.10.2023 பி.ப. 2.00 மணி |
| | வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் | | | | | | |
| 17 | தலைமை அலுவலகம் - (வர்த்தகப் பிரிவு) வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: DGM/COMMERCIAL/VEHICLE HIRE/2023/01 (R) | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 26.10.2023 மு.ப. 10.00 மணி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18 | பியகம கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: AGM(GCWRD)/BEPZ/HIRING VEHICLE/2022/18R | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 26.10.2023<br>மு.ப. 10.00 மணி |
| 19 | களனி பிராந்தியத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/SS/HIRING-VAN/KEL(O&M)/2023/55R | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 18.10.2023<br>மு.ப. 10.00 மணி |
| 20 | மத்திய தெற்கு பிராந்திய முகாமையாளருக்கு 02 எண்ணிக்கையான முச்சக்கர வண்டிகளை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CS/2022/211 R | 4,000/-+ VAT | ரூபா 2,000/- | ஆவணத்தின் பிரகாரம் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 18.10.2023<br>பி.ப. 2.00 மணி |

- ➢ இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112-692465 எனும் தொலைபேசி இலக்கத்தில் பிரதி மாநகர பொருளாளர் (வருமானம்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

## ஆசிய விளையாட்டுப் போட்டி:

# 3 மெய்வல்லுனர் இறுதிப் போட்டிகளில் இலங்கைக்கு இன்று பதக்க எதிர்பார்ப்பு

**சீனாவிலிருந்து நிரோஷான் பிரியங்கர**

சீனாவின் ஹான்சோ நகரில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கையின் பதக்க எதிர்பார்ப்பு கொண்ட பெண்களுக்கான 800 மீற்றர் மற்றும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகள் இன்று (04) நடைபெறவுள்ளன.

இதில் பெண்களுக்கான 800 மீற்றர் இறுதிப் போட்டி இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 4.55 மணிக்கு இடம்பெற விருப்பதோடு ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டி மாலை 6.05 மணிக்கும் அதற்கு முன்னர் பெண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டி பிற்பகல் 5.45 மணிக்கும் இடம்பெறவுள்ளது.





நேற்று காலை நடைபெற்ற 800 மீற்றர் ஆரம்ப சுற்று போட்டிகளில் பங்கேற்ற தருஷி கருணாரத்ன மற்றும் கயந்திகா அபேரத்ன முறையே இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களை பெற்ற நிலையில் இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

அதேபோன்று நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் ஆரம்ப சுற்றில் பங்கேற்ற இலங்கை அணி 3:06.60 நிமிடங்களில் போட்டியை நிறைவு செய்து இரண்டாவது இடத்தை பெற்றது. இதன் முதல் இடத்தைப் பிடித்த பிலிப்பைன்ஸ் அணி 3:06:15 நிமிடங்களில் போட்டியை நிறைவு செய்தது.

இதில் இலங்கை அணியில் தினுக்க தேஷான், பபசர நிகு, ராஜித்த ராஜகருணா மற்றும் பசிந்து கொடிகார ஆகியோர் இடம்பெற்றனர். எனினும் இன்றைய இறுதிப் போட்டியில் காலிங்க குமார மற்றும் அருண தர்ஷன இலங்கை அணியுடன் இணையவுள்ளனர். இதன் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய 9 அணிகளில் இலங்கை ஆரம்ப சுற்றில் 4 ஆவது இடத்தை பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் (02) நடைபெற்ற 400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை அணி இரண்டாவது இடத்தை பிடித்து வெள்ளிப் பதக்கத்தை வென்றபோதும் போட்டி விதியை மீறியதால் இலங்கை அணி தகுதி இழப்புச் செய்யப்பட்டது.

இலங்கை அணியினர் ஓடு தள விதியை மீறியதாலேயே தகுதி இழப்புச் செய்யப்பட்டனர். இதனால் 17 ஆண்டுகளின் பின்னர் மெய்வல்லுனர் போட்டியில் வென்ற வெள்ளிப் பதக்கத்தை இலங்கை இழக்க வேண்டி ஏற்பட்டது. இதில் போட்டியை ஆரம்பித்த அருண தர்ஷன ஓடு தளத்திற்கு வந்த நதீஷா ராமநாயக்கவுக்கு தடியை வழங்கும் சந்தர்ப்பத்தில் அருணவின் ஒரு கால் ஓடு தளத்தில் இருந்து விலகி இருந்தது விதி மீறலாக கூறப்பட்டது.

தவிர பெண்களுக்கான தூரம் பாய்தல் போட்டியில் பங்கேற்ற சாரங்கி சில்வா 6.14 மீற்றர் தூரம் பாய்ந்து 7ஆவது இடத்தை பெற்றதோடு இதன்போது அவர் தனது தனிப்பட்ட திறமையைக் கூட (6.65) நெருங்கவில்லை.

இம்முறை மெய்வல்லுனர் போட்டியில் குறிப்பிடத்தக்க அம்சமாக ஆண்களுக்கான 110 மீற்றர் தடை தாண்டி ஓட்டப்போட்டியில் இரு தங்கப் பதக்கங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இந்த போட்டியில் குவைட்டின் யாகூப் அல்யோஹா உடன் ஜப்பானின் ஷுன்யா டகாயாமா இருவரும் சரியாக 13.41 வினாடிகளில் போட்டியை நிறைவு செய்தனர். இதன் காரணமாக அவர்கள் இருவருக்கும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை அணியின் பதக்க எதிர்பார்ப்பான கிரிக்கெட் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் சஹன் ஆரச்சிகே தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி இன்று களமிறங்கவுள்ளது. இலங்கை அணி இன்று ஆப்கானிஸ்தானுடன் நேரடியாக காலிறுதிப் போட்டியில் ஆடவுள்ளது.

இதேவேளை நேற்று நடைபெற்ற முதல் காலிறுதிப் போட்டியில் இந்திய அணி நேபாளத்தை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியதோடு பாகிஸ்தான் அணி ஹொங் கொங்கை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

ஸ்குவஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் சீன அணிக்கு எதிராக நேற்று பி குழு போட்டியில் பங்கேற்ற இலங்கை 2–0 என வெற்றியீட்டியது. ஷமீல் வகீல் மற்றும் சனித்மா சினாலே இருவரும் இரண்டு சுற்றுகளையும் 11–6 என வெற்றி பெற்றனர்.

எனினும் ஆரம்ப சுற்றில் இரண்டு போட்டிகளில் தோல்வியை சந்தித்ததால் இலங்கை ஜோடி மூன்றாவது இடத்தை பிடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

இம்முறை விளையாட்டுப் போட்டியில் பட்மின்டன் போட்டியில் பங்கேற்றிருக்கும் ஒரே வீரரான விரேன் நெத்தசிங்க நேற்று ஆண்களுக்கான ஒற்றையர் போட்டியில் 16 பேர் சுற்றுக்கு தகுதி பெற்றார். 32 பேர் சுற்றில் மங்கோலிய வீரர் சுமியாசுரேன் எனக்பட்டுக்கு எதிராக போட்டியிட்ட அவர் முதல் சுற்றை 218 எனவும் இரண்டாவது சுற்றை 2116 எனவும் கைப்பற்றினார். 16 பேர் சுற்று போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

பாரம் தூக்குதல் போட்டியில் இலங்கையின் கடைசி பிரதிநிதித்துவமாக இந்திக திசாநாயக்க நேற்று 73 கிலோகிராம் எடைப் பிரிவில் பி குழு போட்டியில் பங்கேற்றதோடு அதில் அவர் ஒட்டுமொத்தமாக 285 கிலோ கிராம் எடையை தூக்கி இருந்தார். இதன்மூலம் அவர் நான்கு வீரர்களில் இரண்டாவது இடத்தை பெற்றபோதும் பதக்கம் வாய்ப்பை பெறத் தவறினார்.

போட்டிக்கு பின்னர் தினகரன் பத்திரிகைக்கு கருத்துத் தெரிவித்த இந்திக்க, குறைந்தது 300 கிலோகிராம் வரை எட்ட முயன்றதாகவும் அது வெற்றி அளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## எம்.சி.சி தலைவராக சங்கக்கார நியமனம்



மெரில்போர்ன் கிரிக்கெட் கழகத்தின் (எம்.சி.சி) உலகக் கிரிக்கெட் குழு தலைவராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இந்தக் குழுவில் அங்கத்துவம் பெற்றிருந்த சங்கக்கார இங்கிலாந்து முன்னாள் அணித் தலைவர் மைக் கெட்டினுக்கு பதில் புதிய தலைவராகியுள்ளார். இந்தக் குழுவில் சௌரவ் கங்குலி, ஜுலன் கொஸ்வாமி, ஹீதர் நைட், சுசி பேட்ஸ், கிளேர் கோனர், ஜஸ்டின் லங்கர், இயொன் மோர்கன், ரமிஸ் ராஜா, கிராம் ஸ்மித் மற்றும் ரிக்கி ஸ்கரிட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் துணை அமைப்பு ஒன்றாக இயங்கும் இந்தக் குழு விளையாட்டில் ஏற்படும் சிக்கல்களை பேசுவதற்கு வருடத்திற்கு இரு முறை கூடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 2002 வகுப்பினர் வெற்றி




தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 2002 வகுப்பினர் சம்பியன் கிண்ணத்தை வென்றனர். தெல்தோட்டை மெதகெகில ஸ்ரேன்ஜர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த தொடரில் 2003 வகுப்பினருக்கு எதிராக இடம்பெற்ற இறுதிப்போட்டியில் நவாஸ் தலைமையிலான அணி வெற்றியீட்டியது. அதேவேளை வயது மூத்த பழைய மாணவர்களுக்காக இடம்பெற்ற போட்டியில் சஹ்ரான் தலைமையிலான அணி வெற்றிபெற்றது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக 2003 வகுப்பு அணியின் தலைவர் அமீன் தெரிவு செய்யப்பட்டதோடு சிறந்த பந்துவீச்சாளராக 2002 வகுப்பு அணியின் ஷாபி தெரிவானார்.

## 2018 அணியினர் வெற்றி



அனுராதபுரம் சாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கால்பந்து போட்டியில் 2018 சாதாரண தர அணி சம்பியனானது. 10 அணிகள் கலந்துகொண்ட இந்தத் தொடரின் இறுதிப் போட்டி அனுராதபுரம் சாஹிரா கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்றது. இதில் 35 வயதுக்கு மேற்பட்ட பழைய மாணவர் அணியை 2018 சாதாரண தர அணி தோற்கடித்தது.

## இலங்கை அணியுடன் இணைகிறார் தீக்ஷன



உபாதைக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன இன்று (04) உலகக் கிண்ணத்திற்காக இலங்கை அணியுடன் இணையவுள்ளார்.

ஆசிய கிண்ண போட்டியின்போது தொடைப் பகுதியில் உபாதைக்கு உள்ளான தீக்ஷன கடந்த செப்டெம்பர் 26 ஆம் திகதி இந்தியா புறப்பட்டுச் சென்ற இலங்கை குழாத்துடன் இணையவில்லை. அவர் உயர் செயல்திறன் பிரிவில் தொடர்ந்து காயத்தில் இருந்து மீண்டும் வரும் சிகிச்சையை பெற்று வந்தார்.

இதேவேளை இலங்கை அணி நேற்று பங்கேற்ற ஆப்கானிஸ்தானுக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் அணித் தலைவர் தசுன் ஷானக்க பங்கேற்கவில்லை. பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது பயிற்சிப் போட்டியில் இடது முழங்கையில் வலியை உணர்ந்ததை அடுத்தே அவர் நேற்றைய போட்டியில் இடம்பெறவில்லை.

அவருக்கு பதில் இலங்கை அணிக்கு குசல் மெண்டிஸ் தலைவராக செயற்பட்டார்.

அதேபோன்று பங்களாதேஷுக்கு எதிரான பயிற்சிப் போட்டியின்போது வலது தோள்பட்டையில் வலியை உணர்ந்த குசல் ஜனித் பெரேராவும் நேற்றைய போட்டியில் விளையாடவில்லை.

## நாடு திரும்புகிறார் தனுஷ்க



பாலியல் வழக்கில் இருந்து சிட்னி நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ் குணதிலக்க சுமார் ஓர் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை திரும்புகிறார்.

குணதிலக்க தான் நாடு திரும்புவதற்காக விமானத்தில் இருந்து எடுத்த புகைப்படம் ஒன்றை சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ளார். அவர் நேற்று (03) இரவு 11 மணி அளவில் இலங்கையை வந்தடைய இருந்தார்.

சிட்னி பெண் ஒருவர் மீது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட குணதிலக்க மீதான வழக்கின் தீர்ப்பு சிட்னி டவுனிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சாரா ஹுக்கட்டினால் கடந்த வாரம் வழங்கப்பட்டது. அதில் குணதிலக்க மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் அவர் நிரபராதி என்றும் நீதிபதி தீர்ப்பளித்திருந்தார்.

எனினும் இலங்கை அணிக்காக எட்டு டெஸ்ட் உட்பட 100க்கும் அதிகமான போட்டிகளில் விளையாடி இருக்கும் குணதிலக்கவுக்கு இலங்கை கிரிக்கெட் சபையால் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்பதற்காக இலங்கை அணியுடன் சென்றிருந்தபோதே குணதிலக்க பாலியல் குற்றச்சாட்டில் அவுஸ்திரேலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் சபை அவர் மீது தடை விதித்திருந்தது.

இந்நிலையில் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து, குணதிலக்க மீதான தற்காலிக தடையை நீக்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று இலங்கை கிரிக்கெட் சபை முன்னதாக தெரிவித்திருந்தது.

“நிறைவேற்றுக் குழு இந்த வாரம் கூடி முடிவெடுக்கவுள்ளது. அதன் பின் தடை நீக்கப்பட்டு அவர் மீண்டும் இலங்கையில் கிரிக்கெட் ஆட முடியுமாக இருக்கும்” என்று இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை இளையோர்கள் பாகிஸ்தான் சுற்றுப்பயணம்



இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி ஒரு இளையோர் டெஸ்ட் மற்றும் ஐந்து இளையோர் ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக எதிர்வரும் ஒக்டோபர் 12ஆம் திகதி பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இதில் பாகிஸ்தான் இளையோர் அணிக்கு எதிரான 4 நாட்கள் கொண்ட இளையோர் டெஸ்ட் போட்டி ஒக்டோபர் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான 5 ஒருநாள் போட்டிகளும் ஒக்டோபர் 22 தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெற்றவுள்ளது. இந்த அனைத்துப் போட்டிகளும் கராச்சியில் உள்ள நசனல் பேங்க் அரங்கில் நடைபெறவுள்ளது.

19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் 2024 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் இலங்கையில் நடைபெறவுள்ள நிலையிலேயே இலங்கை இளையோர்களின் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புதிய மலேரிய தடுப்பூசிக்கு சுகாதார அமைப்பு பரிந்துரை



குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் மலேரியாவைக் கட்டுப்படுத்தும் இரண்டாவது தடுப்பு மருந்தைப் பயன்படுத்த உலக சுகாதார அமைப்பு பரிந்துரை செய்துள்ளது.

மலேரியாவைக் கட்டுப்படுத்துவதில் இன்னும் மலிவான, திறன்வாய்ந்த தடுப்பு மருந்து உலக நாடுகளுக்குக் கிடைத்திருப்பதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

புதிய R21 MatrixM தடுப்பு மருந்தை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உருவாக்கியது. அதனை இந்தியாவின் சீரம் கழகம் தயாரித்துள்ளது.

குழந்தைகளுக்கான மற்ற மருந்துகளைப் போன்றே புதிய தடுப்பு மருந்தின் விலை இரண்டிலிருந்து நான்கு டொலர் வரை இருக்கும் என்று உலக சுகாதார அமைப்பு கூறியது.

புர்க்கினா பாசோ, கானா, நைஜீரியா ஆகிய நாடுகளில் புதிய தடுப்பு மருந்துக்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# மூவருக்கு பௌதீகவியலில் நோபல்



அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளுக்குள் இருக்கும் எலக்ட்ரோன்களை ஆராய்வதற்கான சோதனைகளுக்காக இந்த ஆண்டு பௌதீகவியலுக்கான நோபல் பரிசு 3 விஞ்ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவீடன் தலைநகல் ஸ்டொக்ஹோமில் நேற்று (03) அறிவிக்கப்பட்ட இந்த விருதில் அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் சுவீடன் நாடுகளைச் சேர்ந்த பியர் அகோஸ்டினி, பிரென்ஸ் கிரவுஸ் மற்றும் அன்னே எல் ஹுலியர் ஆகிய விஞ்ஞானிகளின் பெயர்களே அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து பொருட்களிலும் காணப்படும் எலக்ட்ரோன் மூலக்கூறுகளின் இயக்கவியல் ஆய்வுக்காக ஒளியின் அட்டோசெகண்ட் துடிப்புகளை உருவாக்கும் சோதனை முறையை இவர்கள் கண்டுபிடித்துள்ளனர். நோபல் பரிசு விபரம் இந்த வாரம் முழுவதும் வெளியிடப்படவுள்ளது. கடந்த திங்கட்கிழமை மருத்துவத்திற்கான நோபல் பரிசு இரு விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்று இரசாயனவியலுக்கான நோபல் பரிசும், நாளை இலக்கியத்திற்கான நோபல் பரிசும் அறிவிக்கப்படவிருப்பதோடு வரும் வெள்ளிக்கிழமை அமைதிக்கான நோபல் பரிசை வெல்பவர் பெயர் வெளியிடப்படும். நோபல் பரிசை வெல்பவருக்கு தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் சுமார் ஒரு மில்லியன் டொலர் பணப்பரிசு வழங்கப்படும். விருதை வெல்பவர்கள் பணப்பரிசை பகிர்ந்துகொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 4ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# 2024ஆம் ஆண்டிற்கான கேள்வி மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்ளும் அறிவித்தல் கொடகவெல பிரதேச சபை

கொடகவெல பிரதேச சபைக்கு உரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் வார சந்தைகள் மாட்டிறைச்சிக்கடைகள், மீன் தட்டுகளை 2024-01-01முதல் 2024.12.31 வரையான ஒரு வருட காலத்திற்கும் கடை அறைகளை நீண்ட காலக் குத்தகைக்கும் வழங்குவதற்காக என்னால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் 2023 ஆம் ஆண்டிற்கான பதார்த்தங்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு மேற்கொள்ளப்படுவதுடன், அதற்கான மேலதிக விபரங்களை கொடகவெல பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. **கேள்விப்படிவங்களை வழங்கல் :- 2023.09.02 முதல் 2023.10.12 பி.ப. 3.00 வரை**
2. **கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் :- 2023.09.25 முதல் 2023.10.13 மு.ப. 10.00 வரை**
3. **கேள்விகளைத் திறத்தல் :- 2023.10.13 மு.ப. 11.30 இற்கு**

கேள்விகள் இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தப்பட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனத் தனித்தனியான உறைகளில் சேர்த்து, அவ்விரு உறைகளையும் ஒருறையில் உள்ளிட்டு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 2023.10.13 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "தலைவர், கொடகவெல பிரதேச சபை, கொடகவெல" என்ற முகவரிக்கு அனுப்பலாமென்பதுடன், அல்லது பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்க்கலாம். கேள்விகளை அடக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் கேள்வியின் பெயர் மற்றும் வருடம் குறிப்பிடப்படல் வேண்டும்.

**அட்டவணை இலக்கம் 01**

| தொடர் இலக்கம் | விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப்படாத ரூபா | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூபா | ஆகக் குறைந்த கேள்வி ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கொடகவெல வார சந்தை சனிக்கிழமை/ செவ்வாய்க்கிழமை | 800.00 | 205,017.50 | 4,100,350.00 |
| 02 | ரக்வான வார சந்தை ஞாயிற்றுக்கிழமை/ புதன் கிழமை | 800.00 | 49,620.00 | 992,400.00 |
| 03 | ரக்வான மாட்டிறைச்சிக் கடை | 800.00 | 65,100.00 | 1,302,000.00 |
| 04 | கொடகவெல வார சந்தை மீன் தட்டு இலக்கம் 01 | 800.00 | 23,500.00 | 470,000.00 |
| | மீன் தட்டு இலக்கம் 02 | 800.00 | 23,100.00 | 462,000.00 |
| | மீன் தட்டு இலக்கம் 03 | 800.00 | 19,850.00 | 397,000.00 |
| | மீன் தட்டு இலக்கம் 04 | 800.00 | 22,830.50 | 456,610.00 |
| | பொதுக்கழிவறை | 800.00 | 1,950.00 | 39,000.00 |
| | ரக்வான பஸ் நிலைய பொது மலசலகூடம் | 800.00 | 18,000.00 | 360,000.00 |

**அட்டவணை இலக்கம் 02**

| கடைகள் அமைந்துள்ள வர்த்தகக் கட்டிடத் தொகுதி மற்றும் கடை அறைகளின் இலக்கம் | படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத) ரூபா | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூபா | ஆகக் குறைந்த கேள்வி ரூபா |
|---|---|---|---|
| ரக்வான பழைய வர்த்தக கட்டிடத் தொகுதியின் மேல் மாடி கடை அறைகள் | | | |
| இல. 12 | 750.00 | 6,500.00 | 325,000.00 |
| 15 | 750.00 | 5,994.00 | 299,700.00 |
| 24 | 750.00 | 5,000.00 | 250,000.00 |
| 29 | 750.00 | 5,000.00 | 250,000.00 |
| 30 | 750.00 | 5,000.00 | 250,000.00 |

**அட்டவணை இலக்கம் 03**

| கடைகள் அமைந்துள்ள வர்த்தகக் கட்டிடத் தொகுதி மற்றும் கடை அறைகளின் இலக்கம் | படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத) ரூபா | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூபா | ஆகக் குறைந்த கேள்வி ரூபா |
|---|---|---|---|
| மாதம்பே மீன் வர்த்தக கட்டிடத்தொகுதி கடை அறை இல 01 | | | |
| அறை இல 02 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 03 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 04 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 08 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 11 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 13 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 14 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 17 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 21 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 22 | 750.00 | 2640.00 | 132,000.00 |
| அறை இல 24 | 750.00 | 2640.00 | 132,000.00 |

**அட்டவணை இலக்கம் 04**

| கடைகள் அமைந்துள்ள வர்த்தகக் கட்டிடத் தொகுதி மற்றும் கடை அறைகளின் இலக்கம் | படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத) ரூபா | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூபா | ஆகக் குறைந்த கேள்வி ரூபா |
|---|---|---|---|
| மாதம்பே மீன் வர்த்தக கட்டிடத்தொகுதி களஞ்சிய அறை இல 01 | 750.00 | 2640.00 | 108,000.00 |
| அறை இல 02 | 750.00 | 2640.00 | 108,000.00 |
| அறை இல 03 | 750.00 | 2640.00 | 108,000.00 |

**அட்டவணை இலக்கம் 05**

**2024 ஆண்டிற்கான பதார்த்தங்கள்/ சேவை வழங்கல்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - கொடகவல பிரதேச சபை**

2024ஆம் ஆண்டிற்கான, பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் பண்டங்கள், சேவைகளை வழங்குவதற்காக மற்றும் நிர்மாணத்துறை ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக, தகைமையுள்ள உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களைப் பதிவு செய்துகொள்வதற்காகப் பின்வரும் நிபந்தனைகளிற்கமைவாக 2023.12.31 வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் நபர்கள், கொடகவெல பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொண்டு, அவ்விண்ணப்பப்படிவத்துடன் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று மற்றும் நிர்மாணத்துறை மற்றும் திருத்த வேலைகள் துறையின் (வாகனங்கள் உட்பட) பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் 2023.12.31 அன்று அல்லது அதற்கு முன்னர், "தலைவர், கொடகவெல பிரதேச சபை, கொடகவெல" என்ற முகவரிக்கு கையில் கிடைக்குமாறு அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம். பதிவுக் கட்டணம், முத்திரைக் கட்டணம் தொகையுடன் ரூபா 1,100.00 ஆகும். இக் கொடுப்பனவுகளை "தலைவர், கொடகவெல பிரதேச சபையின்" பெயரில் வரையப்பட்ட காசோலையொன்றின் மூலம் அல்லது காசாகச் செலுத்தப்படலாமென்பதுடன், காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களைத் தாங்கிவரும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், "வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பமொன்றின் மூலம், சேவையொன்று, வழங்கலொன்று அல்லது ஒப்பந்தமொன்றிற்காக மாத்திரம் பதிவு செய்துகொள்ளலாம்.

**01. வழங்கல் பதார்த்தங்கள்**

1. அலுவலக எழுது கருவிகள், நுகர்வோர் பண்டங்கள் சுகாதாரப்பாதுகாப்புப் பதார்த்தங்கள், கணனிகள் மற்றும் தொலைநகல் எழுதுகருவிகள்
2. அலுவலக, இயந்திரங்கள், தட்டச்சுக்கள், ரோணியோ இயந்திரங்கள், நிழற்படப்பிரதி இயந்திரங்கள் மற்றும் நேரக்குறிப்பு இயந்திரங்கள்.
3. இறக்குமதி செய்யப்பட்ட கணனிகள், ஒன்று சேர்க்கப்பட்ட கணனிகள், அச்சு இயந்திரங்கள் டோனர் காட்ரிஜ், ரிபன்கள், போன்றவை
4. அலுவலக மரத்தளபாடங்கள் மற்றும் உருக்குத்தளபாடங்கள்
5. கணனி துணை உறுப்புக்கள் மென்பொருட்கள்
6. மின் மற்றும் மின்னியல் உபகரணங்கள், வளி சீராக்கல் இயந்திரங்கள், வீதி விளக்குத்தொகுதிகள் மின் குமிழ்கள்.
7. மோட்டடார் வாகனங்களிற்கான உதிரிப்பாகங்கள் (டீசல்/ பெற்றல்/ நிர்மாணத்துறை இயந்திரங்கள்)
8. டயர், டியுப் மற்றும் பெற்றறிகள்
9. இறப்பர் முத்திரைகள் மற்றும் தின முத்திரைகள் மற்றும் பெயர்ப்பலகைகளை வழங்கல் மற்றும் தயாரித்தல்
10. அச்சுக் காகிதங்கள் மற்றும் "மை" வகைகள்
11. நூலகப் புத்தகங்கள்
12. துணி மனிகள், அலுவலக திரைச்சேலைகளை வழங்கல்
13. உணவு பானங்கள் மற்றும் உபசரிப்புகளிற்குத் தேவையான துணை உறுப்புக்களை வழங்கல்
14. அலுவலகப் பைகள் மற்றும் தோல் பண்டங்களை வழங்கல்
15. கட்டிடப் பொருட்கள் (சீமெந்து, இரும்பு, சுண்ணாம்பு டைல்ஸ், நிறப்பூச்சுக்கள், நீர்க்குழாய்கள் மற்றும் துணை உறுப்புக்கள்) போன்றவை.
16. கட்டிட பொருட்கள் (கல், மெட்டல், மணல்) செங்கற்கள், புளொக்கல், சட்டலின் பலகைகள், ஓடுகள், மூங்கில் மரப்பலகைகள், மூக்குகள், அரிந்த பலகைகள், தென்னை ஓலைகள், மற்றும் விறகு போன்றவை)
17. நிர்மாணத்துறைக்கான வாகனங்கள் (லொறிகள், ட்ரக்டர்கள் மற்றும் டிப்பர்கள் போன்றவை)
18. நிர்மாணத்துறைக்கான வாகனங்கள் (வீல் லோட், லோடர்கள், டோசர் கிரேடர்கள், தீரோல ட்ரக்டர் போன்றவை)
19. களை நாசினிகள், பீடை நாசினிகள், கிருமி நாசினிகள், துர்வாடை நாசினிகளை வழங்கல்

**02. சேவை வழங்கல்கள்**

1) மோட்டார் வாகனங்களின் திருத்த வேலைகள் (டீசல், பெற்றோல், வாகன நிர்மாண இயந்திரங்கள்)
2) மோட்டார் வாகன குஷன் வேலைகள் மற்றும் கூரை வேலைகள் மற்றும் மோட்டார் வாகன தகடுப்பூச்சு வேலைகள், சிலிண்டர் போரின் கிரன்த் வெட்டுதல், சக்கர ஒழுங்கமைத்தல்
3) வாகனங்களின் சேர்விசு வேலைகள்
4) அலுவலக இயந்திராதிகளைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விசு செய்தல் (தட்டச்சு, கூட்டல் இயந்திரம், ரோணியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் கணனி இயந்திரம், நேரக்குறிப்பு இயந்திரம் போன்றவை)
5) கதிரைகளை இழைத்தல் மற்றும் தளபாடங்களைப் புதுப்பித்தல் (மரச் சாமான்கள் மற்றும் இரும்புச் சாமான்கள், கதிரைகள் அலுமாரிகள் போன்றவை)
6) பட்டறை வேலைகள், வெல்டின் வேலைகள் ஹைட்ரொலிக் ஹோஸ் புதுப்பித்தல்கள்
7) மின்சார திருத்த வேலைகள் (AC/ DC - வாகனம்)
8) மின்சார திருத்த வேலைகள் (அலுவலகம்/ இல்லம்)
9) வளி சீராக்கல், குளிரூட்டிகள் புதுப்பித்தல் மற்றும் சேர்விசு (அலுவலகம்/ இல்லம்)
10) வளிசீராக்கி, குளிரூட்டிகளைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விசு (வாகனங்கள்)
11) அலுமினிய ஆக்கங்கள்
12) பூங்கா அலங்கரிப்புக்கள்
13) அச்சுச் சேவைகளை வழங்கல் (டிஜிட்டல், ஓர்ப்செட்)
14) தீயணைப்பு உபகரணங்களை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் சேர்விசு செய்தல்
15) உபசரிப்புச் சேவைகளை வழங்கல்
16) நில அளவை நடவடிக்கைகள்
17) ஒலிபெருக்கி இயந்திரங்கள்/ மின் மற்றும் மின்னியல் உபகரணங்களை வாடகைக்கு வழங்கல்
18) பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்கல் (கார், வேன், கெப்வாகனம், பஸ்கள்)

**03 நிர்மாணத்துறை ஒப்பந்தங்கள்**

1) நிர்மாணத்துறை ஒப்பந்தங்கள் — ரூபா 100,000.00 வரை
2) நிர்மாணத்துறை ஒப்பந்தங்கள் — ரூபா 100,000.00 முதல் 250,000.00 வரை
3) நிர்மாணத்துறை ஒப்பந்தங்கள் — ரூபா 250,000.00 முதல் 500,000.00 வரை
4) நிர்மாணத்துறை ஒப்பந்தங்கள் — ரூபா 500,000.00 மேல்

(மேற்படி பிரிவில் பதிவு செய்யப்பெற்றுள்ளவர்களிற்கு மாத்திரம்)

இதற்கு மேலதிகமாக 10% முத்திரை வரியும் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அது கேள்வி வைப்புத்தொகைக்கு அப்பாற்பட்டதாகும். மேற்படி கேள்வி தொடர்பான இறுதித் தீர்மானம் கொடகவெல பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், மேலதிக விபரங்களிற்காக இலக்கம் 045-2240031 தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.

**திஸ்னா நில்மினி ரத்னாயக்க**
**செயலாளர் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி**
**கொடகவெல பிரதேச சபை.**

**2023.09.25ஆம் திகதி**
**கொடகவெல பிரதேச சபையில்**

# கல்பிட்டி பிரதேச சபை

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

01. 2024ஆம் வருடத்தில் கல்பிட்டி பிரதேச சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. சகல விண்ணப்பங்களும் செயலாளர், கல்பிட்டி பிரதேச சபை, கல்பிட்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

❖ **வழங்கல்கள் - பதிவுக் கட்டணம் (ஒரு உருப்படிக்கு ரூபா 1000.00)**

(i) அலுவலக உபகரணங்கள்/ தளபாடங்கள்/ உருக்குத் தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்
(ii) காகிதாதிகள்/ காகிதங்கள்/ அப்பியாசப் புத்தகங்கள்/ பாடசாலைப் பைகள்/ தண்ணீர்ப் போத்தல்கள் உட்பட ஏனைய காகிதாதிகள்
(iii) மின் உபகரணங்கள் மற்றும் வீதி விளக்கு உபகரணங்கள்
(iv) கொங்கிரீட் கம்பித் தூண்கள், ஹியூம் குழாய்கள்/ கொங்கிரீட் கம்பித் தூண்கள்/ ஏனைய கொங்கிரீட் பொருட்கள்
(v) டயர், டியூப், பெற்றரிகளை வழங்குதல் மற்றும் மீள்நிரப்பல்
(vi) வாகனங்கள், இயந்திராதிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
(vii) கணனி இயந்திரங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் (அச்சுப்பொறி/ யூபிஎஸ் / டோனர் / கார்ட்ரிச் / ரிபன் போன்றன)
(viii) இலத்திரனியல் தட்டச்சு இயந்திரம்/ புகைப்படப் பிரதி இயந்திரங்கள்/ தொலைநகல் இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள்/ டுப்ளோ இயந்திரங்கள்/ விரல் ரேகை பதிவு இயந்திரம்/ கணித்தல் பொறி ஏனைய துணைப்பாகங்கள் வழங்குதல்
(ix) விளையாட்டுப் பொருட்கள்/ முன்பள்ளி உபகரணங்கள்
(x) சீருடைகள்/ பாதணிகள்/ திரைச் சீலைகள்
(xi) நூலகப் புத்தகங்கள்/ சஞ்சிகைகள்/ செய்தித் தாள்கள்
(xii) கொங்கிரீட் கற்கள்/ மணல்/ ப்ளொக் கற்கள்/ பொறியியலாளர் செங்கற்கள்/ பிரிமிக்ஸ்/ கட்டிடங்கள் மற்றும் வீதி நிர்மாணத்திற்கான பொருட்களை வழங்குதல்
(xiii) சுகாதார/ துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (ஈர்க்கில், தும்புத்தடிகள், தூரிகைகள், சிறிய காற்றுடைப்பம், லைசோல், கம்பூட், குப்பைத் தொட்டிகள், கையுறைகள், வாய்க் கவசங்கள், பிரம்புக் கூடைகள் மற்றும் மழை அங்கிகள், ஹார்பிக், புல் வெட்டும் இயந்திரம் போன்றன)
(xiv) கன்று வகைகள்
(xv) தார் மற்றும் கோலாஸ்
(xvi) நாய்களுக்கான கழுத்துப்பட்டிகள்
(xvii) நினைவுச் சின்னங்கள்
(xviii) பழைய செய்தித்தாள்களைக் கொள்வனவு செய்தல்
(xix) கிரவல் வழங்குநர்கள்
(xx) திகதி முத்திரைகள் / இறப்பர் முத்திரைகள் வழங்குதல்
(xxi) எரிபொருள்
(xxii) எரிவாயு சிலிண்டர்கள்
(xxiii) சீமெந்து, இரும்பு, பிணைச்சல்கள், கம்பி வகைகள் பூச்சு வகைகள், கூரைத் தகடுகள், ஆணி வகைகள் மற்றும் ஏனைய நிர்மாணப் பொருட்கள்
(xxiv) வீதிப் பராமரிப்பு உபகரணங்கள் (மண்வெட்டி/ சவல்/ ரேக்கைகள் / அரிவாள் / அரிவாள் மனைகள்)
(xxv) உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் தயாரித்தல்

❖ **சேவைகள் - பதிவுக் கட்டணம் (ஒரு உருப்படிக்கு ரூபா 1000.00)**

(i) அச்சு சேவைகளை வழங்குதல்
(ii) வாகன திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல்
(iii) வாகனங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் உபகரணங்களை வழங்குதல்
(iv) வாகனங்களுக்கான குஷன் இடுதல், கார்பட் இடுதல், கென்வஸ் மறைப்புகளை வழங்குதல்
(v) வாகனங்களுக்கான வீல் எலைன்மென்ட், வீல் பெலன்ஸ் மற்றும் டயர்களை மாற்றுதல்
(vi) வாகனங்களுக்கான தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள்
(vii) வாகனங்களுக்கான வளிச்சீராக்க வேலைகள்
(viii) வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்
(ix) மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்கல்
(x) வாடகை அடிப்படையில் போக்குவரத்து வசதிகளை வழங்கல்
(xi) அனைத்து உருக்கியொட்டும் வேலைகள் மற்றும் திருத்தவேலைகள்
(xii) புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள்
(xiii) டயர்களை மீள் நிரப்புதல்
(xiv) வளிசீராக்கி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் பொருத்துதல் (கட்டிடம்)
(xv) வீச்சுக் கத்தி, கத்திகள், மண்வெட்டிகள், வெட்டுக் கத்திகள், சாக்கடைச் சவல்கள் உட்பட விவசாய மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்களின் திருத்தவேலைகள்
(xvi) கிரவல் போக்குவரத்து செய்வோர் (சபையின் அதிகாரப் பிரிவிலுள்ள கிளை வீதிகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்காக)
(xvii) 8 தொன்னுக்கு மேற்பட்ட வீதிகளை அழுத்தும் உருளை இயந்திரங்கள், மோட்டார் கிரேடர்கள் மற்றும் ஏனைய இயந்திராதிகளை வழங்குதல்
(xviii) விழாக்களுக்குத் தேவையான மேடைகள், ஒலிபெருக்கி இயந்திரங்கள், மின்னொளி, பிளாஸ்டிக் கதிரைகள், கூடாரங்கள் உட்பட ஏனைய விழாப் பொருட்களை வழங்குதல்
(xix) விழாக்களின் போது உணவு பான வகைகளை வழங்குதல்
(xx) அறிவித்தல் பலகைகள், கட்டவுட்டுக்கள்/ பெனர்கள்/ ஸ்டிக்கர்கள்/ டின்டட் செய்தல்
(xxi) நில அளவை வேலைகள்
(xxii) பாவித்த பழைய செய்தித்தாள்கள், வெற்று போத்தல்கள், பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்தல்.
(xxiii) அபாயகரமான மரங்களை வெட்டி வீழ்த்தும் வேலைகள் மற்றும் மரங்களை இழுத்து செல்லல்
(xxiv) சட்ட நடவடிக்கைகளுக்கான சட்ட ஆலோசகர்கள் மற்றும் மொழி பெயர்ப்பாளர்கள்
(xxv) அலுவலக உபகரண திருத்தவேலைகள் (கதிரை, மேசை மற்றும் கபினெட்)
(xxvi) கணனி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் கணனி மென்பொருள்களை அமைத்துப் பெற்றுக்கொள்ளல்
(xxvii) மின்சார உபகரணங்கள் மற்றும் நீர் பம்பிகளின் திருத்தவேலைகள்
(xxviii) சபையின் ஆதனங்களை காப்புறுதி செய்தல்

❖ நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் (வீதி நிர்மாணங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள்)
வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்

❖ (ICTAD OR CIDA) – செயல் நிலையிலுள்ள ஒப்பந்தக்காரர்கள்

| விலை வரையறைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 500,000.00 ரூபாவுக்குக் குறைந்த வேலைகள் - | ரூபா 1000.00 |
| 1,000,000.00 ரூபாவுக்குக் குறைந்த வேலைகள்- | ரூபா 2000.00 |
| 5,000,000.00 ரூபாவுக்குக் குறைந்த வேலைகள்- | ரூபா 2500.00 |
| 5,000,000.00 ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகள் - | ரூபா 3000.00 |

**03. நிபந்தனைகள்**

01. விண்ணப்பப் படிவங்கள் 2023-09-25ஆம் திகதி முதல் 2023-10-25ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வழங்கப்படும்.
02. பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பிரதேச சபையினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் அல்லது இங்கு தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் A4 அளவில் விண்ணப்பித்தல் வேண்டும்.
03. பதிவுக் கட்டணத்தை ரொக்கப் பணமாக அல்லது காசோலை மூலமாக மட்டும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் காசோலைகளை செயலாளர், கல்பிட்டி பிரதேச சபை, கல்பிட்டி எனும் பெயரில் எழுதுதல் வேண்டும்.
04. ஒவ்வொரு வழங்கல் / சேவைக்காகவும் வெவ்வேறான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய வழங்கல் மற்றும் சேவையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குநர்களுக்கு புறம்பாக வேறு நபர்களிடமிருந்தும் விலைமனுக்கள் கோரப்பட்டு கொள்வனவு உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
06. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் விலைமனுக்களை சமர்ப்பிக்காத அல்லது நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் பொருட்களை வழங்காத அல்லது விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது நிபந்தனைகளைப் பின்பற்றாத வழங்குநர்களின் பதிவு முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
07. வியாபாரப் பதிவு செய்தல் சான்றிதழின் பிரதியொன்றை பதிவு செய்யும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.
08. VAT பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. சகல விண்ணப்பங்களும் 2023-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
10. விலைகளைக் கோருகையில் மூன்று முறைக்கு மேல் பதிலளிக்காவிட்டால் உங்கள் பதிவு இரத்துச் செய்யப்படும்.
11. மோட்டார் வாகன திருத்தவேலைகள் செய்வதற்கு குறித்த சேர்விஸ் நிறுவனத்தை பதிவு செய்யும் போது மோட்டார் வாகன திருத்தவேலைகள், டின்கரிங் செய்தல், பெயின்ட் செய்தல், சேர்விஸ் செய்வதற்காக பின்வரும் விடயங்கள் பற்றி பரீட்சித்துப் பார்த்து தகைமையுள்ள நிறுவனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்படும்.

- தலைமையகத்திலிருந்து குறைந்த தூரத்திலிருத்தல்.
- கராஜ் ஒன்றிற்கான இடப்பரப்பு
- கராஜ்ஜிற்குச் சொந்தமான கருவி மற்றும் இயந்திராதிகள்
- கராஜ்ஜிற்குச் சொந்தமான உதிரிப்பாகங்களை களஞ்சியப்படுத்தும் வசதிகள்
- வேலையாட்கள் (அனுபவமுள்ளவர்கள் மற்றும் திறமையுள்ளவர்கள்)
- திருத்தவேலைக்காக அனுப்பப்படும் வாகனங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தினுள் வழங்கல் உத்தியோகத்தர் அல்லது பிரதான முகாமைத்துவ உதவியாளரிடம் விசாரித்தறியலாம்.

**மங்கள ராமநாயக்க,**
**செயலாளர்,**
**கல்பிட்டி பிரதேச சபை.**
**விசாரணைகள்: 032-2260274, 032-2260275**
**திகதி: 2023-10-03**

**கல்பிட்டிய பிரதேச சபை**
**வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் - 2024**

**01. பிரத்தியேக விபரங்கள்**

a) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :..............................................
b) முகவரி :..............................................................................
c) தொலைபேசி இலக்கம்: நிலையானது :.............. கையடக்கம்:..
d) தொலைநகல் இல.: .......................................................
e) மின்னஞ்சல் முகவரி:.....................................................
f) பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் விடயம் மற்றும் இலக்கம்: ....
g) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் இலக்கம்: ................................
(சான்றிதழின் புகைப்படப் பிரதியை இணைக்கவும்) ....................
h) வெட் வரி இலக்கம் (புகைப்படப் பிரதியை இணைக்கவும்):- ......
i) கடன் அடிப்படையில் வழங்க இயலுமான அதி உச்ச கால எல்லை:
j) இதற்கு முன் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியிருந்தால் அதுபற்றிய விபரங்கள்
1. ......................................................................
2. ......................................................................
3. ......................................................................

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் பிழையற்றவை என உறுதிப்படுத்துகிறேன். இதற்கமைய எமது நிறுவனத்தை 2024ஆம் வருடத்தில் வழங்குநராகப் பதிவு செய்து கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி:.............. ........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம் (முத்திரை)

2) அலுவலக பயன்பாட்டிற்கு
விண்ணப்ப இலக்கம்:......................
வழங்குநரொருவராகப் பதிவு செய்து கொள்ளப்பட்டுள்ளது.
தொகை:................................ பற்றுச்சீட்டு இலக்கம்: ........
தீர்மானம்:.............................. ........................................
வழங்கல் உத்தியோகத்தர்
திகதி:.................... ..................................................
செயலாளர் - (உத்தியோகபூர்வ முத்திரை)

**கல்பிட்டிய பிரதேச சபை**
**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் - 2024**

**02. பிரத்தியேக விபரங்கள்**

a) விண்ணப்பதாரரின் முழுப் பெயர்: ..............................................
b) முகவரி : ......................................................c) தொலைபேசி இலக்கம்: நிலையானது ........... கையடக்கம்:-.......d) தொலைநகல் இல.
e) மின்னஞ்சல் முகவரி..................................:-...............................
f) பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் விடயம் மற்றும் இலக்கம்: .............

| துறை | தரம் |
|---|---|
| Building | ............................................ |
| Highway | ............................................ |
| Bridge | ............................................ |

g) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் இலக்கம் ........:-................................
(சான்றிதழின் புகைப்படப் பிரதியை இணைக்கவும்) ............................
h) வெட் வரி இலக்கம்
(சான்றிதழின் புகைப்படப் பிரதியை இணைக்கவும்):-............................
(i) நிலையான சொத்துக்களின் பெறுமதி (ரூபா)...
j) அங்கீகரிக்கப்பட்ட வங்கிக் கடன் எல்லை........:-................................
k) கடந்த 03 வருடங்களினுள் நிறைவு செய்துள்ள 10 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகள் மூன்றைக் குறிப்பிடுங்கள்.
1. ......................................................................
2. ......................................................................
3. ......................................................................

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் பிழையற்றவை என உறுதிப்படுத்துகிறேன். இதற்கமைய எமது நிறுவனத்தை 2024ஆம் வருடத்தில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்து கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி:.............. ..............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம் (முத்திரை)

3) அலுவலக பயன்பாட்டிற்கு
விண்ணப்ப இலக்கம்:............................
ஒப்பந்தகாரரொருவராகப் பதிவு செய்து கொள்ளப்பட்டுள்ளது.
தொகை:................................ பற்றுச்சீட்டு இலக்கம்:.................
தீர்மானம்:.............................. ..................................................
வழங்கல் உத்தியோகத்தர்
திகதி:.................... ..........................................................
செயலாளர் - (உத்தியோகபூர்வ முத்திரை)

# இலங்கை தேசிய வைத்தியசாலை
## கொழும்பு-10
## பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலையை நிறைவேற்றுவதற்காக ICTAD இல் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2023.10.04 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து 2023.10.24 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் விலைமனு படிவ மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், பொது நிருவாக அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கையேற்கப்படலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை 2023.10.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்னராக வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்த பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இந்த வேளையில் சமுகமளிக்கலாம்.

| இல. | வேலை | மதிப்பீடு செய்யப் பட்டுள்ள ஆகுசெலவு | தரம் | மீளளிக்கப் படும் விலைமனுப் பிணை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | தாதிமார் பயிற்சி பாடசாலை சமையலறையின் புதுப்பித்தல் (AC-1/49/2022) | 4,585,221.00 | விஷேத்துவம்: கட்டிடம். தரம்: சி-8 அல்லது மேற்பட்டது | 69,000.00 | 2,500.00 | விலைமனு ஆவணங்களை கையேற்கும் வேளையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனுப் பெறுமதியானது 5,000,000 ரூபாவிற்கு மேற்படின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடமிருந்து சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**பிரதி பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு-10.**

# தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
## கைத்தொழில்கள் அமைச்சு
## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)
### இரத்தினபுரியிலுள்ள பிராந்திய அலுவலகத்திற்கு 80KVA Standby டீஸல் மின்பிறப்பாக்கியை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல்
**விலைக்கோரல் இல. NGJA/18 / 51 /2023**

இரத்தினபுரியிலுள்ள பிராந்திய அலுவலகத்திற்கு 80KVA Standby டீஸல் மின்பிறப்பாக்கியை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதலுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | விலைமனுதாரரின் தகைமை | மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணம் | விலைக்கோரல் பிணை முறி |
|---|---|---|---|---|
| NGJA/18/51/ 2023 | இரத்தினபுரியிலுள்ள பிராந்திய அலுவலகத்திற்கு 80KVA Standby டீஸல் மின்பிறப்பாக்கியை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல் | CIDA - EM4 அல்லது அதற்கு மேல் மின்சாரம் மற்றும் பொறிமுறை சேவைகள் | ரூபா 3,500.00 (வரிகள் உட்பட) | ரூபா 100,000.00 119 நாட்கள் |

**நிபந்தனைகள்**

(i) தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைகள் கோரப்படும். (NCB)

(ii) மீளளிக்கப்படாத ரூபா 3,500.00 (வரிகள் உட்பட) தொகையை 2023-10-04ஆம் திகதி முதல் 2023-10-24ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் காசாளருக்குச் செலுத்தியதன் பின் கொழும்பு-03, அல்பிரட் ஹவுஸ் கார்டன், ''மெக்சன்ஸ் டவர்'', 12ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் (பெறுகை) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

(iii) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-10-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, இல. 12, மெக்சன்ஸ் டவர், அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது 4ஆம் தளத்திலுள்ள வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இரத்தினபுரியிலுள்ள பிராந்திய அலுவலகத்திற்கு 80KVA Standby டீஸல் மின்பிறப்பாக்கியை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்துதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களுடன் மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு குறைந்தபட்சம் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் காலம் சகிதம் வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாதம் / வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (2023-10-25 முதல் 2024-02-24ஆம் திகதி வரை)

(V) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் 7ஆம் மாடியிலுள்ள கேட்போர்கூடத்தில் 2023-10-25ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் மு.ப. 10.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்படும். இந்த விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

(VI) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் 7ஆம் மாடியிலுள்ள கேட்போர்கூடத்தில் 2023-10-10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும்.

**மேலதிக விபரங்களுக்கு: உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) - 071 536 2 536 / 0112 332 197**
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை,**
**இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03, இலங்கை.**
**தொலைபேசி: 0112-329295, 2325364, 2390645-8 தொலைநகல்: 0112320758, 011-2332197**
**இணையதளம்: www.ngja.gov.lk**

# கல்முனை மாநகர சபை
## குத்தகை கேள்வி கோரல் அழைப்பு - 2024
**கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், வாகனத் தரிப்பிடங்கள் என்பவற்றுக்கான 2024 ஆம் ஆண்டிற்கான குத்தகை விடுவதற்கான கேள்வி கோரல்கள் அழைக்கப்படுகின்றன.**

| விடயங்கள் | இடம் | குறியீட்டு இல | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | கேள்வி வைப்பு | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 01. இறைச்சிக் கடை | | | | | |
| I. மாட்டிறைச்சிக் கடை | | | | | |
| மாட்டிறைச்சிக் கடைகள் | கல்முனை பொதுச் சந்தை | KMC/2024/KM/BS/01 | 1,000.00 | 10,000.00 | 321,000.00 |
| II. ஆட்டிறைச்சிக் கடைகள் | | | | | |
| ஆட்டிறைச்சிக் கடை இல-01 | கல்முனை பொதுச் சந்தை | KMC/2024/KM/MS/01 | 1,000.00 | 10,000.00 | 210,000.00 |
| ஆட்டிறைச்சிக் கடை இல-02 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/2024/KM/MS/02 | 1,000.00 | 10,000.00 | 160,000.00 |
| III. கோழி இறைச்சி | | | | | |
| கோழி இறைச்சிக் கடை இல.01 | கல்முனை பொதுச் சந்தை | KMC/2024/KM/CS/01 | 1,000.00 | 5,000.00 | 100,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல.03 | கல்முனை பொதுச் சந்தை | KMC/2024/KM/CS/02 | 1,000.00 | 5,000.00 | 100,000.00 |
| கோழி இறைச்சிக் கடை இல.03 | நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | KMC/2024/NM/CS/03 | 1,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 02. சந்தைகள் | | | | | |
| I. பொதுச் சந்தைகள் | | | | | |
| கல்முனை பொதுச் சந்தை | கல்முனை நகர் | KMC/2024/KM/PM/01 | 1,000.00 | 25,000.00 | 5,201,000.00 |
| நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | நற்பிட்டிமுனை | KMC/2024/KM/FM/01 | 1,000.00 | 15,000.00 | 301,000.00 |
| II. மீன் சந்தை | | | | | |
| மீன் சந்தை | கல்முனை பொதுச் சந்தை | KMC/2024/NM/PM/01 | 1,000.00 | 25,000.00 | 1,100,000.00 |
| 03. வாகனத் தரிப்பிடங்கள் | | | | | |
| வாகனத் தரிப்பிடம் - A | பாண்டியிருப்பு மருதமுனை, பெரிய நீலாவணை - கடற்கரை வீதி தவிர்ந்த அனைத்து வாகனத் தரிப்புகளும் | KMC/2024/MM/VP/01 | 1,000.00 | 25,000.00 | 1,050,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - B | கல்முனை, கல்முனை நகர், நற்பிட்டிமுனை - அனைத்து வாகனத் தரிப்புகளும் | KMC/2024/KM/VP/02 | 1,000.00 | 25,000.00 | 5,595,000.00 |
| வாகனத் தரிப்பிடம் - C | சாய்ந்தமருது - அனைத்து வாகன தரிப்புகளும் | KMC/2024/SM/VP/03 | 1,000.00 | 25,000.00 | 500,000.00 |

1. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் வேலை நாட்களில் 2023.10.04ஆம் திகதி முதல் 2023.10.18 மே் திகதி பி.ப 3.00 மணி வரை மாநகர சபையின் நிதிப் பிரிவில் பெற்றுக்கொள்வதோடு, கேள்வி வைப்புத் தொகையினையும் குறித்த காலப்பகுதியில் நிதிப்பிரிவில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023.10.19 ஆம் திகதி 2.30க்கு முன்னர் கிடைக்க கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக மாநகர சபையின் ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உரியவாறு சமர்ப்பிக்க வேண்டும். அதே தினம் பி.ப 3.00 மணிக்கு அக்கேள்விகள் அனைத்தும் திறக்கப்படும்.
3. மேலதிக தகவல்கள் தேவைப்படின் மாநகர சபை ஆணையாளரின் 067-2229275 தொலைபேசி அல்லது கணக்காளரின் 067-2224588 தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
4. முத்திரையிட்ட விலைமனுக்களின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பம் செய்யும் விலைமனுக்களின் குறியீட்டு இலக்கத்தினை அவசியமாக எழுத வேண்டும்.
5. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் கேள்வி தொகையில் 60%ஐ பணமாகவும் 40%ஐ மத்திய வங்கியனால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வங்கியின் உத்தரவாதக் கடிதமாகவும் (Letter of Guarantee) மாநகர சபையின் ஆணையாளருக்கு முகவரியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
6. மேற்படி தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் ஒரு வார காலத்தினுள் நிபந்தனை 5 இல் குறிப்பிடப்படுள்ள விடயத்தை நிறைவேற்றி ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திட வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7. ஒவ்வொரு குத்தகைக்கும் தனித்தனியே விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும்.
8. எந்த ஒரு கேள்வி கோரலிலும் கேள்விச்சபையின் முடிவே இறுதியானதாகும்.

**ஏ.எல்.எம். அஸ்மி (SLAS-I)**
**தலைவர் - குத்தகை கேள்விச்சபை**
**ஆணையாளர் - கல்முனை மாநகர சபை.**
**04.10.2023**

## பெயர் மாற்றம்

தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்ட எரமினியாய பிரதேச செயலகம் பிரிவில் 283, போகம் 19, எரெமினியாய கிராம சேவக பிரிவில், அங்குனுகொலபெலஸ்ஸ முகவரியில் வசிக்கும் ரதம்பல கமகே குணதாச ஆகிய நான், இன்று முதல் ரதம்பல கமகே பேமதாச என்று பாவிப்பதாக இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசுக்கும் அதன் பிரஜைகளுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

